# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 21 ஞாயிற்றுக்கிழமை (07.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 293

ம் கோ RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சர்வதேசத்தை ஏமாற்றும் இலங்கை அரசாங்கம்!

## ஐ.நா. துணைச் செயலரிடம் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, நிரந்தர சமாதானம் உருவாகி தற்போது அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் சர்வதேச நாடுகளை ஏமாற்றிவருவதாக யாழ். வந்த ஐ.நாவின் துணைச் செயலாளரிடம் யாழ்.மாவட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 32 போராளிகள் இம்மாத இறுதியில் விடுதலை

(கொழும்பு)

புனர்வாழ்வு பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் சிலர் எதிர்வரும் ஒக்ரோபர் 30-ம் திகதி சமூகத்துடன் இணைக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியராச்சி தெரிவித்துள்ளார்.

32 முன்னாள் போராளிகளே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளனர். (24ஆம் பக்கம் பார்க்க)

## சீன தம்பதிகள் மின்னல் தாக்கி பலி

(கொழும்பு)

ஹப்புத்தளை தம்பதென்ன பிரதேசத்தில் நேற்று மின்னல் தாக்கியதில் சீனத் தம்பதிகள் உயிரிழந்துள்ளனர்.

தம்பதென்ன லிப்டன் சீட் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவத்தில் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் சீன சுற்றுலாப் பயணிகளே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (எ-8)

## ஐ.நாவின் துணைச் செயலாளர் நேற்று யாழ்ப்பாணம் விஜயம்



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் துணைச் செயலாளர் நாயகமும் யு.என்.டி.பியின் பிராந்தியப் பணிப்பாளருமான அஜெய் சிப்பர் மற்றும் இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி சுபைனோ நண்டி உள்ளிட்ட 6 பேர்கொண்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்தக் குழுவினர் நேற்று முற்பகல் 9 மணியளவில் விமானம் மூலம் பலாலியை வந்தடைந்தனர். (23ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலி காணி விவகாரம்

## இராணுவத்தினர் பொய் கூறுவதாக பிரதேச சபைக்கு அரச அதிபர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான காணியை தான் எவருக்கும் வழங்கவில்லை என்றும் அவ்வாறு காணிகளை வழங்கும் அதிகாரம் தனக்கு இல்லை எனவும் யாழ்.அரச அதிபர் தனக்கு அறிவித்துள்ளதாக நல்லூர் பிரதேசசபைத் தலைவர் தெரிவித்தார்.

தான் வழங்கியதாக இராணுவம் கூறுவது பொய் எனவும் அரச அதிபர் தெரிவித்தாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் கூறினார்.

இதேவேளை திருநெல்வேலி காணி விவகாரம் தொடர்பில் இராணுவத்தினரிடம் உரிய ஆவணம் இல்லாமையால் எதிராளிகள் சார்பில் இராணுவத்தினர் எவரும் பொலிஸ் நிலையத்திற்கு சமூகமளிக்கவில்லை என நல்லூர் பிரதேசசபை தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இராணுவத்தினரின் அடாவடித்தனத்தின் உச்சக்கட்ட செயற்பாட்டினைத் தொடர்ந்து நல்லூர் பிரதேசசபையினர் இது தொடர்பில் (23ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. வெளியிட்ட அறிக்கையை வாபஸ்பெற்றார் துணைச் செயலர்

(யாழ்ப்பாணம்)

மெனிக் பாம் முகாம் மூடப்பட்டமை தொடர்பில் ஐ.நா பாராட்டி வெளியிட்ட அறிக்கையை வாபஸ் பெறுவதாக ஐ.நாவின் துணைத் செயலாளர் நாயகம் அஜெய் சிப்பர் தெரிவித்தார்.

வவுனியா மெனிக் பாம் முகாமை அரசு மூடியதற்கு ஐ.நா வரவேற்று அறிக்கைவிட்டது.

ஆனால் மெனிக்பாம் முகாம் மூடப்பட்டு முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களை வைத்து சீனியாமோட்டை மற்றும் சூரியபுரம் காட்டுப் பகுதியில் புதிய முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனை ஐ.நா எதிர்க்காதது ஏன் என யாழ்ப்பாண சிவில் பாதுகாப்புக் குழுவினர் கேள்வி எழுப்பினர்.

அந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள்கூட செய்துகொடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரியப்படுத்தினர்.

இதனைக் கேட்டறிந்த ஐ.நா. துணைச் செயலர், தாம் வெளியிட்ட அறிக்கையை வாபஸ் பெறுவதாக தெரிவித்தார். (எ-6)

## ஆஸி செல்ல முற்பட்ட 2 ஆயிரம் பேர் கைது

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமான முறையில் படகு மூலம் செல்ல முயற்சித்த 2 ஆயிரத்து 409 பேர் இந்த ஆண்டில் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரையில் 47 படகுகள் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட (24ஆம் பக்கம் பார்க்க)

## கேப்பாபிலவு மக்களுக்கு தமிழ்க் கூட்டமைப்பு உதவி

முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவு பிரதேசம் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருப்பதால், தேசிய பாதுகாப்பை முன்னிட்டு அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களை சீனியாமோட்டையில் குடியேற்றியிருப்பதாக அரசாங்கம் கூறியுள்ளது.

அந்த மக்களுக்காக நிரந்தர வீடுகள், தொழில் வாய்ப்புகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ள போதும்; மனிக்பாம் இடைத்தங்கல் முகாமைப் போன்று அரசாங்கம் தங்களை சீனியாமோட்டையில் தற்காலிக முகாமில் குடியமர்த்தியிருப்பதாகவே அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

இப்போது அங்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளபோதிலும் மாணவர்களுக்கான போக்குவரத்து பொதுவான குடிநீர் வசதிகளுடன் நிரந்தர வீடுகள் ;தொழில் வாய்ப்புகள் இன்னும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

தமது சொந்த காணிகளுக்கு செல்வதையே தாங்கள் விரும்புவதாக அந்த மக்கள் தெரிவித்துள்னர்.

சீனியாமோட்டையில் உள்ள மக்களுக்கு அரசாங்கம் நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது. எனினும் அவை அவர்களுக்கு போதாது என்று தாங்களும் நேற்று சனிக்கிழமை நிவாரணப் பொருட்களை வழங்கியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். (24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸ் மீதான வழக்கு 12-ம் திகதி விசாரணைக்கு

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது வழக்கு எதிர்வரும் 12ஆம் திகதி தொடங்கும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இலங்கையின் பாரம்பரிய கைத்தொழில்கள் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா கடந்த 1986ஆம் ஆண்டு சென்னையில் இருந்தபோது ஒரு கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியாக சேர்க்கப்பட்டார்.

இது தொடர்பான விசாரணைக்கு அவர் ஆஜராகாததால் அவரை கைது செய்ய சென்னை நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

ஆனால் இலங்கைக்கு வந்து விட்டதால் அவரை கைது செய்ய முடியவில்லை.

இதையடுத்து 1996ல் அவர் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். இந்த நிலையில் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவையடுத்து டக்ளஸ் தேவானந்தா சார்பில் செசன்ஸ் கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில் தேடப்படும் குற்றவாளியாக அறிவித்ததை ரத்து செய்ய வேணடும் என்றும் கொலை வழக்கு (24ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு நோயினால் மாணவன் பலி மேலும் 7 பேர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் செம்பியன் வீதியில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த மேலும் 7 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

'கொக்குவில் செம்பியன் வீதியைச் சேர்ந்த ஜெயக்குமார் கீர்த்தியன் (வயது-17) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

இவ்வாறு டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டவர்களில் மேலும் 2 பாடசாலை மாணவர்கள் மற்றும் ஒரு கைக்குழந்தையும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

டெங்கு நோய் பீடிக்கப்பட்ட எட்டுப் பேரில் 3 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளதோடு அங்கு மேலும் பலருக்கும் இலேசான காய்ச்சல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இவ் டெங்கு (23ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பே சிவம். ஒன்றே குலம். ஒருவனே தேவன்."

ஸ்ரீவித்தியா குருகுலம்

வழங்கும், ஆசிரியர் முத்துலிங்கத்தின்

'EASY ENGLISH'

* உத்தியோகத்தர்க்கு
* A/L படித்தவர்க்கு
* O/L மாணவர்க்கு
* உயர்கல்வி மாணவர்க்கு
* மகளிர்க்கு
* A/L மாணவர்க்கு
* பிரத்தியேக வகுப்புக்கள்

குருகுல மரபு :
(I) கல்வி இலவசம்
(II) குரு, 'தந்தையும்' 'தாயும்' ஆனவர்.
(III) விரும்புவோர், குருதட்சணை

(இ)

விபரங்கள் + பெயர்பதிவு 773212711 மூலம்


# கிணற்றில் வீழ்ந்து குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றினுள் தவறி வீழ்ந்த குடும்பப் பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று காலை 6.30 மணியளவில் மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்தவரும் 5 பிள்ளைகளின் தாயாருமான பரராஜசிங்கம் சிறிகாந்தமலர் (வயது 53) எனும் குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண்ணுக்கு வலிப்பு நோய் காணப்படுவதாகவும் இந்நோயினால் பல தடவைகள் குறித்த பெண் உயிராபத்துக்களினை எதிர் நோக்கியதாகவும் குறித்த சம்பவம் வீட்டில் யாருமில்லாத நேரத்திலேயே இடம் பெற்றுள்ளதாகவும் அவருடைய உறவினர் ஒருவர் தெரிவித்தார். சடலத்தினை ஊர்காவற்றுறை நீதவான் எஸ். மகேந்திரராஜா பார்வையிட்டதோடு பொலிஸார் மேலதிக விசாரணைகளினை மேற்கொண்டு வருகின்றனர். (எ-4)


வேலையாட்கள் தேவை

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வீதிகளைப் புனரமைக்கும் கம்பனிக்கு கூலியாட்களும் மேசன்களும் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு: V.V. Karunaratne & Co
12A, Temple road,
Jaffna.
T.P. :- 0711712003

(590)



செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



விஜய் இயக்கத்தில்
சியான் விக்ரம், அனுஷ்கா, எமி ஜக்சன், சந்தானம்
மற்றும் பலர் நடிப்பில்

தாண்டவம்

10.30, 2.30, 6.30, 9.30 D.T.S



வீடு வாடகைக்கு தேவை

தனியார் நிறுவனம் ஒன்றிற்கு யாழ்ப்பாணம், நல்லூர், சுன்னாகம், அச்சுவேலி ஆகிய இடங்களில் போக்குவரத்து வசதியுடன் கூடிய வீடுகள் வாடகைக்கு தேவை.

தொடர்புகளிற்கு: 077 3627055
0777 069148

(570)



குடியிருப்பு காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் சூழலில் இல. 23, இராஜவீதியில் அமைந்த நிலப் பரப்பு 4-16குளி காணி யுடன் விற்பனைக்குண்டு. தரகர் மூலமான கோரிக்கை நிராகரிக்கப்படும். ஏற்கக் கூடிய விலைக்கோரிக்கையாளர்களுக்கு காணிக்குள் சென்று பார்வையிட வசதி செய்யப்படும். உத்தேசக் கொள்வனவு விலையை பரப்பு 1இக்கு தெரிவிக்கவும். மீண்டும் அளந்தே விற்பனை செய்யப்படும்.

0771464143
310421ab@gmail.com

(C-1239)



வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன்
வட்டுக்கோட்டையில்
வீடு வாடகைக்கு உண்டு.
Tel: 0727288795

(584)



SWANS OFFER TIMES Maitro PC SYSTEMS

SWANS Showroom

Dialog office Opposite, 162, Stanely Road, Jaffna.

Intel Dual core 2.93GHZProcessor
H61 Intel Chipset M/B
Ram 02 GB DDR 3
320GB SATA HDD
15.6" LED Monitor
Branded ATX Casing
DVD Writer
Keyboard & Mouse
8GB Flash Free
43500/= FREE

Intel Dual core 2.93GHZProcessor
H61 Intel Chipset M/B
Ram 02 GB DDR 3
500GB SATA HDD
15.6" LED Monitor
USB Optical Mouse
USB Optical Key board
Branded ATX Casing
DVD Writer
7.2 Dongle Free
46500/= FREE

SAMSUNG Rs.33999/=
SERIES 5000
TYPE LED T.V
SCREEN SIZE 55CM MEASURED DIAGONALLY
NATIVE RESOLUTION 1,920 X 1,080
RESOLUTION 1080P
DYNAMIC CONTRAST RATIO 3,200,
AUDIO
SOUND EFFECT SYSTEM SRS THEATERSOUND®
SOUND OUTPUT (RMS) 3W X 2
- SPEAKER TYPE DOWN FIRING +
POWER
ENERGY STAR COMPLIANT YES, EXCEEDS STANDARDS
ENERGY GUIDE LABEL ENERGY GUIDE LABEL
STANDBY POWER CONSUMPTION (W) 0.13

Intel Dual core2.93GHZProcessor
H61 Intel Chipset M/B
Ram 02 GB DDR 3
500GB SATA HDD
18.5" LED Monitor
Keyboard & Mouse
Branded ATX Casing
DVD Writer
7.2 Dongle Free
47500/= FREE

Intel Dual core 2.93GHZProcessor
H61 Intel Chipset M/B
Ram 02 GB DDR 3
500GB SATA HDD
24" LED Monitor
Key board & Mouse
Branded ATX Casing
DVD Writer
F4GB lash Free
56200/= FREE

Intel Dual core i3 3.06GHZProcessor
Intel H61 Chipset M/B
Ram 02 GB DDR 3
500GB SATA HDD
18.5" LED Monitor
Key board & Mouse Branded ATX Casing
DVD Writer
8GB Flash Free
52500/= FREE

Intel Dual core i3 3.06GHZProcessor
Intel H61 Chipset M/B
Ram 04 GB DDR 3
1000GB SATA HDD
18.5" LED Monitor
keyboard & mouse
Branded ATX Casing
DVD Writer
7.2 Dongle & Headphone Free
59500/= FREE



Study in GEORGIA (Europe)

Minimum qualification G.C.E. (O/L)

Hotel Management (Duration 1 year)
Rs. 350,000/- Course Fee

No IELTS No Interview No Bank Balance

flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk

FLEX Graphic



காணி விற்பனை

1. சாஸ்திரியார் வீதியில் பழைய வீடும் + கிணறும் அடங்கிய இரண்டு பரப்புக் காணியும்
2. இலந்தைக்குளம் வீதியில் (புளியடி) மூன்று பரப்புக் காணியும்
3. நாவலடியில் தென்னை மரங்களடங்கிய 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள:-
2224615,
2224616,
075 0427521

(572)


## மரண அறிவித்தல்

## அருணாசலம் இலட்சுமி



கிளிநொச்சி வன்னேரிக்குளத்தை வதிவிடமாகக் கொண்ட திருமதி அருணாசலம் இலட்சுமி நேற்று (06.10.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும், கயிலாயபிள்ளை (அதிபர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அமரர் சச்சிதானந்தன் மற்றும் வள்ளிநாயகி, பாலசிங்கம், துரைசிங்கம், கனகாம்பிகை, வசந்தி, வசந்தாதேவி, சற்குணநாதன், தயாமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், திலகவதி, இராசபாலாம்பிகை, புவனேந்திரன், ஜெயலட்சுமி, யோகேந்திரம், கமலநாதன், தெய்வேந்திரம், சுதாநந்தினி, கருணாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.10.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வன்னேரிக்குளம் திக்காய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: அ. கயிலாயபிள்ளை (மகன்)
அதிபர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

(C-1242)

## 2 ஆம் ஆண்டு நினைவு தினம்



பிறப்பு : 1962.06.12
இறப்பு : 2010.10.08
திதி : 08.10.2012

## அமரர் சுப்பிரமணியம் ஞானகணேஸ்

சென்றன ஆண்டுகள் இரண்டு - நெஞ்சில்
செந்தீ இன்னும் ஆறவில்லை - என்றும்
உந்தனை நினைந்து வாடுகின்றோம் - கணேஸா
வந்தெமை இன்னும் காணவில்லையே.

இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

- குடும்பத்தினர்

வெம்படி, உடுத்துறை, தாளையடி

(571)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய வாசிப்பு மாதத்தில் போட்டிப் பரீட்சை

(புளியம்பொக்கணை)

கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட கண்டாவளை பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிப்பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இப் பரீட்சையில் கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட மாணவர்களுக்கு பிரிவு ரீதியாக எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளி/ முருகானந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அத்துடன் கண்டாவளை பொது நூலகத்தில் அங்கத்தவராக இணைய விரும்புவோருக்கு தேசிய வாசிப்பு மாதமாகிய இம்மாதம் மட்டும் அங்கத்துவ பணமும் குறைக்கப்பட்டுள்ளதாக நூலகர் ஸ்ரீ. கோணநாயகம் அறிவித்துள்ளார். (அ-3-263)

## முதியோர் வாரத்தின் இறுதி நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களமும் கைதடி அரச முதியோர் இல்லமும் இணைந்து நடத்தும் முதியோர் வார நிகழ்வுகள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை வரை கைதடி சாந்தி நிலைய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதன் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட மாகாண சமூக சேவை திணைக்கள பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வடமாகாண தொழிற்துறை திணைக்கள பணிப்பாளர் க.சிவகரன், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் செல்வி ரி.தர்சினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து புங்கன்குளம் ஏழிசை நர்த்தனாலய மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. (அ-9)

## இராசி பலன்

07.10.2012

(புரட்டாதி 21, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

சப்தமி முன்னிரவு 9.07 மணிவரை

மிருகசீரிடம் காலை 6.07 மணிவரை

இராகுகாலம் 4.32-6.02 மணிவரை

சுபநேரம் 9.02-10.32 மணிவரை

**மேடம்** செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முனைவீர்கள், நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**இடபம்** உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், மாற்றினத்தவர்கள் மூலம் மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம்.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், உறவினர் வருகையால் சில செலவுகள் ஏற்படலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், சயன சுகக்குறைவான நாள்.

**சிங்கம்** வருமானம் திருப்தி தரும் விதத்தில் அமையும், பயணங்கள் எண்ணியபடியே கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், எடுத்த காரியங்கள் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**கன்னி** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழிலை விரிவுபடுத்த முயற்சி எடுப்பீர்கள், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள்.

**துலாம்** தடைகள் விலகி தனவரவுகள் பெருகும் நாள், நண்பர்கள் கைகொடுத்து உதவ முன்வருவர், தந்தை வழி உறவில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உணர்ச்சி வசப்படும் சூழ்நிலை உருவாகலாம்.

**விருச்சிகம்** ஆரோக்கியத்தில் கூடிய அக்கறை கொள்ள வேண்டிய நாள், தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, வரவும் செலவும் சமமாகும்.

**தனுசு** கௌரவமான நாள், உறவினர் சிலரை நேரில் சென்று சந்திப்பீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** உற்றார், உறவினர் உதவி செய்ய முன்வருவர், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், தொலைபேசி மூலம் மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** வாகன சுகமுண்டு, தொலைதூரத் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

வளவன்

## சிறுவர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் வடமாகாண கிராமிய சிறுவர்கள் பங்குபெறும் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (ந-6)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயரழுத்த மின்மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் இணைப்பு வேலைகளுக்காகவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புத்தூர், ஆவரங்கால், வாதரவத்தை,வீரவாணி, மந்திகை, சாரையடி, [illegible]பசிட்டி பிரதேசத்தின் ஒரு பகுதி, பருத்தித்துறை நகரப்பிரதேசம், உரும்பிராய், கோண்[illegible]வில், மருத்துவபீட பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், யாழ்.மாநகர சபைப்பகுதி, யாழ்.பட்டணப்பகுதி ஸ்ரான்லி வீதி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், பிரதான வீதி, கொன்வன்ட் பிரதேசம், பண்ணைப்பிரதேசம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## இ.ம.உ.ஆணைக்குழுவின் ஆணையாளர் வருகை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களில் ஒருவரான ரி.ஆனந்தராஜா நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தார்.

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் ஐ.நா.சபையின் துணைச் செயலாளர் அஜெய்சிப்பர் உள்ளிட்ட குழுவினர் சந்தித்து கலந்துரையாடியபோது ஆணையாளரும் உடனிருந்தார்.

இதன்பின்பு யாழ்ப்பாணத்திலுள்ள யு.என்.டி.பியின் அலுவலகத்தில் யு.என்.டி.பியின் பிராந்திய அலுவலர்களுடனான சந்திப்பிலும் ஆணையாளர் பங்கு கொண்டிருந்தார். (அ-6)

## வாரம் ஒரு தகவல்

### மூன்றாவது மனிதன்

"மனிதன் மூன்று வகையானவர்" என்று ஒரு பெரியார் கூறினார்.

அப்போது எதிரே நின்று கொண்டிருந்த ஒருவன் "எப்படி அது?" என்றான்.

அதற்கு அவர் ஒன்று "நீ யார்" என நினைக்கிறாயோ... அது.

இன்னொன்று "நீ யார்" என மற்றவர்கள் நினைக்கிறார்களோ... அது.

மூன்றாவது உண்மையில் "நீ யாரோ"... அது.

இந்த மூன்றாவது மனிதனை அடையாளம் கண்டு கொள்கிறவர்கள் முன்னோடிகளாகத் திகழ்கிறார்கள். ஏனையவர்களுக்கு வழி காட்டிகளாகவும் மாறி விடுகிறார்கள்.

ஆபிரகாம்லிங்கன் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்தார்.

அங்கேயிருந்த சிவப்பிந்தியர்களின் முன்னேற்றத்திற்கான ஒரு சங்கம் அமைக்க வேண்டியிருந்தது, அமைத்தார்.

அதை வழி நடத்த ஒரு தலைவர் தேவைப்பட்டார். யாரை நியமிப்பது என ஆழ்ந்த சிந்தனையில் இருந்தபோது...

டேனியல் வூர்ஹிஸ் என்கிற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அங்கே வந்தார்.

"என்ன சிந்திக்கிறீர்கள்?" என்று அவர் கேட்டார்.

"எனக்கு ஒரு பிரச்சினை... சொல்லுங்கள்" என்றார்.

"ஒரு தலைவர் தேவைப்படுகிறார்"

"எதற்கு?"

"சிவப்பிந்தியர்கள் முன்னேற்றச் சங்கத்திற்கு!..."

"தலைவர்களுக்கா பஞ்சம்? எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்... யாராவது ஒருவரை நியமிக்க வேண்டியதுதானே!"

"அப்படி இல்லை... அந்தச் சங்கத்துக்குத் தலைவராக நியமிக்கப்படுபவர் நான் எதிர்பார்க்கும் அளவிற்கு செயலாற்ற வேண்டும்" என்றார்.

"எப்படி எதிர்பார்க்கிறீர்கள்?"

"தலைவராக வருகிறவர் நீதி, நேர்மை, கட்டுப்பாடு, உண்மை, சத்தியம் இவற்றை உணர்ந்தவராக இருக்க வேண்டும்...!"

"அப்படியா...!"

"ஆமாம்... அப்படி யாராவது இருக்கிறார்களா... சொல்லுங்கள்"

டேனியல் சொன்னார்;

"இப்போது யாரும் அது மாதிரி கிடைக்கமாட்டார்கள். பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஒருவர் இருந்தார்... ஆனால், அவரைச் சிலுவையில் அறைந்து விட்டார்கள்!" என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 45 | 60 |
| தக்காளி | 70 | 30 | 30 | 45 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 30 | 40 |
| கோவா | 100 | 50 | 60 | 70 |
| கரட் | 100 | 80 | 80 | 130 |
| பூசணி | 50 | 30 | 30 | 50 |
| புடோல் | 50 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 30 | 25-30 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 50 | 50 | 60 |
| பாகற்காய் | 120 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 45 | 80 |
| பயற்றங்காய் | 80 | 60 | 60 | 90 |
| லீக்ஸ் | 100 | 110 | 70 | 100 |
| பீற்றூட் | 70 | 60 | 50 | 60 |
| கறிமிளகாய் | 100 | 80 | 70 | 110 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 40 | 40 |
| போஞ்சி | 110 | 110 | 80 | 140 |
| கத்தரிதம்புள்ள | 55 | 100 | -- | -- |
| கீரை - 1 பிடி | 15 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 300 | 250-300 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 25-30 | 26-30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பினைக் காதலிக்கும் இலங்கைப் பெண்!

## பரபரப்பானது நீதிமன்றம்

பாம்பு ஒன்றினை தன்னிடம் வழங்குமாறு கோரி பெண் ஒருவர் தொடுத்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.


தன்வசம் இருந்த நாகபாம்பை தெஹிவளை சரணாலயத்தில் ஒப்படைத்தமைக்கு எதிராகவே வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. நிமல், காமினி, அமரதுங்க உள்ளிட்ட மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழு முன்னிலையில் குறித்த மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொள்ளுபிட்டி இரவு களியாட்ட விடுதியொன்றில் நாகபாம்பை வைத்துக் கொண்டு நடனமாடியதாகக் கூறி பெண்ணொருவர் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

குறித்த பெண் பிணையில் விடுதலை செய்யப்பட்டு அவர் வசம் இருந்த பாம்பு தெஹிவளை சரணாலயத்தில் விடப்பட்டது. குறித்த பாம்பை மீண்டும் தன்னிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடும்படி கோரி நிரோஷா விமலரத்ன என்ற பெண் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவை எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நிரோஷா விமலரத்ன என்பவர் குறித்த பாம்பினை சில காலமாக காதலித்து வருவதாக பரபரப்பு தகவலை அவர் நீதிமன்றில் வெளியிட்டுள்ளார். தன் காதலனை மீட்கவே போராடி வருவதாக குறித்த பெண் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ந-11)




நன்றி: அததெரண

# நீதித்துறை பொதுமக்களின் இறைமையை பாதுகாக்க வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

சட்டம் இயற்றும் துறை, நிறைவேற்றும் துறை மற்றும் நீதித்துறை ஆகியன பொது மக்களின் இறைமையைப் பாதுகாக்கவே செயற்பட வேண்டுமே தவிர ஒவ்வொருவரினதும் அதிகாரத்தை வெளிப்படுத்தும் வகையில் அமையக்கூடாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரத்தினபுரியில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மக்களின் இறைமையை எவராலும் தட்டிப்பறிக்க முடியாது. இறைமையைக் கட்டிக் காப்பதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கையில் கிராமங்கள் மற்றும் நகரங்களை வளப்படுத்த பிரதேச சபை, மாகாண சபை மாத்திரமல்ல அமைச்சர்கள் மற்றும் முழு நாடும் ஒன்றுபட வேண்டும் என்றார். (ந-11)

# உயிரிழந்த சிறுவனின் சடலம் அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இருபாலை கற்பகப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற கோர விபத்தில் உயிரிழந்த பாடசாலைச் சிறுவனின் சடலம் அடையாளம் காணப்பட்டது.

உடுப்பிட்டி இலகடி பகுதியைச் சேர்ந்தவரும் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையில் தரம் 9 இல் கல்வி கற்று வந்தவருமாகிய செல்வரத்தினம் செல்வகுமார் (வயது 14) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளவராவார்.

குறித்த விபத்தில் மூவர் உயிரிழந்துள்ள போதிலும் இருவரின் சடலங்களே உறவினர்களால் நேற்று முன்தினம் இனங்காணப்பட்டிருந்ததோடு குறித்த சிறுவனின் சடலம் நேற்று முன்தினம் இரவு வரை இனங்காணப்படாமல் இருந்தது.

இந்நிலையிலேயே மேற்படி சிறுவனின் சடலம் உறவினர்களால் இனங்காணப்பட்டுள்ளது.

உயிரிழந்த சிறுவனின் சகோதரி கைதடி நவீல்ட்ஸ் பாடசாலையில் தங்கியிருந்து கற்பித்தலில் ஈடுபடுகின்றார்.

சனி, ஞாயிறு விடுமுறைதினமாகையால் தனது சகோதரியை வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்காக குறித்த சிறுவன் தனியார் பேருந்தில் ஏறி சாரதிக்கு அருகிலுள்ள இருக்கையிலமர்ந்து யாழ். நோக்கி பயணம் செய்து கொண்டிருந்த நிலையிலேயே குறித்த விபத்துச் சம்பவம் நேர்ந்துள்ளது.

தனது சகோதரியைக்கூட இறுதிநேரத்தில் பார்க்க முடியாது இறந்துவிட்டானே என உயிரிழந்த சிறுவனின் தாயார் கதறி அழுவதைப் பார்க்க முடிந்தது.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-4)

# யாழ்.போதனா வைத்தியசாலையின் இந்து ஆலயம் புனரமைப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் அமைந்துள்ள வைரவர் கோவிலினை வைத்தியசாலை நிர்வாகம் புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்தார்.

ஜெய்க்கா நிறுவனத்திட்டத்தின் கீழ் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பெரியதொரு கட்டடம் கட்டி அண்மையில் வழங்கப்பட்டது.

இக்கட்டடம் கட்ட ஆரம்பிக்கும் பொழுது கட்டட வளாகத்தினுள் அமைந்திருந்த நீண்ட கால வரலாற்றினை கொண்ட வைரவர் கோயிலின் பெரும்பாலான பகுதிகள் உடைக்கப்பட்டன.

உடைக்கப்பட்ட ஆலயம் ஆரம்பத்தில் குறித்த கட்டட வேலை செய்யும் நிறுவனமான மர்கா நிறுவனத்தினரால் கட்டித்தரப்படும் என கூறப்பட்ட போதும் தற்போது கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட தறுவாயில் குறித்த கோவிலை தாங்கள் புனரமைக்கமாட்டோம் என அந்நிறுவனம் கைவிரித்தது.

இந்நிலையில் நாம் அவர்களிடம் கோயிலை கட்டித்தருமாறு கையேந்த முடியாது. அதனால் எமது ஊழியர்கள், வைத்தியர்கள் அனைவரும் பணம் சேர்த்து கட்டுவதாக ஆலய நிர்வாகத்தினரால் தீர்மானிக்கப்பட்டு நேற்று முன்தினத்திலிருந்து கோயில் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த கோவில் 25 இலட்சம் ரூபா செலவில் மிக அழகாக புனரமைக்கப்பட உள்ளதாகவும் தற்போது 6 இலட்சம் ரூபாய் நிதி புனரமைப்பிற்காக சேர்ந்துள்ளது எனவும் இக்கோயில் புனரமைப்பிற்கு பொது மக்களும் தங்கள் பங்களிப்பினை செய்ய முடியுமெனவும் பதில் பணிப்பாளர் தெரிவித்ததோடு குறித்த கோவில் குறித்த ஜப்பான் நாட்டு கட்டட திறப்பு விழாவிற்கு முன்னராக திருத்தியமைப்பதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம் தேவையென்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இக்கோவில் ஒரு வருடகாலமாக புனரமைக்கப்படாமையால் நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலை பணியாளர்கள் எதிர்நோக்கிய மன உளைச்சல் தொடர்பாக வலம்புரிப் பத்திரிகை சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-4)

# சார்க் நாடுகளில் மனிதவள அபிவிருத்தியில், இலங்கை முதலிடம் பெற்றது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அபிவிருத்தித் திட்டப்பிரிவு மனித அபிவிருத்தி பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் சார்க் நாடுகளில் மனித அபிவிருத்தியில் இலங்கை முதலிடம் பெற்றுள்ளதென்று பாராட்டியுள்ளது. இவ்வறிக்கையில் இந்தியா மற்றும் மாலைதீவுகளைத் தவிர ஏனைய சார்க் நாடுகள் மனித அபிவிருத்தியில் இலங்கையின் நிலைக்கு வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

இலங்கை விரைவில் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளின் அளவுக்கு மனித அபிவிருத்தியில் உயர்ந்து விடும் என்றும் ஏனைய வளர்முக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இலங்கை முன்னிலையில் இருக்கின்றதென்று இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 6 தசாப்தங்களுக்கும் கூடுதலாக இலவசசுகாதாரம், இலவசகல்வியை ஒவ்வொரு பிரஜைக்கும் பெற்றுக்கொடுத்திருக்கிறதென்று இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யுத்தத்தினால் இலங்கையின் சமூக கட்டமைப்பு சீர்குலைந்திருந்த போதிலும் இலங்கை மனித அபிவிருத்தியில் சாதனை ஏற்படுத்தியிருப்பது பாராட்டுக்குரியது. பெரும்பாலான நாடுகளில் மனிதர்களின் உயிர் வாழும் இலக்கை விட 2011 இல் இலங்கையில் மனிதர்கள் 74.9 வருடங்கள் உயிர் வாழ்கிறார்கள் என்றும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டில் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் 19.8 குழந்தைகள் மரணித்தார்கள். இப்போது சிசுமரணம் 2007 இல் 8.5 ஆக குறைந்துள்ளது. வறுமை நிலையும் பல சார்க் நாடுகளை விட இலங்கையில் குறைவாக இருக்கிறது என்றும் இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு சுன்னாகம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் லயன்ஸ் கழகத் தலைவரும் ஓய்வுநிலை திட்டமிடல் பணிப்பாளருமாகிய ரி.தேவராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக லயன் எஸ்.யோகனந்தராஜா, அவரது பாரியார் லயன் சீமாட்டி யோ.பஞ்சாட்சரராணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வின் போது றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் 45 மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன.

# திவிநெகும சட்டம் மீளப் பெறப்படாது

(கொழும்பு)

திவிநெகும சட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீளப் பெற்றுக் கொள்ளப் போவதில்லை என அவரது சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தர்முல்லயில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி முன்வைத்த காலை பின்வைக்கமாட்டார். இந்தத் திட்டத்தின் மூலம் கிராம சமூகக் கட்டமைப்பை வலுப்படுத்த முடியும். அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை வரையறுக்க முடியும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ உபகரணங்களை அமைச்சர் டக்ளஸ் வழங்கினார்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் இருதய சிகிச்சைகளுக்கான ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்களை பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அன்பளிப்புச் செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மேற்படி சிகிச்சைகளுக்கானஒருதொகுதி மருத்துவ உபகரணங்களை மருத்துவர்களான லக்ஷ்மன் மற்றும் குருபரன்ஆகியோரிடம் இருதய ஒலிய திர்வுகூடத்தில்வைத்து கையளித்துள்ளார்.

Pace Mager, Catheter உள்ளிட்ட ஏழு மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் இதன்போது வழங்கப்பட்டன.

இதனிடையேகோப்பாய் பகுதியில் நேற்று முன்திணம்இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுடன்கலந்துரையாடிய அமைச்சர் சம்பவம் தொடர்பில் விரிவாகக் கேட்டறிந்து கொண்டதுடன் பிரிவால் துயருற்றிருக்கும் உறவினர்களுக்கு ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

இதன்போது யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் டாக்டர் சிறி பவானந்தராஜா அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

## மருத்துவ முகாம்

நீர்வேலி தெற்கு முதியோர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நீர்வேலி திருமுருகன் திருமண மண்டபத்தில் நடை பெறவுள்ளது. கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் 60 வயதிற்கும் மேற்பட்டவர்களுக்கு இரத்த அழுத்தம், சலரோகம் போன்ற நோய்கள் தொடர்பாகவும் வாய்ச்சுகாதாரம் மற்றும் பற்கள் பற்றிய பரிசோதனைகளும் இடம்பெறவுள்ளன. (அ-6)



Auto A/C
வாகன குளிரூட்டி


ரொயோட்டா, மஸ்டா, சுசுக்கி, மிற்சுபிஷி, மற்றும் அதிகுளிரூட்டி வாகனங்கள் (FREEZER TRUCKS) போன்ற சகலவிதமான வாகனங்களுக்கும் மிகச்சிறந்த முறையில் குளிரூட்டிகள் திருத்தம் செய்து தரப்படும்.

எமது ஏனைய சேவைகள்.
1) காஸ் நிரப்புதல்
2) திருத்த வேலைகள்
3) குளிரூட்டிகள் மீள் திருத்தம் செய்தல்.

அரசாங்க, திணைக்கள, தனியார், நிறுவன வாகனங்கள் ஒப்பந்த அடிப்படையில் திருத்தித் தரப்படும்.
(ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்திருக்கும்)

தொடர்புகளுக்கு
510 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக)
தொலைபேசி: 0777738888
(சி/1233)



மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-ஆயிலியம் 1<br>உயரம்:-5'4"<br>கி.பா:-19<br>தொழில்:-Q/S, கனடா PR<br>B/485 | பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- திருவாதிரை 3<br>உயரம்: 5'<br>கி.பா:-45, 2 இல் செவ்.<br>தகைமை: Bsc Agri அமெரிக்க கிறீன்காட் விசா<br>G/583 |
| பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சதயம் 1<br>உயரம்:-5'9"<br>கி.பா:-47.75, 8 இல் செவ்.<br>தொழில்: எலக்ரோனிக் இன்ஜினியர்<br>B/486 | பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூசம் 3<br>உயரம்: 5'<br>கி.பா:-96, 1 இல் செவ்.<br>தகைமை: A/L கலைப்பிரிவு<br>G/587 |
| பிறப்பு:-1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரட்டாதி 3<br>உயரம்:-5'5"<br>கி.பா:-23.5, 12 இல் செவ்.<br>தொழில்:-தயாரிப்பு இணைப்பாளர் கனடா PR<br>B/488 | பிறப்பு:- 1979இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>உயரம்: 5'3"<br>கி.பா: 26.5<br>தகைமை:-A/L<br>G/589 |
| பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூசம் 4<br>உயரம்:-5'6"<br>கி.பா:-39, 2 இல் செவ்.<br>தொழில்:- கிளாஸ் பிற்றிங்<br>B/541 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மகம் 3<br>உயரம்: 5'2"<br>கி.பா: 54.5, 8 இல் செவ்.<br>தகைமை:-A/L<br>G/590 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி



பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/பொலிகண்டி கிழக்கைச் சேர்ந்த செல்வி. விநாயகமூர்த்தி சுஜானா அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


வி. சுஜானா

இவரைத் திறம்பட வழிகாட்டிய "கவிதாசாலை" நிர்வாகி மற்றும் ஆசிரியர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்

வாழ்த்துவோர்:- கிளிநொச்சி பெரியப்பா குடும்பம்
கோட்டைகட்டி பெரியப்பா குடும்பம்.
(சி/1230)



- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
22
September 2012 to February 2013
தமிழ் மொழி மூலம்

- Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
- Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
- Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
- Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
- Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
- Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
- Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48
(சி-1234)

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 10.10.2012



ஒரு மணித்தியாலத்தில் கொழும்பில்!

- தினமும் கொழும்பிற்கான விமான சேவைகள்
- இணையத்தளத்தின் ஊடாக பதிவு செய்யலாம்
- எக்ஸ்போ எயார் நிர்வகிக்கும் தங்குமிட வசதிகளுடன் கூடிய யாழ்ப்பாண சுற்றுலா ஒழுங்கமைப்பு

மேலதிக சேவைகள்

- யாழ்ப்பாணத்திற்கான சுற்றுலா ஒழுங்கமைப்பு
- யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து வசதிகள்
- எக்ஸ்போ எயார் நிர்வகிக்கும் தங்குமிடவசதிகள்

EXPOAIR
your friend in the skies...






EXPO AVIATION (PVT) LTD.
No 141 F, Palaly Road, Thirunelvely, Jaffna.
Tel: +94 21 2223891/2223790
Fax : +94 21 2226297 - Mobile : 0773 788795
Email : jaffna@expoavi.com - Website: www.expoavi.com
(சி/1232)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேறிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை நிச்சயம் வழங்குவோம்

## ஐ.நா. துணைச் செயலாளர் திட்டவட்டம்

(யாழ்ப்பாணம்)


யாழ். மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை நிச்சயமாக வழங்குவோம் என யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடனான சந்திப்பின் போது ஐக்கிய நாடுகள் சபையின் துணைச் செயலாளர் நாயகமும் யு.என்.டி.பியின் பிராந்தியப் பணிப்பாளருமான அஜய் ஷிப்பர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த ஐக்கிய நாடுகள் சபையின் துணைச் செயலர் தலைமையிலான குழுவினர் யாழ். அரச அதிபரை மாவட்ட செயலகத்தில் நண்பகல் 12 மணி தொடக்கம் ஒரு மணிவரை சந்தித்து கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பு தொடர்பாக யாழ். அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதில் ஏற்படும் சவால்கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

குறிப்பாக எமது மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்தி, ஏனைய உட்கட்டுமான வேலைத்திட்டங்களில் குடாநாட்டு மக்களின் பங்களிப்பு எப்படியுள்ளது எனக் கேள்வி எழுப்பினார். அதற்கு உட்கட்டுமானப் பணிகள்ளப் பொறுத்தவரை வெளிநாட்டு நிறுவனங்களும் தென்னிலங்கை நிறுவனங்களுமே கூடுதலான உட்கட்டுமான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

இயந்திர வசதிகள், உட்கட்டுமான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இருப்பினும் குடாநாட்டு தொழிலாளர்கள் வேலைத்திட்ட பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



அத்தோடு மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான அடிப்படை உதவிகளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு, பாரம்பரிய கைத் தொழில் கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சு போன்ற அமைச்சுக்கள் ஊடாக அதிகளவில் வழங்கி வருகின்றோம்.

அத்தோடு தொழில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான உபகரண வசதிகளையும் தொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றோம். அத்தோடு தொண்டு நிறுவனங்கள் ஊடாகவும் பல உதவிகளை வழங்கி வருகின்றோம்.

மேலும் மாவட்ட செயலகத்தில் பிரஜைகள் பட்டயம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக மாவட்ட செயலகத்திற்கு வருகைதரும் பொதுமக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இடைத்தரகர்களை நாட வேண்டிய தேவையில்லை.

மேலும் யாழ். மாவட்டத்தில் இதுவரை 31 ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தேன்.

அத்தோடு சிங்கப்பூரில் யு.என்.டி.பியின் அனுசரணையுடன் அரச அதிகாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு யாழ். மாவட்ட அதிகாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தேன்.

அதற்கு பதிலளித்த ஐ.நா. துணைச் செயலாளர், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு அவ்வாறான பயிற்சி நெறிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு நிச்சயமாக உதவிகள் வழங்கப்படும் எனவும் உறுதிபடத் தெரிவித்தார்.

அத்தோடு இங்குள்ள மதங்களுக் கிடையில் மோதல்கள் உள்ளதா எனவும் துணைச் செயலாளர் கேள்வி எழுப்பினார். அதற்கு சர்வமத ஒன்றியம் ஊடாக இங்கு மதங்களுக்கிடையில் ஏற்படும் பிணக்குகள் தீர்க்கப்படுகின்றன. மதங்களுக்கிடையில் மோதல்கள் இல்லை என ஐ.நா. பிரதிநிதிகளிடம் தான் தெரிவித்ததாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## மன்மோகன் போன்று கைச்சாத்திட்டு பிரபல இந்திய எழுத்தாளர் மோசடி

(சென்னை)

ரமேஷ் நிர்மல் என்ற இந்திய எழுத்தாளர் பிரதமர் மன்மோகன் சிங்கின் கையெழுத்தை போலியாக எழுதி மோசடி செய்ததன் காரணமாக கைது செய்யப்பட்டார் Culture history and tourism in india என்ற புத்தகத்தை ரமேஷ் நிர்மல் எழுதியுள்ளார்.

இப் புத்தகத்தின் 250 பிரதிகளை 25 இலட்சம் ரூபா வாங்கிக் கொள்ளுமாறு மத்திய வெளி விவகாரத்துறை அமைச்சகத்துக்கு பிரதமரே கடிதம் எழுதுவது போல எழுதியுள்ளார். இந்தக் கடிதத்தை கடந்த 2009 ஆம் ஆண்டு பக்ஸ் மூலம் உரியவர்களுக்கு அனுப்பி வைத்தார். இதை அறிந்த பிரதமர் அலுவலகம் அளித்த புகாரின் பேரில் கடந்த யூன் மாதம் சி.பி.ஐ வழக்குப் பதிவு செய்தது.

அந்த பக்ஸ் ரமேஷ் நிர்மலின் மும்பை அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்டதை சி.பி.ஐ கண்டுபிடித்தது. அதனது கணனியை ஆய்வு செய்தபோது அவர் இதேபோன்று பல்வேறு பிரபலங்களுக்கு போலி கடிதம் எழுதியிருப்பது தெரிய வந்தது. உத்தரபிரதேச மாநிலத்தின் எதிர்க்கட்சி தலைவர் மாயாவதி, மோதிலால் வோரா ஆகியோரின் கையெழுத்துக்கள் போலியாக இடப்பட்டதாக அவர் மீது சி.பி.சி.ஐ.டி விசாரணை நடந்து வருவதும் தெரிய வந்தது. (அ-2)

## கலைஞர் குழந்தையின் கலைப்பணியைப் பாராட்டி

### கலைத்தவசி நூல் வெளியீடு

(முருங்கன்)

முருங்கனின் கலைஞர் குழந்தையின் அனுபவங்களை சுமந்து வரும் கலைத்தவசி எனும் கலைப்பணி நயப்பு மலர் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அருட்திரு தமிழ்நேசன் அடிகளாரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை கலந்துகொள்வார்.

முருங்கனைச் சேர்ந்த கலைஞர் குழந்தையின் (செ. செபமாலை) கலைப்பணியைப்பாராட்டி அவரைப் பற்றிய தங்கள் அனுபவங்களை அவருடைய கலையுலக நண்பர்கள், சக கலைஞர்கள், அறிஞர் பெரு மக்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக இந்தக் கலைப்பணி நயப்பு மலர் வெளிவரவுள்ளது. அந்நிகழ்வில் நூல் மதிப்பீட்டுரையை யாழ்.திருமறைக்கலாமன்ற பதில் இயக்குநர் ஜே.ஜே.ஜோன்சன் ராஜ்குமார் வழங்குகின்றார்.

இந்நிகழ்வின்போது கலைஞர் குழந்தையின் கலைப்பயணத்தில் இணைந்து பயணித்த கலைஞர்களான முருங்கனைச் சேர்ந்த நாடக நடிகர் செ. சீமான் அரங்க வேந்தன் என்ற பட்டத்தையும் முருங்கனைச் சேர்ந்த மிருதங்கக் கலைஞர் செ. இயேசுதாசன் லய வேந்தன் என்ற பட்டத்தையும் ஆவணத்தைச் சேர்ந்த செ. வேதநாயகம் ஒப்பனைச் செம்மல் என்ற பட்டமும் அமரர்களான முருங்கனைச் சேர்ந்த ப.அந்தோனிப்பிள்ளை, காத்தான்குளத்தைச் சேர்ந்த ஆசிரியர் சீ. இம்மானுவேல் ஆகியோருக்கு கௌரவ விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான், அமதிகளின் யாழ். மாகாண முதல்வர் எம்.போல் நட்சத்திரம் அடிகளார், யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவத்துறைத் தலைவர் பேராசிரியர் ஞா. பிலேந்திரன் அடிகளார், பேராசிரியர் அகஸ்ரின் சூசை, நானாட்டான் பிரதேச செயலாளர் க.அ. சந்திரஐயா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி, ஆனந்தன் வினோநோதராதலிங்கம் ஆகியோரும் நானாட்டான் பிரதேசசபைத் தலைவர் ஏ.ரீ. அன்புராஜ் லெம்பேட் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்மலர் தொகுப்பு முயற்சியையும் விழா ஏற்பாடுகளையும் அருட்திரு . அன்புராசா அடிகளார் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தனர். (அ-9)

## மாஜி இராணுவ தளபதி மீது தாக்குதல்; 8 பேர் கைது

(சென்னை)

மாஜி இராணுவத் தளபதி குல் தீப் சிங் பிரார் மீது நடத்தப்பட்ட கத்திக் குத்து தாக்குதல் தொடர்பில் பொலிசார் மேலும் எட்டு பேரைக் கைது செய்துள்ளனர். லண்டனில் மையப் பகுதியில் ஞாயிறு இரவு நான்கு பேர் லெப்டினன் ஜெனரல் பிராரைத் தாக்கியிருந்தனர்.

கடந்த 1984 ஆம் ஆண்டு அமிர்தசரஸ் பொற்கோவில் ஓபரேஷன் புளூஸ்டார் இராணுவ நடவடிக்கை க்கு பழிவாங்கும் விதமாக தன் மீது நடத்தப்பட்ட படுகொலை முயற்சி என பிரார் கூறியிருந்தார். ஏற்க னவே 4 பேர் கைதான நிலையில் தற்போது கைதான எட்டு பேரையும் சேர்த்து இந்த சம்பவம் தொடர்பில் லண்டனில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்குள்ளான 78 வயது ஜெனரல் குல்தீப் சிங் சிகிச்சைக்குப் பின் இந்தியா திரும்பியுள்ளார். இந்தியாவில் அவருக்கு [illegible] படுத்தப்படும் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

## விண்ணில் செலுத்தப்பட்டது

இந்தியாவின் கடற்படைக்கு பயன்படும் தனுஷ் ஏவுகணை வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. ஒடிசா கடற்கரை பகுதியில் நேற்று மணிக்கு 350கி.மீ தொலைவில் அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கும் தனுஷ் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

இந்த ஏவுகணை கப்பற்படை பயிற்சி கப்பலில் இருந்து வெற்றி கரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

அணு எரிபொருள் மற்றும் ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கும் பிருத்வி-2 ஏவுகணை விண்ணில் வெற்றிகரமாக ஏவப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருகுலக்கல்வி முறை இருந்தால் நமது நாடு எப்படி இருக்கும்?

*த.கிருத்திகா, இருபாலை*

வியா!

குருகுலக்கல்வி முறை இருந்தால் நமது நாடு எப்படி இருக்கும்?



குரு இருந்து படிப்பிப்பார். மாணவன் நின்று படிப்பான். ஒழுக்கம், பண்பாடு, கலாசாரம் நிலைத்திருந்திருக்கும். நாடு முன்னேற்றம் கண்டிருக்கும்.

*த.அஜந்தன், இருபாலை*

வியா!

வேதனையில் குடிப்பதா சந்தோசத்தில் குடிப்பதா இன்றைய சமுதாயத்தில் காணப்படுகிறது?



இப்போதய இளம் சமுதாயம் சந்தோசத்திற்காக குடிக்கிறது

*சசிரேகா , கந்தர்மடம்*

வியாசரே!

அந்தக்கால இளைஞர் யுவதிகளுக்கும் இந்தக் கால இளைஞர் யுவதிகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

அந்தக்காலம் காதலித்து கட்டினார்கள். இந்தக் காலம் காதலித்து (கை) விட்டார் கள்.

*த.தனுசன்,* கோண்டாவில்

வியாசேர்!

ஒருவன் எமக்கு தீங்கு செய்தால் அவரை மன்னிப்பது நல்லதா? அல்லது அதை மறப்பது நல்லதா?

*அன்றே மறப்பது நன்று என வள்ளுவர் சொல்லியிருக்கிறாரல்லவா?*

*எஸ்.ராதிகா , நல்லூர்*

வியா!

எப்போதுமனிதன்உண்மைசொல்லுவான்? (Note :எப்போதும் பொய் சொல்கிறான் ஆகையால்)

பல மொழி தெரிந்த ஒருவன் ஒருநாள் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். அவனது தாய்மொழியை அறிவதற்கு டாக்டர்கள் முயற்சித்தார்கள்.

ஆனால் அவன் சொல்லவேயில்லை. பல மொழிகளையும் பேசி டாக்டர்களை குழப்பினான். இறுதியில் டாக்டர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். அவன் நித்திரையாக இருந்த போது அவனது முதுகில் ஓங்கி ஓர் குத்துப் போட்டனர். அவ்வளவு தான் அவன் அம்மா என்று அலறினான்.

அவனது தாய்மொழி தமிழ் என்பதை டாக்டர்கள் புரிந்து கொண்டனர். அப்படியானால் அடிபோடும் போது மனிதன் உண்மை சொல்லுகிறான். என்றால் அது தப்பில்லையே.

*எஸ்.கவியா, பருத்தித்துறை*

வியாமாமா!

நிறையச் சீதனம் வாங்கும் ஆண்கள் பின் மனைவியால் அடிமைகளாக நடத்தப்படுகிறார்களாமே உண்மையா?



விலை கொடுத்து வேண்டிய பொருளை வேண்டியவர் எதுவும் செய்யலாம். யாரும் கேட்க முடியாது.

*அனுசா , அச்சுவேலி*

அன்பின் வியாசரே!


இன்றைய மாணவர்கள் ஓடி ஓடி பல ரியூசன்களுக்கு போயும் இறுதியில் பரீட்சையில் கோட்டை விடுகிறார்களே காரணம் யாதாக இருக்கும்?

ரியூசனில் சாப்பிடுகிறார் கள். ஆனால் அது சமிபாடடைவதில்லை. சாப்பிட்டதை வீட்டிலிருந்து மீட்க வேண்டும். அப்போது தரன் பிரயோசனப்படும்.

*பா.தயாளினி, உப்புமடம்*

வியாசரே!

காலையில் விழித்தவுடன் என்ன பிரார்த்தனை செய்வீர்கள்?




மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் இன்னமும் எடுக்கவில்லை. பொலிஸார் பிடிக்காமல் இருக்க வேண்டுமென பிரார்த்திப்பேன்.

## வேதனையில் குடிப்பதா சந் தோசத்தில் குடிப்பதா இன்றைய சமுதாயத்தில் காணப்படுகிறது?

*ரி.பிருந்தா, கொக்குவில்*

வியாமாமா!

நான் ஒரு பெண்ணை விரும்புகிறேன். ஆனால் ஒரு தலைக்காதல். எப்படிசொல்வது என்று தெரியவில்லை.ஒரு ஐடியா சொல்லவும்.

மன்னிக்கவேணும் பிருந்தா! ஐடியா தெரிந்திருந்தால் நானும் அதைச் செய்திருப்பேன்....

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் கேள்விகளை**
**ஆசிரியர், வியாசர் பதில்கள்,**
**இல.3, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

குறிப்பு: 10 சொற்களுக்குட்பட்டிருக்கும் கேள்விகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

# நோர்வேயில் தமிழ் சிறுவர்களுக்கு அநீதி இழைக்கப்படவில்லை

## நோர்வே தூதரகத்தின் பேச்சாளர் தெரிவிப்பு

நோர்வேயில் தமிழ் சிறுவர்களை பலாத்காரமாக சிறுவர் நல காப்பகங்களுக்கு அழைத்து சென்றதாகவும் அவர்களை தமிழ் மொழியில் பேசவிடாமல் தடுப்பதாகவும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நோர்வே அரசாங்கம் மறுத்துள்ளது.

கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தின் பேச்சாளர் மார்டி லியா டோர்ஸ்கென்னிஸ் இந்த மறுப்பை வெளியிட்டுள்ளார்.

குறித்த சிறுவர்கள் பெற்றோருடன் ஒரு படுக்கையில் உறங்கியமையும் கைகளால் உணவருந்தியமை காரணமாகவுமே பெற்றோர்களிடம் இருந்து பிரிக்கப்பட்டதாக வெளியான செய்தியையும் அவர் நிராகரித்துள்ளார்.

இதன்போதுகருத்துரைத்தநோர்வே அதிகாரிகள் சுகாதார நலன் மற்றும் பாதுகாப்பு என்பன நோர்வேயை பொறுத்தவரை சிறுவர்களுக்கு மிகவும் கடுமையாக பார்க்கப்படும் விடயங்களாகும்.

இந்தநிலையில் சில பெற்றோரிடம் இருந்து குறித்த நலன்கள் கிடைக்காத போது அதில் நோர்வே அரசாங்கம் தலையிடவேண்டியிருக்கும் என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை கொழும்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் செய்தவர்களோடு பேசிய நோர்வே தூதரக அதிகாரிகள் நோர்வேயின் சிறார் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து சில தகவல்களை வெளியிட்டனர்.

ஒரு குழந்தை வளர ஏற்ற சூழல் வீட்டில் இல்லை என்றாலோ அல்லது குழந்தைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக ஆவணப்படுத்தப்பட்டாலோதான் வீட்டில் இருந்து குழந்தைகள் அப்புறப்படுத்தப்படுவதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

மேற்குறித்த காரணங்களுக்காக அகற்றப்படுவதாக கூறப்படும் தகவல்கள் முற்றிலும்தவறானவைஎன்று தூதரம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

வளர்ப்பு பெற்றோரிடம் அளிக்கப்படும் குழந்தைகள் தமது தாய் மொழியை கற்கவும் கலாசாரத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளவும் தேவையான சூழல் அளிக்கப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் மேல் நீதிமன்றத்தில் முறையீடு செய்ய இலவச சட்ட உதவி வசதியும் உள்ளதாகவும் நோர்வே தெரிவித்துள்ளது. (அ-2)

# இலங்கையர்கள் பதினெட்டுப்பேர் நவுறு தீவுக்கு அனுப்பிவைப்பு

அகதி அந்தஸ்து கோரி அவுஸ்திரேலியா சென்ற இலங்கையர்களில் சுமார் 18 பேர் உட்பட 33 பேர் அடங்கிய குழுவொன்று தென் பசுபிக் கடற்பரப்பைச் சேர்ந்த நவுறு தீவை நேற்று முன்தினம் சென்றடைந்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரியவர்கள் அடங்கிய ஆறாவது குழுவினரே நவுறு தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று அவுஸ்திரேலியன் அசோசியேட் பிரெஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு நேற்றையதினம் நவுறு தீவுக்கு சென்றடைந்த குழுவினரில் 14 ஆப்கானியர்களும் ஒரு ஈரானியரும் உள்ளடங்குகின்றனர்.

இவர்களின் வருகையினை அடுத்து அகதி அந்தஸ்து கோரி நவுறு தீவு பகுதியில் வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 184 ஆக அதிகரித்துள்ளது.

கிறிஸ்மஸ் தீவிலிருந்து விசேட விமானமொன்றின் மூலமே இவர்கள் நேற்றுக் காலை நவுறுதீவைச் சென்றடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் தற்காலிக இடமொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செப்டெம்பர் மாதம் மூன்று பேர் அகதி விண்ணப்பத்தை நிராகரித்த நிலையில் நாடு திரும்பிதை அடுத்து 181 புகலிடக் கோரிக்கையாளர்கள் நவுறுதீவில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

## எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பு

# மனிதாபிமான நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வருகிறது

(கொழும்பு)

எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பு இலங்கையில் மேற்கொண்டு வந்த மனிதாபிமான நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வரத் தீர்மானித்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பு வடக்கில் பாரியளவு மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொண்டு வந்த இறுதி செயற்றிட்டமான உள நல செயற்றிட்டப் பணிகளை எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பு உலக தரிசன நிறுவனத்திடம் ஒப்படைத்துள்து.

2010 ஆம் ஆண்டில் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையின் பணிகள் ஸ்தம்பித நிலையில் காணப்பட்டதாகவும் அந்தக் காலப்பகுதியில் எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பு மனிதாபிமான தொண்டுகளை முன்னெடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சுடன் இணைந்து இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. வரையறுக்கப்பட்ட வளங்களை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும் என்ற காரணத்தினால் தமது சேவைகளை மிகவும் அத்தியாவசியமான பகுதிகளுக்கு இடம் நகர்த்த தீர்மானித்துள்ளதாக குறித்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் மீளவும் அவசர மருத்துவ உதவிகள் தேவைப்பட்டால் சேவைகளை வழங்கத்தயார் எனவும் இலங்கை நிலைமைகளை எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் அறிவித்துள்ளது. (அ-2)

# வலியின் விம்பங்கள் கவிதை நூல் வெளியீடு

கலையருவி எனப்படும் மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மைய மன்னார் பெனில் என்பவரின் **வலியின் விம்பங்கள்** என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்னார் புனித சவேரியார் ஆண் கள் கல்லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது. கலையருவி அமைப்பின் இயக்குநரும் மன்னார் சர்வமதப் பேரவையின் தலைவருமான அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதன்மை விருந்தினராக மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை கலந்து கொள்ளவுள்ளார். பல்துறை வித்தகர் ஆசிரியர் ஏ. நிஷாந்தன் வெளியீட்டுரையை ஆற்ற நூல் மதிப்பீட்டுரையை சந்தக் கவிமணி கிண்ணியா அமீர் அலி ஆற்றவுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரட்ரிக்காவின் புகலிட கோரிக்கை அவுஸ்.அரசாங்கத்தால் நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் சண்டே லீடர் செய்தித்தாளின் ஆசிரியரான பிரட்ரிக்கா ஜேன்ஸின் புகலிடக் கோரிக்கையை அவுஸ்திரேலிய அரசாங்கம் நிராகரித்துள்ளது என அவுஸ்திரேலிய செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரான பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் அச்சுறுத்தப்பட்டதாக கூறப்படும் பிரட்ரிக்கா ஜேன்ஸ் அண்மையில் தாம் சார்ந்ததாக செய்தி நிறுவனத்தில் இருந்தும் விலக்கப்பட்டார்.

அரசாங்கத்துக்கு எதிராக கட்டுரை ஒன்றை பிரசுரிப்பதற்கு முன்னர் அதனை நிறுவன உரிமையாளருக்கு காண்பிக்காமை காரணமாகவே அவர் நிறுவனத்தில் இருந்து விலக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் தம்மீது விரைவில் இலங்கையில் சட்டநடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு சிறையில் அடைக்கும் அச்சம் நிலவுவதாக தெரிவித்த அவர் இலங்கையில் உள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக அவுஸ்திரேலியாவில் குடியேறுவதற்கான கோரிக்கையை விடுத்திருந்தார்.

எனினும் அதனை அவுஸ்திரேலிய அரசாங்கம் நிராகரித்துள்ளது. இந்த புகலிடக் கோரிக்கைக்கு உரிய காரணங்கள் இல்லை என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# பங்களாதேஷில் இலங்கையர்களுக்கு பாதிப்பில்லை என்கிறது அரசு

(கொழும்பு)

பங்களாதேஷில் வாழும் இலங்கையர்களுக்கு ஆபத்து கிடையாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. பங்களாதேஷின் சிட்டாங்கொங்க பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் கிடையாது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

பங்களாதேஷில் வாழும் இலங்கையர்கள் தொடர்பில் அரசாங்கம் உன்னிப்பாக கண்காணித்து வருவதாக வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. இதேவேளை பங்களாதேஷில் 15 பௌத்த விகாரைகளும் நூறு பௌத்த வீடுகளும் தாக்கப்பட்டுள்ளன. சிட்டாங்கொங்கில் வாழும் பௌத்தர்களுக்கு பூரண பாதுகாப்பு அளிக்கப்படும் என பிரதமர் ஷேக் ஹசீனா உறுதியளித்துள்ளார். (அ-2)

# ஏலக்காய்க்குள் மறைத்து கேரள கஞ்சா கடத்தல்

(கொழும்பு)

ஏலக்காய் பக்கெற்றுக்குள் மறைத்து மிகவும் சூட்சுமமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா போதைப்பொருளை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

20 கிலோகிராம் நிறையுடைய ஏலக்காய்களுடன் நான்கரை கிலோ கஞ்சா இருந்ததாகவும் கைது செய்யப்பட்ட நீர்கொழும்பை சேர்ந்த சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி அதிகாரிகள் கூறினர். (அ-2)

# யுஎஸ்எயிட் நிறுவன அதிகாரிகள் வடக்கு ஆளுநரை சந்தித்தனர்

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்கா முகவர் நிலையம் யுஎஸ்எயிட் நிறுவனம் ஆகியன வடமாகாண பிரதம செயலாளருடன் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவி புரியும் வகையில் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி கொழும்பிலுள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் நடைபெற்றது.

யுஎஸ்எயிட் நிறுவனத்தை சேர்ந்த அதிகாரிகளான கிளென்டா பொலார்ட் மற்றும் ரிச்சார்ட் ஹட்டன் ஆகியோர் ஒப்பந்தம் கைச்சாத்திட முன் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியை சந்தித்து கலந்துரையாடினார்கள்.

இரண்டு செயற்றிட்டங்களுக்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. மன்/முசலி மகா வித்தியாலயம், கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயம், மு/துணுக்காய் அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளின் வகுப்பறை கட்டடங்களையும் ஏனைய கட்டடங்களையும் புனரமைத்தல் ஒரு செயற்றிட்டமாகும். அக்கராயன், வேரவில் வைத்தியசாலைகளில் மகப்பேற்று விடுதி, குழந்தைகள் சிகிச்சை பிரிவு என்பவற்றை அமைப்பதும் கள்ளப்பாடு, உடுப்புக்குளம் ஆகிய பிரதேசத்தில் சுகாதார நிலையங்களை அமைப்பதும் இரண்டாவது செயற்றிட்டமாகும். (அ-9)

# அதிவேக நெடுஞ்சாலையால் 100 கோடி வருமானம்

தெற்கு அதிவெக நெடுஞ்சாலை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு ஒரு வருடம் கூட பூர்த்தியாகாத நிலையில் அதனூடாக 100 கோடி ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது முதல் இதுவரையில் 28 இலட்ச வாகனங்கள் நெடுஞ்சாலையில் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளன.

இந்த நெடுஞ்சாலையில் 375 இற்கும் மேற்பட்ட வாகன விபத்துக்கள் இடம்பெற்றன. இதில் மூன்று விபத்துக்கள் பாரிய உயிர் ஆபத்துக்களை ஏற்படுத்திய விபத்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## புகலிடக் கோரிக்கையாளர்

# சட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்த அவுஸ். முனைப்பு

(கொழும்பு)

புகலிடக் கோரிக்கையாளர் சட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்த அவுஸ்திரேலிய அரசாங்கம் முனைப்பு காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவரின் புகலிட விண்ணப்பம் குறித்து அந்நாட்டு உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து அரசாங்கம் இவ்வாறு சட்ட திருத்தம் கொண்டு வருவது குறித்து கவனம் செலுத்தி வருகின்றது.

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரிலான புகலிடக் கோரிக்கையாளர்களை சொந்த நாட்டுக்கோ அல்லது வேறு நாட்டுக்கோ திருப்பி அனுப்பக்கூடாது எனவும் புகலிடக் கோரிக்கை வழங்க முடியும் எனவும் அண்மையில் உயர் நீதிமன்றம் அறிவித்திருந்தது.

அவுஸ்திரேலிய பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவின் பரிந்துரைகளுக்கு அமைய தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய நபர்களுக்கு புகலிடம் வழங்கப்படுவதில்லை. எனினும் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு காரணமாக சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு தொடர்பில் அவுஸ்திரேலிய சட்டமா அதிபர் நிகோலா ரொக்ஸன் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேசியப் பாதுகாப்பு மற்றும் சர்வதேச புகலிடக் கோரிக்கையாளர்கள் சட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி தீர்மானங்கள் எடுக்கப்படும் என ஆளும் கட்சி உறுப்பினர் பிரன்டன் ஓ கொர்னர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேசியப் பாதுகாப்புக்கு சாதகமான சட்டங்களுக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என அவுஸ்திரேலிய எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. (அ-2)

# கருணாரட்னவுக்கு எதிராக சட்டமா அதிபரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

சிங்கள ராவய, சிங்கள ஜாதிக பெரமுன ஆகிய அமைப்புக்கள் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்னவுக்கு எதிராக பொலிஸ்மா அதிபர் மற்றும் சட்டமா அதிபரிடம் முறைப்பாடுகளை செய்துள்ளன.

தாம் இந்த முறைப்பாடுகளை அண்மையில் கையளித்துள்ளதாக சிங்கள ராவய அமைப்பின் செயலாளர் மெடெல்லே பஞ்ஞா லோக்க தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் அமைப்பின் 157 (அ) 1 சரத்தின் கீழ் இலங்கைக்கு தனி நாடு அமைக்க அல்லது அதற்காக செயற்படும் அமைப்புகளுக்கு உதவிகளை செய்வது குற்றம் எனவும் இதனடிப்படையில் கருணாரட்ன இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறியுள்ளதாகவும் இதனால் இது குறித்து விசாரணை நடத்தி அவரை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என 60 பக்கங்களை கொண்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இந்த அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதிராகவும் இவ்வாறான முறைப்பாட்டை செய்திருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. (அ-2)



ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியீட்டத்துடன் சோஆ ZOA நிறுவன ஒழுங்குபடுத்தலில் இழந்த கல்வியை ஈடுபடுத்துவதற்கான செயற்றிட்டத்தில் மாலை நேரவகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வலுவூட்டல் பயிற்சி அண்மையில் முழங்காவில் இந்நிறுவன திட்ட அலுவலகத்தில் இடம்பெற்றது. இப்பயிற்சியில் ஆசிரியர்கள் ஆர்வத்தோடு ஈடுபடுவதையும் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பூநகரிச் செய்தியாளர்)

# செய்தி வாசிப்பில் இரண்டாமிடம்



யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய மாணவி ஜேனுஷா சேவியர் (தரம் 12) செய்தி வாசிப்பு போட்டியில் மாகாண மட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

## இரட்டை வாழ்வு

பாதங்கள் இரண்டு
பாதைகள் இரண்டு
மனமெங்கு போகும்?
கண்கள் இரண்டு
காலங்கள் இரண்டு
கனவெங்கு தோன்றும்?
உருவங்கள் இரண்டு
துருவங்கள் இரண்டு
உணர்வெங்கு சேரும்?
உள்ளங்கள் இரண்டு
உண்மைகள் இரண்டு
உறவெங்கு வாழும்?
ஒத்துணர்வோடு
ஒருமித்து வாழ்ந்தால்
இன்பம் வந்து சேரும்

அ.அஜந்தன்
கந்தர்மடம்.

## அவரவர் பார்வையில்

### ஏன் இந்த மாற்றம்

தமிழ் கலாசாரத்தின் தாய்வீடு
பாலியல் வன்முறை கொண்ட
சீரற்ற சமூகமாக
சீரழித்துச் செல்கின்றதே

### வேதனை

போரினாலே,
உதிர்ந்த என் வாழ்க்கை
உதிர்ந்த சருகுகளைப் போல

க.செல்வமலர்
இடைக்காடு

### இதயராகம்

புன்னகைப் புஷ்பங்களால்
கண்வழியே மின்சாரம் பாய்ச்சி
தூண்டிவிட்டவன் இம்சைக்கு
துவண்டு போன இதயமே
ஒரு வார்த்தை கூறிவிடு

பா.மதனபாரதி
அல்வாய்

## உன் நினைவைத் திருப்பித் தருவாயா?

சிரித்துப்பேசி
சிறைப்படுத்தியவனே
பறித்துச் சென்ற
மனதை
தொலைத்துவிடாதே...!
பத்திரப்படுத்திக்கொள்
அதற்குள் இருக்கும்
என்னை
சித்திரமாய் தீட்டி விடு
என்
நினைவுகளை
நினைவில்கொள்
என்றோ ஒருநாள்
என்னையும் என் நினைவுகளையும்
உன் மனதோடு
சேர்த்து
திருப்பித் தருவாயா...?

சா.ஜிந்துஜா
கோண்டாவில்

## இமயம் தொட...

முன்னேறு
சாணேற முழம் சறுக்கும்
தயங்காதே முன்னேறு
தேசம் முன்னேற நீ நீயாகு
தீபங்கள் ஏற்றிட
நீ தீயாகு...
ஒரு தீக்குச்சிதான்
ஓராயிரம் தீபங்களாய்...

மாவை நா.கஜேந்திரன்

## எப்போது?

ஆழ்கடலில் துடுப்பு இல்லாத
தோணிபோல்
தத்தளித்துக் கொண்டிருக்கும்
நம் காதல் கரை சேர்வது
எப்போது?
கற்பனையில் உன்னோடு
வாழ்ந்து கொண்டிருக்கும்
என் இதயம்
நிஜத்தில் உன்னோடு
வாழ்வது எப்போது?

இ.நித்தியா
மடத்தடி

# மௌனத்தின் தேடல் - 124



## தெய்வம் துணை

வீட்டை இழந்துதான்
காட்டுக்குச் சென்றிருப்பாய்
உன்நாட்டு யுத்தம் காட்டாத கருணையை
காட்டுயானை உனக்கு காட்டியதால்தான்
அதன் தும்பிக்கையை
உன் நம்பிக்கைப் பொருளாக
அணைத்துக்கொள்கின்றாய்
இதுதான் திக்கற்றவனுக்கு
தெய்வம் துணை என்பதா?

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## வீரத்தளிர்

செம்மண்ணில் நமக்கும் சிறுகால்கள்
செந்தளிராய் சிரிக்கும் இதழ்கள்
கரும்பலகையில் பதியும் கைகள்
இரும்பு மனம் கொண்டு
தும்பிக்கையையும் தூசாக நினைத்து
நம்பிக்கையுடன் ஏறுகின்றதே
இந்த வீரத்தளிரின்
பிஞ்சுக் கரங்கள்

சங்கரா
கோண்டாவில்

## சுபம்

முருகன் வள்ளி திருமணத்துக்கு
துணை நின்ற யானை
ஔவையின் வாழ்க்கையில்
துணைபுரிந்த யானை
உனது வாழ்க்கைக்கு துணைபுரிய
தூக்கிவிட்டது யானை
உனது எதிர்காலம் ஒளிமயமாகும்
தயங்காமல் செல் குழந்தாய்

எஸ்.பிரதீப்
திருநெல்வேலி

## அவதாரமா?

உமாதேவியாரிடம் ஞானப்பால்
உண்ட சம்பந்தரைப்போல்
தோற்றம் அளிக்கின்றாயடா
குஞ்சரத்தின் தும்பிக்கையில்
நம்பிக்கையுடன் அமர்ந்திருக்கும்
நீயும் ஒரு அவதாரமா?

லீலா சிவவடிவேல்
இணுவில் மேற்கு

## தும்பிக்கையான் காத்தருள்வான்

மதம் கொண்ட யானையிடம்
சிக்கித் தவிக்கும் சிறுமியே
அந்தத் தும்பிக்கையானை
ஒருமுறை நீ
மனதார வேண்டிக்கொள்
நிச்சயம் உன்னை அவன்
காத்தருள்வான்

ஜெயரூபன்
பருத்தித்துறை

## எடுத்துக்காட்டு

யானையைக் கண்டாலே
அடிவயிற்றைக் கலக்கும் பயத்தில்
துணிந்தவனுக்கு எல்லாமே
பணிந்து தலை சாய்க்கும்
பச்சைக்குழந்தை ஒன்று
யானையின் தும்பிக்கையில்
நம்பிக்கையோடு பிடித்திருப்பது
நல்லதோர் எடுத்துக்காட்டு

துரை, தென்மட்டுவில்

## பார்த்துப்போ!

நாட்டில்
எல்லாம் யானைவிலை- பிரயாணம்
அதன்மீதுதான்- ஆனாலும்
பார்த்துப்போ தம்பி-இதற்கும்
ஆவணங்களா கேட்கப்போகிறார்கள்
விதிப்பொலிஸார்

## தோழியே

ஆறறிவுள்ள மனிதன்
மேலான நம்பிக்கையைவிட
ஐந்தறிவுள்ள யானையின்
தும்பிக்கை பாதுகாப்பு
என்றெண்ணிக் கொண்டாயோ
சிறு தோழியே

ம.மிது

## திண்டாட்டம்

எத்தனையோ சிறுவர் தினம்
கொண்டாடியாச்சு இங்கு,
ஆனாலும்
இன்றும் எம் குழந்தைகள் வாழ்வு
திண்டாட்டத்தில்தான்
இதைப்பார்த்து
வெட்கப்படவேண்டியவர்கள் யார்?

பி.பிறேமன்
பருத்தித்துறை.

## அறைகூவல்

இங்கே காண்பிக்கப்படுவது
மந்திர வித்தையுமல்ல!
மாயாஜாலமுமல்ல!
சிறார்களை பதம்பார்க்கும்
மனித மிருகங்களுக்கெதிரான
போர் அறைகூவல் மட்டுமே

பா.பிறேமதாஸ்
பருத்தித்துறை

## இறைவன் பரிசு

மனிதனுக்கே
மனிதம் இல்லாதபோது
மதம் பிடிக்கும் யானைக்கு
வந்தது மனிதம்
பெற்றவர்களும் வெறுத்தனர்
பெரியவர்களும் மறுத்தனர்
பகுத்தறிவில்லா உயிரை
நண்பனாக்கினான் இறைவன்

சூ.அ.கலக்ஷன், மண்டைதீவு

## நன்றிக்கடன்

அன்பானவனாய் வாழும்- உன்னை
ஆறறிவானவர்கள்- சிலர்
தூற்றினாலும்...!
ஐந்தறிவான யானை- உன்னை
தும்பிக்கையில்- தூக்கி வைத்திருப்பது
யானைக்கு- நீ செய்த
நன்றிக்கடன் தம்பி

வீ. அருள்ராஜா, கொம்மாந்தறை

## ந(து)ம்பிக்கை

ஆனை உன்னை ஏற்றும்
வாழ வழி காட்டும்
ஆனை உன்னை மாற்றும்
சூழ்ந்த இருள்கள் நீங்கும்
யாவும் இன்பமாகும்
கலங்காதே மகளே
இறுகப்பிடி...

ந.இந்திரன், சங்கானை

## எழுகை

அழிக்கப்பட்ட வாழ்வை
கட்டியெழுப்ப
நம்பிக்கையுடன்
தும்பிக்கையை பற்றியிருக்கும்
அன்புச் சகோதரா
எழு உன் எழுச்சி
உயர்த்தும் எம்மை
எம்தேசத்தை

உதிஸ்ரன், மாவை கலட்டி

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -125



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 12.10.2012 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தற்காலத்தில் மதிப்பிழந்து வரும் முதியோரின் வார்த்தைகள்

இன்றைய உலகின் முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாக விளங்குபவர்கள் இன்று வாழும் நம் மூத்தபிரஜைகளே! முதியோர்கள் நம் இருகண்கள் போன்றவர்கள். அதாவது நம் இளம் சமுதாயம் இவ்வளவு முன்னேற்றம் அடைந்து நாட்டில் மிகப்பெரிய சாதனைகளையும் புகழ்களையும் பெற்று வெற்றி அடைவதற்கு முதியோர்களே காரணமாவர்.

இதனால் சர்வதேச ரீதியில் முதியோர்களின் முக்கியத்துவம் உணரப்பட்டு அவர்கள் பற்றிய ஓர் விழிப்புணர்வை இளையோர் மத்தியில் ஏற்படுத்தும் முகமாக முதியோர்களுக்கென்று முதியோர் தினம் ஒக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் ஏழாம் திகதி வரை முதியோர் வாரமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. முதியோர்கள் வாழும் காலம் வரலாறாகவும் வாழ்ந்து முடிந்த பின் இன்னொருவருக்கு அது பாடமாகவும் அமைகின்றது. முதுமை ஒவ்வொரு மனிதருக்கும் கிடைக்கும் நன்கொடையாகும். இந்த நன்கொடைச் சொத்தை நாம் விரும்பியோ விரும்பாமலோ பெற்றுத்தான் ஆகவேண்டும்.

ஆரம்ப காலத்தில் குடும்ப அமைப்பிலே குடும்பத்தினை வழிநடத்திச் செல்வது அங்கு வாழ்ந்த முதியவர்களின் கைகளிலேயே தங்கியிருந்தது. காலம் செல்லச் செல்ல முதியவர்கள் பலர் ஒன்று சேர்ந்து சமூகத்தில் ஏற்படும் பிணக்குகளை தீர்த்துக் கொண்டனர். இவ்வாறான முதியவர்களின் சொற்களுக்கு அமைய மனித சமுதாயச் செயல் ஒழுங்குகள் சிறப்பாக இடம் பெற்று வந்தன. அரச சபைகளிற் கூட ஒரு சட்டத்தை உருவாக்குவதற்கு முதியவர்களின் சொற்களைக் கேட்டே உருவாக்கப்பட்டது என்றால் அது முதியவர்களுக்கு அக்காலத்தில் கொடுக்கப்பட்ட மதிப்பும் மரியாதையுமே என்று கூறிக்கொள்ளலாம்.

மனித சமுதாய அமைப்பானது தற்காலத்தில் பல்வேறுபட்ட நிலைகளிலும் விரிவடைந்து சென்று கொண்டிருக்கும் நிலையில் முதியவர்களின் கருத்துக்கள் புறக்கணிக்கப்பட்டன. இதன் காரணமாக முதியவர்களின் மதிப்பும் கௌரவிப்பும் குறைவடையத் தொடங்கின. முதியவர்களின் சொற்கேட்டு நடப்பது ஒரு அநாகரிக செயற்பாடு என்று தவறான சிந்தனை நவீன உலகில் நிலவி வருகின்றது.

அன்றைய அறிவுசார் முதியவர்களின் கருத்துக்களும் அனுபவங்களுமே இன்றைய உலகின் துரித வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது என்று சற்றும் சிந்திக்காமல் மனித சமூகம் முதியவர்களுக்குரிய மதிப்பை அளிக்கத் தவறி வருகின்றது. முதியவர்களை அனுபவங்களின் பெட்டகம் என்றும் சிறப்பித்துக் கூறுகின்றார்கள். ஆனால் பல முதியவர்கள் துன்புறுத்தப்படுவதும் அவர்கள் தேடுவாரற்றுத் திரிவதும் அதிகரித்து வருகின்ற விடயமாகும். இது மனித சமுதாயத்துக்கே ஒரு சாபக்கேடான விடயமாகும். ஆபிரிக்க நாட்டு பழமொழியிலே முதியவர் ஒருவர் இறக்கின்றார் என்றால் ஒரு பெரிய நூலகம் எரிந்து போவதற்கு ஒப்பானது என குறிப்பிடப்பட்டுள்ளது. முதுமை என்பது ஒவ்வொரு மனிதனும் சந்தித்தே ஆக வேண்டிய இறுதிக்கட்டமாகும். இதிலிருந்து எவராலும் தப்பவோ விலகி ஓடவோ முடியாது. இன்றைய இளைஞர்கள் முதியவர்களை நைன்றி என்று ஏளனம் செய்வதையும் துன்புறுத்துவதையும் பார்க்கும் போது **காவோலை விழ குருத்தோலை சிரிக்கும்** என்கின்ற பழமொழி நினைவுக்கு வரும்.

இன்று அநேகமான குடும்பங்களில் கணவன், மனைவி இருவருமே உத்தியோகம் மற்றும் பல்வேறு காரணங்களினால் வெளியே செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இவ் வேளையிலெல்லாம் வீட்டை பாதுகாக்கின்றவர்களும் குழந்தைகளை பராமரிக்கின்றவர்களும் வீட்டு வேலைகளில் ஒரு பகுதியாவது முடித்து வைக்கின்றவர்களும் இந்த முதியவர்களே. மேலும் இந்த முதுமைகள் இருப்பதனால்தான் இளமைகள் உல்லாசமாக வெளியே உலா வரமுடிகின்றது.

முதியோர்களுக்கு ஏற்படுகின்ற மூப்பும் அதைத் தொடர்ந்து வருகின்ற உடல் தள்ளாமை, உடல் நலிவு, உடல் சோர்வு ஆகிய எல்லாம் சேர்ந்து அவர்களை இரக்கத்திற்கும் அனுதாபத்திற்கும் உரியவர்களாக ஆக்குகின்றன. இந்நிலைமையில் அவர்களுக்கு ஆதரவும் பேணுதலும் தேவைப்படுகின்றது. உலகில் மாறி வரும் பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலைமைகளினால் முதியோரைப் பராமரிப்பது அவர்களது நிலையில் அவர்களுக்கு சமுதாயத்தில் அரசின் ஆதரவும் அரச சார்பற்றநிறுவனங்களின் ஆதரவும்கைகொடுக்கின்றது.

அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள் புகலிட மற்ற முதியோர்களுக்கு பல்வேறு வகைப்பட்ட உதவிகளை செய்து வருகின்றது. இந்த வகையில் முதியோர்களுக்கான தேசிய செயலகம், சமூக சேவைகள் திணைக்களம் போன்ற அரசாங்க அமைப்புக்களினால் பல உதவிகளை முதியோர்களுக்கு செய்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.

எனவே அறிவு முதிர்ச்சிசார் முதியவர்களின் மனதை நோகச் செய்யும் எந்தச் செயல்களிலும் நாம் ஈடுபடக்கூடாது. முதியவர்கள் செய்கின்ற எந்தச் செயல்களையும் கண்டு எரிச்சல், கோபம் கொள்ளாமல் முதியவர்களே எமது சமூக வாழ்வின் ஒளி வீசும் முத்துக்களாகும். இன்றைய இளைஞன் நாளைய முதியவன் என்பதனை நாம் மனதில் கொண்டு முதியவர்களின் சொற்படி நடந்து முதியவர்களின் மனதை துன்பத்திற்குள்ளாக் காது அவர்களிற்கு அன்புக் கரங்களை நீட்டி நமது வாழ்க்கையையும் சமுதாய சிறப்பையும் மேம்படுத்திக் கொள்வோம்.

முதியோரை காப்போம்!
முதியோரை மதிப்போம்!


**செல்லத்தம்பி-சுரேந்திரா**
**பதில் சமூக சேவை உத்தியோகத்தர்**
**பிரதேச செயலகம்,**
**பூநகரி.**


# இயற்கையின் தத்துவத்தை உணர்த்தும் வயோதிபம்

மூப்பு, பிணி, மரணம் எப்பவோ முடிந்த விடயம் என நல்லூர் யோகர்சுவாமிகள் அடித்துக்கூறிவிட்டார். இரசாயன, பௌதீக மாற்றங்கள் நடைபெறுவதால் இவ்வுலகம் நிலைத்துள்ளது. ஜீவராசிகள் படைக்கப்படுவதும் அவை மூப்படைவதும் மரணமடைவதும் நிகழ்ச்சித் திட்டம்போல் நடை பெறுகின்றது. இளமை திரும்பிவராது. அது போல் முதுமையில்தான் சாதனைகள் வெளிப்படுவது அதிகரிக்கிறது. இளமையில் கல்விச் சிலையில் எழுத்து என்பர். முதுமையில் பழுக்கும் பழம் இயற்கை. பிஞ்சில் பழுத்தது உதவுவதில்லை

இன்றைய இளைஞர்கள் நாளைய மன்னர்கள் என்பதும் உறுதியே. உயிர்களின் படைப்பு அதி உன்னத படைப்பாக வியப்புக்குரியதாகவுள்ளது. உயிர்களின் உறுப்புக்கள் ஓய்வில்லாது இயங்கிக்கொண்டு இருப்பது மாபெரும் வியப்புக்குரியதே. ஆறிலும் சாவு. நூறிலும் சாவு என்பதற்கமைய அழகான வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டம் 8 நாட்களும் மனிதனின் வாழ்க்கை வட்டம் சராசரி நூறு வருடங்களும் என்பது முடிந்த விடயமாகவுள்ளது.

நன்மையும் தீமையும் பிறர்தர வாரா என்பதற்கமைய நாம் முற்பிறவியில் செய்த நல்வினை, தீவினையின் பயனாகவே இவ்வரிய மானிடப்பிறவி எடுத்து இன்ப துன்பங்களை அனுபவிக்கிறோம். அரிது அரிது மானிடப்பிறவி என ஆன்றோர் கூறியும் நாம் உணர்வதில்லை எனலாம். தெய்வங்கள் மனித வடிவில் தோன்றியதும் மனிதர்கள் தெய்வமாகி புத்தர், இயேசு, நபி வாழ்ந்து காட்டியதும் முதுமையின் அவசியத்தை விளக்குகிறது.

பிள்ளையைப் பெற்றுவிட்டால் போதுமா மனிதர்களுடன் பேணி வளர்ப்பதனால் தான் அவ்வினம் அழியாது, அடுத்த பரம்பரைக்கும் விட்டுச்செல்லக் கூடியதாகவுள்ளது. பழகிப் பிரிவது துயரம். அதற்காக அழுவதைவிட மனதை ஒருவழிப்படுத்தி சரியான தெரிவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். மற்றவரைப் போல் எனக்கும் ஐஸ்வர்யம் கிடைக்கவில்லையே கிடைக்கவேண்டும் என்ற நிலை நல்லதல்ல.

***ஈன்று புறம் தருதல் என் தலைக்கடனே***
***சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடனே***

என புறநானூறு கூறியதில் பெற்றோர் குழந்தைகளின் வளர்ச்சிக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும். முன்பு கூட்டுக்குடும்பமாக இருந்தது. குழந்தையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது. காலம் செல்லச் செல்ல நவீன தொழில்நுட்ப வசதிகள் காரணமாக எலி வளையானாலும் தனி வளை என்று சிறு குடும்பமாக வாழ்கின்றனர். இதில் சில குறைபாடுகள் இருக்கவே செய்கிறது.

மனிதர்களிலும் ஆசை அதிகரிக்க மண் ஆசை, பெண்ணாசை, பொன்ஆசை என்று தேவைகள் இருப்பினும் அளவுக்கு மீறும் போது பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். இவை உறவுகளைப் பாதிக்கும் அளவுக்குச் சென்று பகை தானாக வந்து விடுகிறது. தான தர்மங்களில் ஈடுபடுவதும் ஆன்மீகவழிகளில் நடப்பதுடன் மாற்றங்களுக்கு வழிகாட்டியாக வாழவேண்டும். சுவர் இருந்தால்தான் சித்திரம் என்பதற்காக நாவைக் கட்டுப்படுத்தி நோய் நொடியற்ற வர்களாக இயற்கையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதற்கமைய தூர இடங்களுக்கு தொழில் சம்பந்தமாக வாழநேரும் போது பந்தபாசம், கலாசாரம் என்பவற்றைக் கடைப்பிடித்து முன்னேற்றம் கண்டுள்ளோர் போர்க்காலச்சூழ்நிலையில் இடப்பெயர்வு, வேறு நாடுகளுக்கு குடியேறியதால் புதிய கலாசாரத்தினை உருவாக்கியமை தவிர்க்கமுடியாதுள்ளது. பிரிந்து வாழுதல், தனிமையில் வாழுதல், முகாம்களில் வாழுதல் வேதனைக்குரியனவாகும்.

முதியவர் ஒருவர் இவ்வுலகை விட்டுப் பிரியும் போதுதான் அவர் எவ்வளவு பங்கு வகித்தார் என்பது தெரியும். உப்பு முடிந்தால் தெரியும் உப்பின் அருமை என்பர். ஈடு செய்ய முடியாத சிலவற்றை இழக்கவே செய்கிறது. மாதா, பிதா, குரு இவர்களை மதித்து வாழ பாடசாலை மட்டத்தில் இருக்கும் பண்புகள் மேலும் வளர்க்கப்பட வேண்டும். பெற்றோர் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். பிள்ளைகள் பொறுப்புடன் இதைப் பின்பற்ற வேண்டும். தான் பிழை செய்து கொண்டு மற்றவர்களிடம் நேர்மையை எதிர்பார்க்கக் கூடாது. பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு என்று இருவரும் புரிந்துணர்வுடன் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும்.

அரசு எல்லாம் செய்கின்றது என்பதற்காக நாம் முதியவர்களை மதிக்காது வேறொருவர் விருப்பத்திற்காக பெற்றோரைப் புறந்தள்ளுவது, சில குற்றங்களைச் சுமத்தி தனிமையில் விடுவது ஏற்றுக் கொள்ள முடியாது. முதுமையில் குழந்தை மனம் மீள வரவே செய்கிறது. அப்போதுதான் பெற்று வளர்த்த பிள்ளைகளிடம் பல எதிர்பார்ப்புக்கள் கிடைக்காது போகிறது. அது முதியோர் காப்பகம் வரை செல்லச் செய்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

நாம் எமது ஓய்வு நேரங்களில் உறவுகளுடன் கூடிக் களிக்க ஆலயங்களுக்கும் சுற்றுலாக்கள் சென்று மனப்பக்குவத்தை ஏற்படுத்த வேண்டும். முதுமை கூட (இறைவன்) இயற்கையின் தத்துவத்தை, உண்மை நிலையை உணர்த்துவனவாகவே உள்ளது.

நாம் இயற்கையோடு இணைந்து நல்ல சிந்தனையோடு தான தரும கைங்கரியங்களில் ஈடுபட முன்வர வேண்டும். **முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்** இதை அனுபவ ரீதியாக உணரும் ஆற்றல் எமக்கு ண்டு. கடந்த காலங்கள் எமக்கு நல்ல பாடங்களையே கற்றுத் தருகின்றன. வருங்காலம் நம்பிக்கையைத் தருகின்றது. நிகழ்காலத்தில் முதியோர் தினத்தை மட்டும் கொண்டாடி திருப்திப்பட முடியாது. ஏடுகளில் உள்ளவை எல்லாம் பலன் தருவன வல்ல. காற்றுள்ள போது தூற்றாது காலம் கடந்தபின், கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் போன்று அல்லாது முதியவர்களை மட்டுமல்ல நோயாளிகள், கர்ப்பிணிகள், குழந்தைகள், ஏதிலிகள், அநாதைகள், இடம் பெயர்ந்து முகாம்களில் வாழ்பவர்களை இனங்கண்டு மனித நேயத்துடன் எமது உழைப்பில் வலதுகை கொடுப்பதை இடதுகை அறியாத வகையில் செய்து சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த வேண்டும். அதுவே மகேசன் சேவை.

முதுமையை எதிர்கொள்ள நல்ல மனவுறுதியைக் கொண்டிருத்தல் வேண்டும். கவரிமானைவிட ஐந்தறிவு படைத்தவை அதற்கு முற்படுவதில்லை. முதியவர் மட்டுமல்ல எந்த வயதினரும் அந்த நிலைக்கு வரும்போது நீதிமன்றங்கள் கை கொடுக்கின்றன. மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரை ஐந்து துப்பாக்கி வேட்டு வைத்தாலும் ஒன்றின் சன்னமே தண்டனையைக் கொடுக்கிறது. அது எவரது துப்பாக்கியிலிருந்து புறப்பட்டது எனத் தெரியாது. நிகழ வேண்டும் என்பதே நீதி. வாழும்வரை வாழ மனித உரிமை இருக்கவே செய்கிறது. மானிடராகிய எமக்கு சிந்தித்து செயற்படுகின்ற பகுத்தறிவை ஆண்டவன் தந்திருக்கின்றான்.

நாம் நன்றாக சிந்தித்து உணர்ந்து செயற்படுவோமாக.


**க.கனகராசர் ச.நீ.**
**தோப்பு,**
**அச்சுவேலி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு


63

# மகா பராக்கிரமபாகு

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

**பராக்கிரமபாகுவின் திக்விஜயம்**


...அதன்பின்னர் புத்தகமத்தில் தங்கியிருக்கும் வேளையில், இராஜரட்டை மன்னன் கஜபாகுவின் சேனாதிபதிகளில் ஒருவனும், எல்லைப் புறக் காவலனும், காலவாவிப் பிரதேசத்தில் வாழந்து வருபவனுமாகிய கோகண்ணநகரகிரி என்பவனுக்கு தன்னை வந்து சந்திக்குமாறு ஓலை ஒன்றனுப்பி வைத்தான். அது தன் ஆதிக்க இறை மையைப் பரிசீலனை செய்வதற்கான ஒரு உபாயமாக அமைந் தது. இளவரசனின் வலிமையை அறிந்திருந்த சேனாதிபதி நகரகிரி, தன் அரசனிடம் அதற்கான அனுமதியைப் பெற வேண்டும் என்ற சிந்தனை அற்றவனாக புத்தகமத்துக்கு விரைந்து வந்த பராக்கிரம பாகுவைத் தன் பரிவாரங்களுடன் சந்தித்தான். அவனை வரவேற்ற இளவரசன், "நான் அழைத்ததும் விரைந்து வந்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன்" என்றான். சேனாதி பதிக்கும் அவனுடன் வந்தவர்களுக்கும் ஆபரணங்களையும் வேறு பரிசில்களையும் வாரி வழங்கினான். அன்றிரவு தன்னுடன் தங்கிச் செல்லு மாறு வேண்டினான்.



மகாபாராக்கிரமபாகு காலத்தின் பொட்குட் விகாரை -பொலநறுவை

அன்றிரவு சேனாதிபதி நகரகிரி, ஒரு கெட்ட கனவு கண்டான். தன்னை சுற்றி ஆயுதங்களுடன் வீரர்கள் நிற்பது போலவும், சிரசைக் கொய்து விடும்படி இளவரசன் கட்டளையிடுவது போலவும் கனவு கண்டு பயத்துடன் பெருங் குரலில் அலறியவாறு படுக்கையிலிருந்து கீழே நிலத்தில் விழுந்தான். பயத்துடன் எழுந்து தன் வீரர்களையும் பின் தங்கவிட்டு விட்டு காட்டினுள் நுழைந்து ஓடத் தொடங்கினான். தன் வெற்றிக் குடையையும் வாளையும் கூட விட்டுவிட்டு ஓடிக் காலவாவியை வந்தடைந்தான். இந்தச் சங்கதியைக் கேள்விப்பட்ட சேனாதிபதியின் வீரர்கள் செய்வறியாது தம்வசமிருந்த ஆயுதங்களை எறிந்து விட்டு காடுகளுக்குள் ஓடி காலவாவியைச் சென்று அடைந்தார்கள் இவற்றை அறிந்த பராக்கிரமபாகு தனக்குள் நகைத்துக் கொண்டான் என விபரிக்கின்றது சூளவம்சம்.


இவைஅனைத்தையும் கேள்விப்பட்ட கீர்த்தி ஸ்ரீமேகன் தன் அமைச்சர்களை அழைத்து ஆலோசனை நடாத்தினான். பராக்கிரமபாகுவைக் கைது செய்து வருமாறு படையனுப்பி வைத்தான். அப்படை பராக்கிரமபகுவால் முறியடிக்கப்பட்டது. வெற்றியடைந்த இளவரசன் போதி, கிராமத்திற்கு மீண்டான். அங்கிருந்து இலங்கா பர்வதத்திற்கு அருகே இறணமபுற கிராமத்தில் தங்கியிருக்கும் போது மன்னனின் படை மீண்டும் இளவரசனைக் கைப்பற்ற முயன்று படுதோல்வி கண்டது. அங்கிருந்து இளவரசனும் வீரர்களும் நவக்கிரிக்கிராமத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இந்நிலையில் கீர்த்தி ஸ்ரீ மேகனின் மந்திரிகள் தமது ஆலோசனைச் சபையைக் கூட்டினார். பராக்கிரமபாகு இளவரசன் தொடர்ந்து பெற்றுவரும் வெற்றிகள் அவர்களுக்குக் கலக்கத்தைக் கொடுத்தன. ஏராளமான வீரர்களுடன் சென்று இளவரசன் தங்கியிருந்த வீட்டினை முற்றுகையிட்டனர். இதனை அறிந்து இளவரசன் அவ்விடத்திலிருந்து தன் படையுடன் புறப்பட்டு கீர்த்தி ஸ்ரீ மேகன் இராச்சியத்தைக் கடந்து, கஜபாகுவின் ஆட்சிப் பிரதேசமான இராஜரட்டையிலுள்ள ஜனபத பிரதேசத்துக்குள் பிரவேசித்தான்.



மகாபாராக்கிரமபாகு சமுத்திரம்

தன் ஆட்சிப் பிரதேசத்துக்குள் இளவரசன் வந்துள்ளான் எனத் தன் மெய்க்காப்பாளர்கள் மூலம் அறிந்து கொண்ட கஜபாகு யாதுசெய்ய வேண்டுமென அமைச்சர்களுடன் ஆலோசனை புரிந்துபின்னர், ஆபரணங்களையும் வேறு விலை மதிப்பில்லாத பொருட்களையும் பரிசில்களாக அனுப்பி இளவரசனை அன்புடன் வரவேற்றான். இராஜரட்டை மன்னன் தன் இலட்சிய நோக்கங்களுக்கு எவ்வாறு துணை நிற்பான் என்பதை அறியவும், அந்த இராச்சியத்தின் நிர்வாக நடைமுறைகளை அறியவும் இளவரசன் விரும்பினான். அதற்கு முன் கஜபாக மன்னனும் அமைச்சர்களும் தன்னை அழைத்தமையில் இருக்கின்ற விருப்பினை அறிந்து வருமாறு தன் வீரனை செய்தி காவியோடு அனுப்பி வைத்தான். அதன் பின்னர் புலத்தி நகரின் (பொலநறுவை) சமீபமாக முகாமிட்டான். அதனைக் கேள்விப்பட்ட கஜபாகு தன் பரிவாரங்களோடு அவ்விடத்துக்கு வந்து இளவரசனைத் தன்னுடன் தன் யானையில் அமர்த்தி ஊர்வலமாகப் பொலநறுவை நகரினைக் காட்டியவாறு அரண்மனைக்கு அழைத்து வந்தான்.

**பராக்கிரமபாகுவின் அரண்மனை வாழ்வு**



மகாபாராக்கிரமபாகுவின் அரண்மனைசுவர் சிற்பங்கள்

புலத்தி நகர் அரண்மனையில் சில ஆண்டுகள் விருந்தினனாகத் தங்கி, பொலநறுவை இராச்சியத்தின் பல்வேறு தொழிற்சிறப்புகளையும் தெரிந்து கொண்டான். பிக்குமாருடன் நல்லுறவினை வளர்த்து இதிகாச புராணங்களைக் கற்றுக் கொண்டான். கஜபாகு மன்னனோடு முரண்பட்ட அமைச்சர்களுடனும் வீரர்களுடனும் தன் நெருக்கத்தைக் காட்டிக் கொண்டான். இவை மட்டுமின்றி கஜபாகு மன்னனோடு தன் உறவை வலுப்படுத்திக் கொள்ள வேண்டி, உருகுணையில் வசித்து வந்த தன் தாயாருக்கு ஒரு கடிதம் அனுப்பி, அங்கிருந்து தன் சகோதரி பகவதி இளவரசியைத் திரண்ட செல்வங்களுடன் அழைப்பித்து, செல்வங்களைத் தனதாக்கிக் கொண்டு, தங்கையை கஜபாகு மன்னனுக்கு மனைவியாக்கித் தன் உறவினைப் பலப்படுத்திக் கொண்டான். யானையிலமர்ந்து பொலநறுவைப் பிரதேசம் எங்கும் உலா வந்து வர்த்தகர்கள், சாதாரணப் பிரயைகள் வீரர்கள், அமைச்சர்கள் ஆகியோருடன் நெருக்கமான பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டான். பொலநறுவையில் தன் எதிர்கால இலட்சி யத்துக்கான உளவு பார்க்கும் வேலைகளைத் திறம்பட ஆற்றிக் கொண்டான்.

பராக்கிரமபாகுவின் வீரத்தை நிலைநாட் டப் பல சம்பவங்களைச் சூளவம்ச ஆசிரியர் ஆங்காங்கு சமயம் வாய்க்கும்போது விபரித்துள்ளார். ஒரு நாள் வீதிவழியே இளவரசன் வரும்போது குழு பிடித்த எருமை ஒன்று மூர்க்க வேசத் தோடு எதிர்ப்பட்டவர்களைத் தாக்கி யபடி ஓடிவந்தது. கண்டோர் அனைவரும் ஓடிவிட்ட நிலையில் இளவரசன் தனியாக அதன் முன் எதிர்ப் பட்டு பெரும் பயங் கரக்குரலில் சிங்கம் போல கர்ச்சித்தான். வெறி பிடித்து வந்த எருமை அவ்விடத்தை விட்டு ஓடித் தப்பியது. அதனைப் பார்த்த மக்கள் இளவரசனைப் பல வாறாகப் புகழ்ந்தேத்தினர். இதனைக் கேள்விப்பட்ட கஜபாகு அசூசை கொண்டான். தன் மீது கஜபாகு அசூசை கொண்டுள்ளான் என்பதை உணர்ந்து கொண்ட பராக்கிரமபாகு, தொடர்ந்தும் பொலநறுவையில் வசிப்பது ஏற்றதன்று எனப் புரிந்து கொண்டான். புலத்தி நகரைவிட்டு வெளியேறுவதற்கு முன் கஜபாகு மன்னனிடம் விடை பெற்றுச் செல்ல வேண்டுமெனக் கருதினான். கஜபாகு மன்னன் முன் சென்று தன் நாட்டிற்குச் செல்ல விரும்புவதாகச் சொன்னான். விடை கேட்டான். "உன் எண்ணங்கள் எல்லாம் நிறைவு பெற வாழ்த்து கின்றேன்" என வாழ்த்தி அனுப்பினான். அன்றே அரண்மனையை விட்டு வெளியேறினான்.



மகாபாராக்கிரமபாகுவின் அரண்மனைச் சிதைவுகள்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

242

## மூடர்கள் எது செய்தாலும்

காட்டின் ஒரு பகுதியில் பெரிய மாமரம் ஒன்று இருந்தது. அதன் கிளைகளில் நிறையப் பழங்கள் இருந்தன.

அந்த வழியாக ஐந்து பேர் வந்தனர். அவர்கள் அந்த மரத்தைப் பார்த்தனர்.

அவர்களில் ஒருவன் நான் மரத்தில் ஏறிப் பழங்களைப் பறிக்கிறேன். நாம் அனைவரும் சாப்பிடலாம் என்றான்.

மற்றவர்களும் பழத்தைப் பறித்துப்போடு என்றார்கள்.


அவனும் மரத்தில் ஏறினான்.

அந்த மரத்தின் கீழே புற்று ஒன்று இருந்தது. அதிலிருந்து பாம்பு ஒன்று வெளியே வந்தது.

மரத்தின் கீழே இருந்தவர்கள் அந்தப் பாம்பைப் பார்த்தார்கள். அதை விரட்டுவதற்காகக் கற்களை அதன் மேல் எறிந்தார்கள்.

தப்பிக்க நினைத்த பாம்பு அந்த மரத்தில் ஏறியது. சிறிது சிறிதாக மேலே செல்லத் தொடங்கியது.

கீழே இருந்தவர்கள் பாம்பு! பாம்பு! மரத்தின் மேலே ஏறுகிறது. கவனமாக இரு என்று கூச்சல்



போட்டார்கள்.

மரத்தில் இருந்தவன் அவர்கள் கூச்சலைக்கேட்டான். பாம்பு மேலே வருவதைப்பார்த்து நடுங்கினான்.

பாம்பிடமிருந்து தப்பிக்க நினைத்தான். மேலே மேலே ஏறி மரத்தின் உச்சிக்கே சென்று விட்டான். பாம்பும் அவனைத் தொடர்ந்து மேலே வந்தது.

ஐயோ! என்ன செய்வேன்! எப்படியாவது என்னைக் காப்பாற்றுங்கள் என்று அலறினான் அவன்.

கீழே இருந்தவர்கள் அவனை எப்படிக் காப்பாற்றுவது என்று குழம்பினார்கள்.

அவர்களில் ஒருவன் நம்மிடம் உறுதியான போர்வை உள்ளது. அதன் நான்கு முனைகளை நாம் நால்வரும் பிடித்துக் கொள்வோம். தலைக்கு மேலே உயர்த்தி அதை விரிப்போம்.

நண்பனை அதில் குதிக்கச் சொல்வோம். அவன் உயிர் பிழைப்பான் என்றான். அதன்படியே அவர்கள் போர்வையைத் தலைக்குமேலே உயர்த்தினார்கள். நால்வரும் அதன் முனைகளை உறுதியாகப் பிடித்துக் கொண்டார்கள்.

நண்பா! அங்கிருந்து நேராகப் போர்வையில் குதி. உனக்கு அடிபடாமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று குரல் கொடுத்தார்கள்.

மரத்தின் உச்சாணிக் கிளையில் இருந்தவன் அங்கிருந்து போர்வையில் குதித்தான். காற்றைவிட வேகமாக அவன் போர்வையின் நடுப்பகுதியில் விழுந்தான்.

அவன் எடையையும் விழுந்த வேகத்தையும் அவர்களால் தாங்க முடியவில்லை.

போர்வை வேகமாக இழுக்கப் பட்டது. அதனால் அவர்கள் நால்வர் தலைகளும் ஒன்றோடு ஒன்று மோதின. நால்வரும் மண்டை உடைந்து அங்கேயே இறந்தார்கள்.

## நல்ல நண்பர்கள்

முன்னொரு காலத்தில் அடர்ந்த பெரிய காடு ஒன்று இருந்தது. அதன் நடுவில் பெரிய ஏரி ஒன்று இருந்தது.

அந்த ஏரியின் தெற்குக் கரையில் விலங்குகளின் அரசனான சிங்கம் இருந்தது. கிழக்குக் கரையில் பறவைகளின் அரசனான கழுகு இருந்தது.

ஏரியின் ஒரு பகுதியில் திடல் ஒன்று இருந்தது. அதில் ஆமை ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தப் பெண் நாரையை ஆண் நாரை சந்தித்தது. அன்பே! என்னைத் திருமணம் செய்து கொள். நாம் மகிழ்ச்சியாக வாழலாம் என்றது.

மகிழ்ச்சியாக வாழ்வதா? இங்கே நமக்கு நிறைய ஆபத்துக்கள் வர வாய்ப்புண்டு. உதவிசெய்ய உமக்கு நண்பர்கள் இருக்கிறார்களா? அவர்கள் நம்மைக் காப்பாற்றுவார்களா? என்று கேட்டது பெண் நாரை.

அன்பே! ஏரியின் வடகரையில் சிங்கம் உள்ளது. கிழக்குக் கரையில் கழுகு உள்ளது. ஏரித்திடலில் ஆமை உள்ளது. இவை மூன்றும் என் நெருங்கிய நண்பர்கள் எனக்காக எதையும் செய்யக்கூடியவை. இனி நாம் திருமணம் செய்து கொள்ளலாம் அல்லவா? என்றது ஆண் நாரை.

மகிழ்ந்த பெண்நாரை திருமணத்திற்கு ஒப்புக்கொண்டது. இரண்டிற்கும் திருமணம் நடந்தது.

ஏரித்திடலில் இருந்த கடம்ப மரத்தில் அவை கூடு கட்டின. அங்கேயே மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன.

சிறிதுகாலம் சென்றது. பெண் நாரை முட்டைகளை இட்டது. அவற்றிலிருந்து குஞ்சுகள் வெளி வந்தன.

குடும்பம் பெருகியதைக்கண்டு நாரைகள் மகிழ்ச்சியடைந்தன. வேட்டையாடுவதற்காக வேடர்கள் சிலர் அங்கு வந்தனர். ஏரிக்குள் இறங்கித் திடலுக்கு வந்தனர். அந்தக்கடம்ப மரத்தின் கீழே ஓய்வெடுத்தனர்.

ஏராளமான கொசுக்கள் அவர்களைக் கடித்தன. கொசுக்களிடம் இருந்து தப்பிக்க நினைத்த அவர்கள் சுள்ளிகளைப் பொறுக்கினார்கள். அவற்றை வைத்துத் தீ மூட்டினார்கள். நிறையப் புகை எழுந்தது.

அந்தப்புகை கடம்ப மரத்தைச் சூழ்ந்தது. கூட்டிலிருந்த நாரைக் குஞ்சுகளால் புகையைத் தாங்க முடியவில்லை. கூச்சல் இட்டன. அவற்றின் கூச்சலைக்கேட்ட வேடர்கள் மேலே பார்த்தார்கள். பறவைக்கூடு அவர்களுக்குத் தெரிந்தது.

இந்த உயரமான மரத்தில் நம்மால் ஏறமுடியாது. மேலும் தீ மூட்டுங்கள். கூட்டில் உள்ள பறவைகள் இறந்து கீழே விழும். அவற்றின் இறைச்சியை உண்ணலாம் என்றான் அவர்களில் ஒருவன்.

அதன்படியே அவர்கள் நிறையச் சுள்ளிகளைப் போட்டுத் தீ மூட்டினார்கள். இதைப்பார்த்த பெண் நாரை நம்மையும் குழந்தைகளையும் கொல்லவே இவர்கள் தீ மூட்டுகிறார்கள். ஆபத்து நேரத்தில்தான் நண்பர்களின் உதவி தேவை. நிலைமையைச் சொல்லி உங்கள் நண்பர்களின் உதவியைக் கேளுங்கள் என்றது.

அங்கிருந்து பறந்த ஆண்நாரை கழுகிடம் வந்தது. வேடர்களால் தன் குடும்பத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தைச் சொன்னது.

நண்பா! நீ கவலைப்படாமல் உன் கூட்டிற்குச் செல். வேடர்களின் தீயை நான் அழிக்கின்றேன் என்றது கழுகு.

ஏரியில் நன்கு மூழ்கிய அது அப்படியே பறந்தது. வேடர்களின் தீயின் அருகே வந்தது. தன் உடலை உதறியது. தண்ணீர் கொட்டியதால் அந்



தத் தீ அணைந்தது. வேடர்கள் இன்னொரு இடத்தில் தீ மூட்டினார்கள். கழுகு அதையும் அணைத்தது.

வேடர்கள் தீ மூட்டுவதை நிறுத்தவில்லை. கழுகும் அதை அணைப்பதை நிறுத்தவில்லை. இப்படியே தொடர்ந்து நடந்தது. இதனால் கழுகு மிகவும் களைப்படைந்தது. இருந்தும் அது முயற்சியை விடவில்லை.

கூட்டிலிருந்த பெண்நாரை உங்கள் நண்பர் மிகவும் களைத்து விட்டார். இனியும் அவர் நமக்கு உதவிசெய்தால் இறந்துவிடுவார். இன்னொரு நண்பரின் உதவியைக் கேளுங்கள் என்றது. ஆமையிடம் சென்றது ஆண்நாரை. நடந்ததையெல்லாம் சொன்னது.

நீ கூட்டிற்குச் செல். உன் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் ஆறுதல் சொல். நான் வேடர்களின் தீயை அணைக்கின்றேன் என்றது ஆமை.

தன் வாய் நிறைய சேற்றுடன் கரைக்கு வந்தது. வேடர்களின் தீயில் சேற்றை உமிழ்ந்தது. தீ அணைந்தது.

ஆமையைப் பார்த்த வேடர்கள், பறவைகள் போனால் போகட்டும். கொழுத்த ஆமை கிடைத்தது. அதைப் பிடிப்போம் என்றார்கள்.

ஆமையின் மீது கயிறுகளை வீசினார்கள். அதை இழுக்கத் தொடங்கினார்கள். ஆமையோ அவர்களை ஏரிக்குள் இழுத்தது.

உதவி செய்ய வந்த ஆமை ஆபத்தில் சிக்கிக்கொண்டதே. அதை எப்படிக் காப்பாற்றுவது என்று சிந்தித்தது ஆண்நாரை. காட்டிற்குள் பறந்த அது சிங்கத்தைச் சந்தித்தது. நடந்ததையெல்லாம் சொன்னது.

நண்பா நீ என்னிடம் முதலில் வந்திருக்கவேண்டும். நான் அந்த வேடர்களை விரட்டியிருப்பேனே. மற்ற நண்பர்களுக்குத் துன்பம் தந்துவிட்டாயே என்றது சிங்கம்.

பயங்கரமாகக் கர்ச்சனை செய்தபடியே ஏரியை நோக்கி வந்தது. சிங்கத்தைக் கண்டு நடுங்கிய வேடர்கள் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்கள்.

நண்பர்கள் மூவருக்கும் நன்றி சொன்னது ஆண்நாரை. குடும்பத்துடன் மகிழ்ச்சியாக அங்கேயே வாழ்ந்து வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவிநெகும சட்டமூலத்தின் மூலம் அதிகாரப் பரவலாக்கத்திற்கு வேட்டு

## கொழும்பு மாநகர சபை உறுப்பினர் குகவரதன்

(கொழும்பு)

மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறித்து 13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கும் ஆரம்பத்தை அரசாங்கம் திவிநெகும சட்ட மூலத்தினூடாக ஆரம்பித்துள்ளது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலை வழங்க முடியாதென்ற சமிக்ஞையை இதன்மூலம் அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளதாக என ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகர் சபை உறுப்பினர் எஸ்.குகவரதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவே 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் உருவெடுத்தது.

ஆனால், இன்று வடபகுதி மக்களுக்கு மாகாண சபை அதிகாரங்களை அனுபவிக்கும் உரிமைகள் பறிக்கப்பட்டு அங்கு தேர்தலே நடத்தப்படாதுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் அரசாங்கம் திவிநெகும சட்ட மூலத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்தது. இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பின்னர் இச்சட்ட மூலத்தில் மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் இருப்பதால் மாகாண சபைகளின் அங்கீகாரத்தை பெற வேண்டுமென உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இச்சட்ட மூலத்தில் மாகாண சபைகளுக்கு உள்ள சில விடயங்கள் அடங்கியுள்ளன. இன்று அரசாங்கம் மாகாண சபைகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. ஆனால், வடமாகாண சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது ஆளுநரின் அனுமதியைப் பெற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்ற நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இதற்கெதிராக கூட்டமைப்பு நீதிமன்றம் சென்றுள்ளது. வடபகுதி மக்களுக்கு துரோகம் செய்து வஞ்சகத் தன்மையோடு திவிநெகுமவை நிறைவேற்றிக் கொள்ள அரசு முயல்கிறது.

அத்தோடு 13 ஆவது திருத்தத்தை ஆதரிக்கும் முஸ்லிம் காங்கிரசும் கிழக்கு மாகாண சபையில் அதிகாரங்களைப் பறிப்பதற்கான திவிநெகுமவுக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

இது தமிழ் பேசும் மக்களுக்கு செய்த ஒட்டுமொத்த துரோகத்தனமாகும். திவிநெகும 13 ஆவது திருத்தத்தின் மரண ஊர்வலம் ஆரம்பமாகும், எனவே, இனிமேலும் இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு 13 ஐயும் வழங்காது பதின்மூன்று பிளசையும் வழங்காது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக் குழு என்பதெல்லாம் வெறும் கண் துடைப்பாகும். காலத்தை கடத்தி சர்வதேசத்தையும் தமிழ் மக்களையும் ஏமாற்றும் ஒரு பொறிமுறையாகும். இதனால் 13 ஆவது திருத்தம் பிரசவிக்க காரணமாகவிருந்த இந்தியா இது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

யுத்தத்தால் அழிந்து போன வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு நியாயமான அதிகாரப் பரவலாக்கலுடன் அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாகும். (அ-2)

# இலங்கையில் பொருளாதார வளர்ச்சி வீதம் குறைவடையும்

(கொழும்பு)

2012 தொடக்கம் 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீத மதிப்பீட்டை ஆசிய அபிவிருத்தி வங்கி குறைத்துள்ளது. அத்துடன் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் குறையும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி எதிர்வு கூறியுள்ளது.

ஆசிய அபிவிருத்தியின் பிந்திய அறிக்கையின்படி இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மதிப்பீடு 7.2 இல் இருந்து 6.5 ஆக குறைந்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி 7 வீதமாக இருக்கும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது.

எனினும் ஏற்கனவே இது 8 வீதமாக இருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டிருந்தது.

உலக பொருளாதார மற்றும் கடுமையான நிதிக் கொள்கைகள் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது. (அ-2)

# இன்றைய நாளில் முன்னைய பதிவுகள்

2012.10 07

★ *1690*-ஆங்கிலேயர் கியூபெக் நகரைத் தாக்கினர்.

★ *1737*-இந்தியா, வங்காளத்தில் கிளம்பிய 40 அடி உயர அலை சுமார் 3 இலட்சம் பேரைக் கொன்றது.

★ *1769*-ஆங்கிலேய நாடுகாண் பயணி கப்டன் ஜேம்ஸ் குக் நியூசிலாந்தைக் கண்டுபிடித்தான்.

★ *1806*-ஆங்கிலேயர் ரால்ஃப் வெட்ஜ்வூட் என்பவரால் கார்பன் தாள் காப்புரிமம் பெறப்பட்டது.

★ *1840*-இரண்டாம் வில்லியம் நெதர்லாந்தின் மன்னனாக முடி சூடினான்.

★ *1874*-யாழ்ப்பாணத்துக்கான தந்தி இணைப்பு அநுராதபுரம் வரையில் நீடிக்கப்பட்டது.

★ *1919*-நெதர்லாந்தின் கே.எல்.எம். விமானசேவை ஆரம்பிக்கப்பட்டது.

★ *1940*-இரண்டாம் உலகப்போர்: ஜேர்மனி ருமேனியாவைத் தாக்கியது.

★ *1942*-அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஐக்கிய நாடுகள் அவையை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்தன.

★ *1943*-இரண்டாம் உலகப்போர்: வேக் தீவில் கைப்பற்றப்பட்ட அமெரிக்கக் கைதிகள் 100 பேரை ஜப்பான் கொன்றது.

★ *1944*-இரண்டாம் உலகப் போர்: அவுஷ்விட்ஸ் வதை முகாமில் யூதக் கைதிகளின் கிளர்ச்சி இடம் பெற்றது.

★ *1949*-ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு உருவாக்கப்பட்டது.

★ *1950*- சீனா திபெத்து மீதான தாக்குதலை ஆரம்பித்தது.

★ *1951*-மலேயத் தீவிரவாதிகள் பிரித்தானிய தூதுவர் சேர் ஹென்றி கேர்னி என்பவரைக் கொன்றனர்.

★ *1951*-இஸ்ரேலிய அரசு டேவிட் பென்-கூரியன் என்பவரால் அமைக்கப்பட்டது.

★ *1958*-பாகிஸ்தான் ஜனாதிபதி மிர்சா ஜெனரல் அயூப் கான் ஆதரவுடன் 1956 அரசமைப்பை நிராகரித்து இராணுவ ஆட்சியைக் கொண்டு வந்தார்.

★ *1959*-சோவியத் விண்கலம் லூனா 3 சந்திரனின் அதி தூரத்தியப் புகைப்படங்களை பூமிக்கு அனுப்பியது.

★ *1962*-சோவியத் ஒன்றியம் நோவயா சிம்லியா என்ற இடத்தில் அணுக்கரு சோதனையை நிகழ்த்தியது.

★ *1963*- எயிட்டி மற்றும் டொமினிக்கன் குடியரசு ஆகியவற்றை சூறாவளி ஃபுளோரா தாக்கியதில் 7 ஆயிரத்து 190 பேர் உயிரிழந்தனர்.

★ *2001*-ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா மூன்று முறை விமானத் தாக்குதல் நடத்தியது. வலிமையான கான்கிரீட் கட்டடங்களையும் ஊடுவிரு தாக்கும் டொமஹாக் ரக ஏவுகணைகளை ஏவியது.

★ *2004*-கம்போடியாவின் நொரொடொம் சிஹானூக் மன்னர் பதவியில் இருந்து விலகினார்.

### பிறப்புக்கள்

★ *1931*-டெஸ்மண்ட் டுட்டு, தென்னாபிரிக்க ஆயர், நோபல் பரிசு பெற்றவர்.

★ *1952*-விளாடிமிர் புடின், ரஷ்ய முன்னாள் ஜனாதிபதி.

★ *1978*-சகீர் கான், இந்திய வேகப்பந்து வீச்சாளர்.

★ *1979*-நரேன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்.

### இறப்புகள்

★ *1967*-நோர்மன் ஏஞ்செல், நோபல் பரிசு பெற்றவர் (பி.1872)

★ *1974*-சி.மு.இராசமாணிக்கம், முன்னாள் இலங்கைத் தமிழரசுக் கட்சி பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர்.

★ *1984*-அப்துல் காதர் லெப்பை, ஈழத்துக் கவிஞர் (பி.1913)

★ *1994*-நீல்ஸ் காஜ் ஜேர்ன், நோபல் பரிசு பெற்றவர் (பி.1911)

# வரட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வசதிகள்

## இடர் முகாமைத்துவ அமைச்சு 600 இலட்சம் ஒதுக்கியது

(கொழும்பு)

வரட்சியினால் பாதிக்கப்பட்ட சகல பிரதேசங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்கும் நிவாரணம் அளிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இதற்காக சுமார் 600 இலட்சம் ரூபா மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரட்சியினால் நீர்த்தேக்கங்களில் நீர் பெருமளவில் வற்றியுள்ள நிலையில் குருநாகல், அநுராதபுரம் உட்பட நாட்டின் பல பிரதேசங்களில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு பௌசர் மூலம் நீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சில பிரதேசங்களில் பௌசர் மட்டுமன்றி நீர்பெறும் சிக்கல் காணப்படுகிறது.

கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை தவிர்ந்த சகல மாவட்டங்களிலும் வரட்சியினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணங்கள் வழங்க மாவட்ட செயலாளர்களினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரிடம் இதற்காக செலவு செய்ய போதியளவு நிதி உண்டு. தேவை ஏற்பட்டால் மேலும் நிதி வழங்க உள்ளோம்.

இதேவேளை, வரட்சியான கால நிலையை அடுத்து சில பிரதேசங்களுக்கு ஒரு சில மணி நேரங்கள் மாத்திரம் நீர் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்து.

குடிநீர் தட்டுப்பாடு காணப்படும் நிலையில் மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறும் குடிநீருக்காகவும் உணவு சமைப்பதற்காகவும் மாத்திரம் நீர்ப்பாசனசபை வழங்கும் நீரை உபயோகிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் எதிர்பார்ப்பது

# சலுகைகளையா...? உரிமைகளையா...?

அண்மையில் முள்ளிவாய்க்காலுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, தெற்கிலுள்ள மக்கள் அனுபவிக்கின்ற அத்தனை வசதி, வாய்ப்புகளும் இடம்பெயர்ந்த வடக்கு மக்களுக்கும் கிடைக்கும் என்று உறுதியளித்திருந்தார். இந்தளவுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முள்ளிவாய்க்காலுக்கு வருகிறார் என்றதும், மெனிக்பாம் முகாமை அவசர அவசரமாக மூடிவிட்டு, அங்கிருந்த மக்களைக்கொண்டு போய் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற காட்டில் இறக்கிவிட்டிருந்தனர் அரச படையினர்.

சரியான இருப்பிட வசதியில்லை, குடிக்க நீர் இல்லை, சொந்த இடங்களில் குடியமர வழியில்லை, கண்ணிவெடிகள் சரியாக அகற்றப்படாமல், மனித உடல் எச்சங்களும் ஆபத்தான ஆயுதங்களும் நிறைந்திருந்த -இறுதிப்போர் நடந்த அந்தப் பகுதியில், இறக்கிவிடப்பட்ட மக்களிடம் தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெற்கிலுள்ள மக்களுக்கு கிடைக்கின்ற அத்தனை வசதிகளும் உங்களுக்கும் கிடைக்கும் என்று உறுதி யளித்திருந்தார். போர் முடிவுக்கு வந்த மறுநாளோ அல்லது ஒருசில வாரங்களிலோ அல்லது ஓரிரு மாதங்களிலோ கூட, அவர் இதைச் சொல்லியிருந்தால், பொருட்படுத்தியிருக்கலாம். போர் முடிந்து முன்றரை வருடங்கள் ஆகிவிட்ட இத்தருணத்தில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

போர்முடிந்து முன்றரை வருடங்கள் ஆகிவிட்ட நேரத்திலும் கூட, எந்த அடிப்படை வசதிகளும்செய்து கொடுக்கப்படாமல், மீள்குடியேற்றம் என்ற பெயரில் நடுத்தெருவில் கொண்டு வந்துவிடப்பட்ட மக்களிடம்தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இதனைக் கூறியுள்ளார். அதேவேளை, அவரது வக்குறுதியில் இருந்து ஒன்றை மட்டும் புரிந்துகொள்ள முடிகிறது. பொருளாதார வசதி வாய்ப்புகளின் மூலம் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தலாம் என்ற கனவில் தான் அரசாங்கம் இன்னமும் மிதந்து கொண்டிருக்கிறது என்பதே அது.

போர்முடிவுக்கு வந்தபின்னர் நடத்தப்பட்ட தேர்தல்களின் போதெல்லாம், இது சாத்தியமில்லாத பகல் கனவு என்று தமிழ்மக்கள் நிரூபித்திருந்த போதும், பொருளாதார வசதி வாய்ப்புகளைக் காட்டி தமிழ்மக்களின் உரிமைக்குரலை அடக்கவே அரசாங்கம் முனைகிறது. தமிழர்கள் எதிர்பார்க்கின்ற அரசியல்தீர்வு ஒன்றை வழங்க மறுக்கின்ற அரசாங்கம், அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த தயங்குகின்ற அரசாங்கம் தெற்கிலுள்ள மக்கள் அனுபவிக்கும் வசதி வாய்ப்புகள் தமிழர்களுக்கும் கிடைக்கும் என்று கூறுவது வேடிக்கை.

தெற்கிலுள்ள மக்களைப்போன்று சமமான உரிமைகளுடன் வாழவே தமிழர்கள் விரும்புகிறார்களேயன்றி, தெற்கிலுள்ள மக்கள் அனுபவிக்கும் வசதி வாய்ப்புகள் தமக்கும் கிடைக்க வேண்டும் என்பதை முதல்தெரிவாக எதிர்பார்க்கவில்லை. அதற்காக சமமான வசதி வாய்ப்புகள் தமக்கு கிடைப்பதை வடக்கிலுள்ள மக்கள் விரும்பவில்லையென்று அர்த்தமில்லை. சமமான உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டாலே, அவர்களுக்கான சமமான வசதிவாய்ப்புகள் தானாக கிடைக்கும். இதனை புரிந்துகொள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தவறிவிட்டார் என்று கூறமுடியாது. தமிழ் மக்களின் அபிலாசைகளை, அவர்களின் எதிர்பார்ப்புக்களை அரசாங்கம் அறியாதிருக்க வாய்ப்பில்லை. இருந்தபோதிலும், அவர்களைப் புறமொதுக்கும் கொள்கையில் இருந்து இன்னமும் அரசாங்கம் விடுபடவில்லை. இதற்கு சரியான உதாரணம், அண்மையில் கிழக்குனமாகாண சபைக்கு நடந்த தேர்தலின் பின்னர், அங்கு ஒரு தமிழ் அமைச்சரைக் கூட ரசாங்கம் நியமிக்காததைக் குறிப்பிடலாம். இது ஒரு பழிவாங்கும் நடவடிக்கையாகக் கூட கருதப்படத்தக்கது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழர்கள் பெரும்பான்மையானோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே ஆதரித்தனர். கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவான 12 தமிழ் உறுப்பினர்களில் ஒரே ஒருவர்தான் அரச தரப்பைச் சேர்ந்தவர். தமிழர் எவரும் அமைச்சராக நியமிக்கப்படாததை, அதற்கான பழிவாங்கலாகவும் குறிப்பிடலாம். முன்னாள் கிழக்கு முதல்வர் சந்திரகாந்தனுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டதாகவும், அவர் அதை ஏற்க மறுத்த தாகவும் கூறப்பட்டாலும்கூட, அது உண்மையானதா என்பது சந்தேகம் தான். ஏனென்றால் அமைச்சர் பதவிகளை கூட்டணிக் கட்சிகளுக்கிடையில் பங்கீடு செய்யும் போது, தமிழர் எவரும் அமைச்சராக்கப்பட வாய்ப்பிருந்திருக்கவில்லை. முதல்வர் பதவியைதானே வைத்துக்கொண்ட ஆளும்கட்சி, முஸ்லிம் காங்கிரசுக்கு 2 அமைச்சர் பதவிகளை வழங்க வேண்டியிருந்தது. மிஞ்சியது, இரண்டேயிரண்டு அமைச்சர் பதவிகள்தான். அதில் ஒன்றை எப்படியேனும் சிங்களப் பிரதிநிதிகளுக்கு வழங்கியாக வேண்டும். அடுத்ததை தேசிய காங்கிரசுக்கு ஒதுக்க வேண்டியிருந்தது.

தேசிய காங்கிரஸ்தான் அம்பாறையிலும் மட்டக்களப்பிலும் முஸ்லிம்களின் கணிசமான வாக்குகளை உடைத்தது. அந்தக் கட்சிக்கு மாகாண சபையில் 3 ஆசனங்கள் கிடைத்தும் இருந்தன. எனவே மொத்தமுள்ள முதல்வர் உள்ளிட்ட 5 அமைச்சர் பதவிகளையும் பகிர்ந்து கொடுத்த பின்னர், தமிழ் பிரததிநிதிக்கு கொடுப்பதற்கு எதுவுமே மிஞ்சியிருக்கவில்லை. முன்னாள் முதல்வர் சந்திரகாந்தன் பதவியை வேண்டாம் என்று ஒதுக்கியிருந்தால் கூட, தமிழர் ஒருவரை அமைச்சராக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதியிருந்தால், நியமன உறுப்பினர் நவரட்ணராஜாவுக்கேனும் அதை வழங்கியிருக்க முடியும். அதுபற்றியெல்லாம் அரசாங்கம் சிந்திக்கவேயில்லை. சபைமுதல்வர், தவிசாளர் பதவிகள் கூட தமிழருக்கு ஒதுக்கப்படவில்லை. இது 40 வீதமான தமிழர்கள் வாழும் கிழக்கில் தமிழர்களை ஓரம் கட்டிய திட்டமிட்ட செயல் என்பதை விட வேறு எப்படி உணர முடியும்.

இதுமட்டுமல்ல, கிழக்கு மாகாணச் செயலர் பதவியில்கூட தமிழரை விட்டு வைக்கவில்லை. சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், கடந்தவாரம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹசன் அலி வெளியிட்ட ஒரு தகவல் இன்னமும் அதிர்ச்சியளிக்கத் தக்கது. கிழக்கு மாகாண சபையில், அரசதரப்புக்கு ஆதரவளிக்க, தாம் முன்வைத்த நிபந்தனைகள் இன ஒற்றுமையைக் குலைக்கும் என்பதால், அதை இப்போது வெளியிட முடியாது என்று கூறியிருந்தார். அவ்வாறாயின் இனநல்லிணக்கம், இன ஒற்றுமை என்ற சமாதிக்கு மேல் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின்கீழ்தான் கிழக்கில் ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது. இதனால், பாதிக்கப்படக்கூடிய இனம் எது என்பதை எவருமே சொல்லாமல் புரிந்துகொள்ள முடியும். ஆட்சிக்காக இன ஒற்றுமையை பாதிக்கும் இணக்கப்பாடுகளை எட்டத் தயாராக உள்ள ஒரு அரசாங்கம், நீதியாகவும் நியாயமாகவும் நடந்துகொள்ளும் என்பதற்கான உத்தரவாதத்தை தமிழர்களால் எப்படிப் பெறமுடியும். சிங்கள மக்களுக்கே -அதுவும் போரை வென்று கொடுத்த படையினருக்கே நீதி கிடைக்காது என்ற சூழலில் தமிழர்களின் நிலை எப்படியிருக்கும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அமைச்சர் ஒருவரின் மகனால் தாக்கப்பட்ட ஒரு இராணுவ அதிகாரிக்கு நேர்ந் துள்ள கதி, இலங்கையில் நிலவும் அரசியல் அநீதியின் உச்சத்தைப் பிரதிபலித்தது. இதுபோன்ற சம்பவங்கள் தமிழர்களைப் பொறுத்தவரையில் சாதாரணமானது. அப்பிடியிருக்க, அரசாங்கத்தின் மீது அவர்களால் எவ்வாறுநம்பிக்கை கொள்ளமுடியும்? கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விடுவதையே வாடிக்கையாகக் கொண்ட அரசாங்கத்தினால், தமிழர்களுக்கு சமமான உரிமைகளும், வசதிவாய்ப்புகளும் பெற்றுக் கொடுக்கப்படும் என்றுஎதிர்பார்க்க முடியாது. அரசாங்கத்தின் ஏமாற்று வேலைகளும் பொய் வாக்குறுதிகளும் தான் தமிழர் தரப்பை இன்று பேச்சு மேசையில் இருந்தே ஒதுங்கி நிற்கவைத்துள்ளது.



தமிழர்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருந்திருந்தால், முள்ளிவாய்க்கால் அனர்த்தம் நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை. நியாயமான முறையில் அதிகாரங்களைப் பகிர்வதற்கு அரசு உண்மையாக முயன்றிருக்குமேயானால், நிலைமை இப்படியா இருந்திருக்கும்?

வடக்கு-கிழக்கில் தமிழ்மக்களின் இருப்பையே சிதைத்து சின்னாபின்னமாக்கிவிட்டு, சர்வநிலையிலும் தமிழ் சமூகத்தை தரையோடு தரையாய் சாய்த்துவிட்டு, இப்போ தூக்கி நிமிர்த்துவதற்காக, புலம்பெயர்ந்தவர்கள், உள்ளூர், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் எடுக்கும் முயற்சிகளையும் முடக்கிவிட்டு, சர்வதேச அரசுகள் செய்கின்ற உதவிகளையும் பாதிக்கப்பட்ட தமிழர் தவிர்ந்த ஏனைய சமூகத்தவருக்கும் பங்குபோட்டுக் கொண்டிருக்கிறது சிறிலங்கா அரசு என்பது தமிழ்மக்கள் அறியாததல்ல.

இருப்பினும் எல்லா உதவிகளும் தமிழர்களை மீள்குடியேற்றுவதற்காகவே செய்யப்படுகிறது என்று சர்வ தேசத்தை நம்பவைக்க முயலும் நாடகமாகமாடுகிறது அரசு.

தமது உரிமைகளுக்காக போராடிய இனத்துடன் சலுகைகளைப் பற்றிப் பேசி காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

ஒரு கிலோமீற்றர் நீளமான மனித புதைகுழியை முள்ளிவாய்க்காலில் வைத்துக்கொண்டு, அதே இடத்தில் நின்று இப்படி ஜம்பமடிக்க உலகில் வேறு எந்த அரசாங்கத்தினால் முடியும்?

நன்றி:இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை நாடாளுமன்ற தேர்தல் முறைமைகளையும் மாற்றுவோம்

## அடித்துக்கூறுகிறார் அமைச்சர் தினேஷ்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தச் சட்டமூலம் என்பவற்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய பின்னர் மாகாணசபை பாராளுமன்ற தேர்தல்களிலும் அவ்வாறான முறைமையை அமுல்படுத்துவது குறித்து கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளோம் என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்காலத்தில் அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்கள் சட்டமூலம் என்பன எதிர்வரும் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளன.

இந்நிலையில் பாராளுமன்ற தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல் முறைமைகளும் எதிர்காலத்தில் மாற்றப்படும் என்று வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தச் சட்டமூலத்தின் பிரகாரம் 70 வீதம் தொகுதி வாரி அடிப்படையிலும் 30 வீதம் விகிதாசார முறைமை அடிப்படையிலுமான தேர்தல் ஊடாக உள்ளூராட்சிமன்றங்களுக்கு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இது நாட்டின் தேர்தல் வரலாற்றில் முக்கிய திருப்பமாகும். விருப்பு வாக்கு முறைமையில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும் என்று அனைவரும் விரும்புகின்றனர். அந்த வகையில் எதிர்காலத்தில் ஏனைய தேர்தல்களிலும் இந்த முறைமையை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்ந்தறிந்து வருகின்றோம்.

அதாவது பாரா்ளுமன்ற தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல்களிலும் இவ்வாறான கலப்புமுறைமையை அறிமுகப்படுத்துவது சிறந்ததாக இருக்கும் என்று கருதுகின்றோம். எனவே எதிர்காலத்தில் இது தொடர்பில் சகல அரசியல் கட்சிகளும் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். இது எதிர்காலத்துக்கு சிறந்ததாக அமையும் என்றார். (அ-2)

## 45 ஆவது ஆண்டு விழாவும் சிறுவர் தினமும்

(யாழ்ப்பாணம்)

வல்வை கணபதி படிப்பகத்தின் 45 ஆவது ஆண்டு விழாவும் சிறுவர் தின விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நெடியகாடு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் தலைவர் ச.ஜெயகணேஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மருத்துவர் சி.சோதியம்பலம் கலந்து கொள்வார். அன்றையதினம் கணபதி தையல் வகுப்பு மாணவியரின் கண்காட்சியும் மலிவு விற்பனையும் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை கணபதி படிப்பக மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு படிப்பக நிர்வாகிகள் கேட்டுள்ளனர். (அ)



கோபி ஏஜென்சி நிறுவனத்தின் கிளிநொச்சி கிளைக்கான விளம்பர துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது அதன் நிறுவுநர் பா.சந்திரகுமாரிடமிருந்து வலய வியாபார அபிவிருத்தி அதிகாரி சுபிகரன் விளம்பர துண்டுப்பிரசுரங்களை பெற்றுக்கொள்வதையும் நிறுவன ஊழியர்களையும் படத்தில் காணலாம்.

## கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் விவாதப் போட்டிகள்

(மல்லாவி)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தமிழ்ச்சங்கத்தினால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் நாடகம் மற்றும் விவாதப் போட்டிகள் (திறந்தபோட்டிகள்) எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வெள்ளவத்தை கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற பாடசாலைகளுக்கிடையில் இப்போட்டி நடைபெறுவதுடன் அகில இலங்கை ரீதியான வெற்றியாளர்களுக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறும் முத்தமிழ் விழா நிகழ்வின் போது பரிசில்களும் வழங்கப்படும்.

மாவட்ட ரீதியில் வெற்றி பெற்ற ஏனைய போட்டியாளர்களுக்கு சான்றிதழ்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர் 071 2425 568, 077 5059 936 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-15)

## சிறுவர் அரங்கு நிகழ்வுகளில் உபமாகாண போட்டிகள்

(மல்லாவி)

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற சிறுவர் அரங்கு நிகழ்வுகளில் உப மாகாணமட்ட போட்டி நடைபெறவுள்ள திகதிகள் தொடர்பான விபரங்களை வடக்கு மாகாணகல்வி திணைக்கள தமிழ்ப் பாட உதவிக்கல்விப்ப பணிப்பாளர் க.தர்மலிங்கம் அறிவித்துள்ளார்.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்து கல்லூரியில் யாழ். மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களுக்குமான உபமாகாண மட்டப்போட்டி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவு/இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உள்ள கல்வி வலயங்களுக்கும் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கிளி/மத்திய கல்லூரியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவ்ட்டங்களில் உள்ள கல்வி வலயங்களில் உள்ள உபமாகாண மட்டப்போட்டி நடைபெறவுள்ளது.

மேற்படி மூன்று உபமாகாண மட்ட போட்டிகளிலும் முதலாம் இடத்தை பெற்ற நிகழ்வுகளுக்கான மாகாண மட்ட பரிசளிப்பு விழா இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவின் போது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# நவம்பர் மாதத்தில் இசை நிகழ்ச்சிகள் வேண்டாம்

## திரைப்பட இயக்குநர் செல்வமணி கோரிக்கை

(கொழும்பு)

கனடாவில் எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி இசைஞானி இளையராஜாவின் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிலையில் மாவீரர் மாதமான நவம்பர் மாதத்தில் களியாட்டங்களை தவிர்க்குமாறு இந்திய திரைப்பட இயக்குநர் ஆர்.கே.செல்வமணி கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இப்பூமி பந்தில் தமிழன் என்றொரு இனம் இருப்பதற்கு அடையாளமாக இருப்பவர்கள் யாரென்றால் ஈழத்திலே புறநானூற்றை புரட்டிப் போட்ட 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அந்த மாவீரர்கள் தான்.

ஈழத்திலே தமிழர்களின் உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தமிழ்ப்பெண்ணின் மானத்தை காப்பதற்காகவும் தன்னுயிர் ஈந்த அந்த மாவீரர்களின் அளப்பரிய தியாகங்களை ஆண்டுதோறும் நினைவுகூரும் மாதந்தான் நவம்பர் மாதமாகும்.

பல்வேறு இயக்கங்களை சேர்ந்த இந்த மாவீரர்கள் கடந்த 50 வருடங்களாக ஈழத் தமிழர் விடுதலைக்காகவும் நம் சந்ததியின் சுதந்திரத்திற்காகவும் தங்களின் இளமைக் கனவுகளையும் உற்றார், பெற்றோரையும் மறந்து தங்களையே ஆகுதியாக்கி வீரகாவியமானவர்கள் ஆவார்கள்.

வாழவேண்டிய வயதிலே அன்பு மனைவியையும் ஆருயிர்க் கணவனையும் மழலைச் செல்வங்களையும் மறந்து மண் விடுதலைக்காக மரணித்திருக்கின்றார்கள். இப்படி ஆணும் பெண்ணும் சரிசமனாக வீரத்துடன் போராடி காற்றோடு கலந்துபோனவர்கள் என்றுள்ளது. (அ-2)

## நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வேலணையூர்பண்டிதைவேதநாயகியின் ஆக்கங்கள் ஆராய்ச்சிகளின் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயத்தில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை தலைவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ஆசியுரையினை ஓய்வுநிலை அதிபர்களான ஆ.சபாரத்தினம், மு.திருஞானசம்பந்தப் பிள்ளை ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நூலின் வெளியீட்டுரையை யா/வைத்தீஸ்வரா வித்தியாலய அதிபர் மு.மகேந்திரன் ஆற்ற தொடர்ந்து நூலிற்கான ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை உதவி விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் ஆற்றவுள்ளார். (அ-9)

# ராஜபக்ஷ சர்வதேச வி.நிலையத்தில் கருமபீடங்கள் அமைக்கப்படும்

## 62 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

மாத்தளை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் பயணிகளின் வருகை மற்றும் செல்லுகைகளுக்கென குடிவரவு குடியகல்வு கரும பீடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கென அரசு 62 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதாக அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் மாத்தளை சர்வதேச விமான நிலையத்தினுடாக வரும், செல்லும் பயணிகளுக்கு சர்வதேச தரத்தில் குடிவரவு குடியகல்வு வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஏதுவாக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் வருகை பகுதியிலும் செல்லுகை பகுதியிலும் 10 குடிவரவு குடியகல்வு கரும பீடங்கள் நிறுவவும் அவை அனைத்தும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய உபகரணங்களுடன் இணைய கட்டமைப்புடன் கூடியதாக நிறுவுதல்.

மேலும் இரவு பகல் சுழற்சி முறையில் குடிவரவு குடியகல்வு உத்தியோகத்தர்களை கடமைக்கு உட்படுத்தல் போன்ற விடயங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைவிமர்சனம்

# தாண்டவம்


நடிகர்: விக்ரம், நாசர், சந்தானம், ஜகபதி பாபு, கோட்டா ஸ்ரீனிவாசராவ், நடிகை: அனுஷ்கா, எமி ஜாக்சன், லட்சுமிராய், சரண்யா

இயக்குனர்:விஜய்

இசை:ஜி.வி. பிரகாஷ்

ஒளிப்பதிவு:நிரவ்ஷா

விக்ரம் காசி படத்தையடுத்து பார்வையற்றவராக நடித்த இரண்டாவது படம்தான் தாண்டவம். பார்வையில்லாமல் தானே ஒரு ஒலியை எழுப்பி அதை செவி மூலம் கேட்டு செவிகளை கண்ணாகப் பயன்படுத்தும் திறன் உடைய வர் விக்ரம். லண்ட னில் ஒரு வரை




கொலை செய்து விட்டு இவர் மயமாகிறார். இந்த கொலையை லண்டன் பொலிஸ் அதிகாரி யான நாசர் விசாரணை செய்கிறார். முதலில் அங்கு நின்றிருந்த காரை வைத்து சந்தா னத்தை பிடித்து விசாரிக்கின்றனர். விசார ணையில் இவர் அப்பாவி என்பதை உணர்ந்து நாசர் விட்டுவிடுகிறார். லண்டன் அழகியாக தேர்வாகும் எமி ஜாக்சன் உலக அழகிப் போட்டி யில் கல ந்து கொள்ள வேண்டும் என ஒரு தனியார் நிறுவனம் கேட்டுக்கொள்கிறது. இதற்காக போலியாக சமூக சேவையில் ஈடுபடுவது போன்ற புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. இவ்வாறு ஒரு முதியோர் இல்லத்தில் புகைப்படம் எடுக்கும்பொழுது விக்ரமை சந்திக்கிறார் எமி.

இந்த சந்திப்பினால் விக்ரம் மீது அனுதா பம் ஏற்படுகிறது. அது காதலாக மாறுகிறது. இதனால் விக்ரமை பின் தொடர ஆரம்பிக்கிறார் எமி ஜாக்சன். இதற்கிடையே மீண்டும் அடுத்தடுத்து இரண்டு கொலைகளை செய்கிறார் விக்ரம். இதில் ஒரு கொலைக்கு மீண்டும் சந்தானம் காரிலேயே செல்கிறார். விக்கிரமை இறக்கி விட்டுவிட்டு காரிலேயே காத்திருக்கும் சந்தானத்தை மீண்டும் விசாரணையில் சந்தானம் பேப்பரில் வந்த விக்ரம் போட்டோவை காண்பித்து இவன் தான் காரில் வந்தான் என பொலிசாரிடம் தெரிவிக்கிறார்.

ஒரு கட்டத்தில் எமி ஜாக்சனுக்கும் விக்ரம் தான் கொலைகாரன் என்பது தெரியவருகிறது. பொலீஸ் விக்ரமை துரத்துகிறது. ஆனால் அவர் பொலிசாரின் பிடியிலிருந்து தப்புகிறார். இந்திய அரசின் உளவுப்பிரிவில் விக்ரம் மற்றும் ஜெகபதிபாபு இருவரும் நெருங்கிய நண்பர்கள். விக்ரமுக்கு ஒரு கூரியர் வருகிறது. அது அவருடைய திருமண அழைப்பிதழ். ஊருக்குச் செல்லும் இவர் திருமணத்தை நிறுத்த முயற்சிக் கிறார். அங்கு திருமண பெண்ணான அனுஷ் காவை கண்டதும் மனம் மாறி திருமணம் செய்து கொள்கிறார்.

திருமணம் முடிந்து வருவதற்குள் இந்தியாவில் ஒரு மோசமான வெடிகுண்டு உருவாக்கப்பட்டுள்ளது என்ற செய்தி உளவுத்துறைக்கு தெரியவருகிறது. இந்த வழக்கு ஜெகபதி பாபு விடம் ஒப்படைக்கப்படுகிறது.



இவர் பணத்துக்கு ஆசைப் பட்டு தேசவிரோத செயலுக்கு உடந்தையாகிறார். தன்னுடைய அலுவலகத்தில் இதற்கு யாரோ உடந்தையாக இருப்பதை அறிந்த விக்ரம், அமைச்சரிடம் பேசி கேசை தன் வசம் எடுத்துக் கொள்கிறார். இந்த கேசிற்காக லண்டன் செல்லும் விக்ரம் அங்கு தீவிரவாதியாக முத்திரை குத்தப்படுகிறார். அப்பொழுது இதற்கு காரணமான சதிகார கும்பலை பார்த்து விடுகிறார். இதற்கு உடந்தையாக இருப்பது ஜெகபதி பாபு என்பதையும் தெரிந்து கொள்கிறார். லண்டனில் ஜெகபதி பாபு தன் மனைவியுடன் அனுஷ்காவையும் அழைத்து வருகிறார்.



ஜெகபதி பாபுவை சரண்டர் ஆகச் சொல்கிறார் விக்ரம். ஆனால் ஜெகபதி பாபு உன் மனைவி உன்னைப் பார்க்க நாளை காலை லண்டனில் உள்ள பாலம் அருகே வருவார் என்று சொல்லி போனைத் துண்டித்து விடுகிறார். மறுநாள் விக்ரம்–அனுஷ்கா இருவரும் சந்திக்கிறார்கள். அப்போது பாம் வெடித்து அனுஷ்கா இறந்து விடுகிறார். விக்ரமுக்கு கண் போய் விடுகிறது.

இத்தனைக்கும் காரணமான ஜெகபதி பாபுவை பழி தீர்த்தாரா? தான் நிரபராதி என்பதை நிரூபித்தாரா? எமி, விக்ரம் மீது கொண்ட காதல் என்ன ஆனது? என்பதே மீதிக்கதை .....

அனுஷ்கா வரும் காட்சிகள் அனைத்தும் அருமை. விக்ரம்–அனுஷ்கா இருவரும் சந்திக்கும் காட்சிகளும், ஒருவரையொரு வர் புரிந்து கொண்டு காதலை சொல்ல முயற்சிக்கும் காட்சிகள் அழகு. சந்தானம் வரும் காட்சிகள் அனைத்தும் கலகலப் பூட்டுவதாக உள்ளது. பொலிஸ் அதி காரியாக வரும் நாசர் ஐ-பேட் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை அழகாக காண்பித்துள்ளார்.

ஜி.வி. பிரகாஷ் இசையில் பாடல் அனைத்தும் கேட்கும் ரகம். லண்டனை அழகாக படம் பிடித்துள்ளார் ஒளிப்பதி வாளர் நிரவ்ஷா. இயக்கு நர் விஜய் தாண்டவத்தை எதிர்பார்த்த அளவுக்கு தரா தது விக்ரம் ரசிகர்களுக்கு பெருத்த ஏமாற்றம்.

நான்கைந்து படங்களை ஒரே நேரத்தில் பார்த்த திருப்தியை தருவது பலமா? பலவீனமா? என்பதை இயக்குநர் விஜய் தான் சொல்ல வேண்டும்!!!

ஆக மொத்தத்தில், தாண்டவம், கோர தாண்டவமும் இல்லை, ஆனந்த தாண்ட வமும் இல்லை! விஜய் – விக்ரம் ! தாண்டவம்! எனத் தாண்டுவோம்!!

# காதலில் விழுந்த காஜல் அகர்வால்



மகேஷ்பாபு- காஜல் அகர்வால் நடிப்பில், பூரி ஜெகன்னாத் இயக்கத்தில் வந்த, பிசினஸ்மேன் என்ற திரைப்படம், லட்சுமி ஜோதி கிரியேஷன்ஸ் பட நிறுவனத்துக்காக, ஏ.எல்.பாலாஜி தயாரிப்பில் தற்போது, அதே பெயரிலேயே தமிழ் பேச தயாராகிறது. இதற்கான தமிழ் வசனத்தை கண்ணன் எழுதி உள்ளார். மகேஷ்பாபு-காஜல் அகர் வால் தவிர, பிரகாஷ்ராஜ், நாசர், சாயாஜி ஷிண்டே போன்ற தமிழ் ரசிகர்களுக்கு நன்கு தெரிந்த முகங் கள் பலரும் படத்தில் உள்ள னர். படத்தில் இடம்பெறும் காதல் காட்சிகளில், நிஜகாதலர் களைப் போல, மகேஷ்பாபுவும், காஜல் அகர்வாலும், மிகவும் நெருக் கமாக நடித்துள்ளனர். அதனால், உண்மையாகவே மகேஷ் பாபுவின் காதல் வலையில் காஜல் அகர்வால் விழுந்து விட்டாரோ? என தெலுங்கு சினிமா வட்டார த்தில் பேச்சு அடிபடுகிறது.

# எனக்கு செக்யூரிட்டி தேவையில்லை

பெரும்பாலும் நடிகைகள் அவுட்டோர் படப்பிடிப்புகளுக்கு சென்றால் அவசியம் உறவினர் யாரையாவது பாதுகாப்புக்காக உடன் அழைத்து செல்வார்கள். ஆனால் அனுஷ்கா அப்படி யாரையும் அழைத்துச் செல்வதில்லை. செல்வராகவனின் **இரண்டாம் உலகம்** படப்பிடிப்புக்கு ஜார்ஜியா காட்டுக்குள் செல்லும் போது கூட தனியொரு நடிகையாகத்தான் சென்றிருக் கிறார்.

இது பற்றி அவர் கூறுகையில், **இரண்டாம் உலகம்** மட்டுமன்றி **தாண்டவம்** படப் படிப்புக்கு அமெரிக்கா சென்ற போது கூட நான் தனியாகத்தான் சென்று வந்தேன். காரணம், இந்த யூனிட்டுகளை சேர்ந்த அனைவரும் என்னை ஒரு சகோதரியைப் போலவே நினைத்தார் கள். அவர்கள் பழகினதை வைத்துதான் தனியாக சென்றேன். அதேபோல், இரண்டாம் உலகம் படத்துக்காக ஜார்ஜியா சென்ற போது 80 நாட்கள் அடர்ந்த காட்டுக்குள் தங்கி யிருந்தோம். அங்கு நான் மட்டுமே பெண். ஆனால் அங்கிருந்த அத்தனை ஆண்களும் எனக்கு நல்ல செக்யூரிட்டி கொடுத்தார்கள். ரொம்ப அன்பாக நடந்து கொண்டார் கள் என்றும் செல்வராகவன் யூனிட்டுக்கு நற்சான்றிதழ் வாசிக்கிறார் அனுஷ்கா.

# குத்துப்பாட்டுக்கு நோ; முத்தக்காட்சிக்கு ஓ.கே!



எம்.ஜி.ஆர். மதகஜராஜா சேட்டை என காலில் சக்கரத்தை கட்டிக் கொண்டு ஓடுகிறார் அஞ்சலி. ஆனாலும் பெரிய கதாநாயகர்களின் படவாய்ப்பு வரவில்லையே என அவரிடம் கேட்டால் துடுக்குத்தனமான அதேசமயம் கனமான கதாபாத்திரத்தையும் ஏற்று நடிக்க முடியும் என்பதை நிரூபிச்சிருக்கேன். அப்படி இருந்தும் பெரிய கதாநாயகர்களோடு நடிக்கும் சந்தர்ப்பம் அமையவி ல்லை. விஜய், அஜித், சூர்யா, விக்ரம் போன்ற கதாநாயகர்களோடு நடிக்க எனக்கும் ஆசை இருக்கு. அதற்கான சந்தர்ப்பமும் கதையும் கதாபாத்திரமும் கச்சிதமாக அமை யும் போது நிச்சயம் நடிப்பேன். அதற்காக குத்துப் பாடல்களுக்கு ஆட அழைத்தால் அதை ஏற்கமாட்டேன். அதேபோல படுக்கையறை காட்சியிலும் நடிக்கமாட்டேன். ஆனால் முத்தக்காட்சிக்கு தடை இல்லை என்றார் அஞ்சலி.




# அதிரடி நாயகனாக ஸ்ரீகாந்த்




பாகன் படத்தைத் தொடர்ந்து எதிரி எண்-3 என்ற படத்தில் ஸ்ரீகாந்த் அதிரடி நாயகனாக களமிறங்கி உள்ளார். இதில் டான் என்ற முக்கிய வேடத்தில் பிரபு நடிக்கிறார். கதைப்படி, ஒரு கட்டத்தில் அரசியலில் நுழைய நினைக்கும் பிரபு, தன் தாதாயிசத்தை விட்டுவிட்டு, நல்லவராக மாறுவார். ஆனால், அந்த சமயத்தில் வேறொரு தாதா கதாபாத்திரம் பிரபுவை தந்திரமாக குற்றவாளி கூண்டில் நிற்க வைத்து, அவரை ஜெயிலுக்குள் தள்ளிவிடும். அதன் பிறகு, பிரபுவை எப்படி ஜெயிலில் இருந்து ஸ்ரீகாந்த் வெளியே கொண்டு வருகிறார் என்பது தான், படத்தின் மீதிக் கதை. இந்த படத்தில், இதுவரை எந்த படத்தி லும் இல்லாத அளவுக்கு, அதிரடி சண்டை காட்சிகளில் நடித்துள்ளார் ஸ்ரீகாந்த்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சித் தலைவர்களின் கடிதம் குறித்து கவனம் செலுத்தியுள்ளேன்

## ஆராயப்படுகின்றன என்கிறார் சம்பந்தன்

**(கொழும்பு)**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யும் விவகாரம் தொடர்பில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சித் தலைவர்கள் அனுப்பி வைத்த கடிதம் குறித்து நான் கவனம் செலுத்தியுள்ளேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளின் தலைவர்கள் இரா.சம்பந்தனுக்கு கடிதமொன்றினை அனுப்பி வைத்திருந்தனர்.

இந்த விடயம் குறித்து சம்பந்தன் எம்.பி. தெரிவிக்கையில்,

இந்த விவகாரம் உட்கட்சி விடயமாகும். இது குறித்த முடிவொன்றினை எடுத்த பின்னர் நாம் அதனை பகிரங்கப்படுத்துவோம். இந்த விடயத்தில் நாமும் குழம்ப முடியாது. மக்களையும் குழப்ப முடியாது. தீவிரமாக ஆராய்ந்து இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கையொப்பமிட்டே இந்த கடிதத்தினை அனுப்பியிருந்தனர்.

குறித்த விடயத்தில் நாமும் குழம்ப முடியாது. மக்களையும் குழப்ப முடியாது. சர்வ தேசத்தையும் நாம் குழப்பக் கூடாது. ராஜபக்ஷவையும் நாம் குழப்பிவிடக் கூடாது. அனைத்தையும் கவனமாக செயற்படுத்த வேண்டியது. இன்றைய எமது கடமையாக உள்ளது.

தற்போது முக்கிய கருமங்களில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். இந்த நிலையில் இவ்விடயம் தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். நான்கு கட்சித் தலைவர்களின் கடிதம் தொடர்பில் செய்ய வேண்டியதை நான் செய்வேன் என்று கூறினார்.

இதேவேளை நான்கு கட்சித் தலைவர்களின் கடிதம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவிக்கையில்,

இவ்விடயம் தொடர்பில் நாம் பேச்சுவார்த்தை நடத்துவோம். தலைவர் சம்பந்தனுக்கே நான்கு கட்சிகளின் தலைவர்களும் கடிதம் அனுப்பியுள்ளனர்.

இதற்கான பதிலை அவர் விரைவில் அனுப்புவார் என்றார். (அ-2)

# விளையாட்டு விழா

(கரவெட்டி)

நவிண்டில் கலைமதி முன்பள்ளி விளையாட்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலைமதி விளையாட்டு மைதானத்தில் முன்பள்ளித் தலைவர் து. பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தின் செயலாளர் எஸ். சிவஸ்ரீ கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-24)

# பரிசளிப்பு விழா நேரமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு நடைபெறும் என பாடசாலை அதிபர் திருமதி ல.முகுந்தன் அறிவித்துள்ளார்.

இவ்விழா அன்றைய தினம் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும் என ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# குர்பான் கொடுப்பதற்கு தடையா? ஜனாதிபதியை சந்திக்கவுள்ளேன்

## மேல் மாகாண ஆளுநர் அலவி

(கொழும்பு)

ஹஜ் பண்டிகையை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் குர்பான் கடமையை இம்முறையும் தடையின்றி முன்னெடுக்க சகல நடவடிக்கைகளையும் எடுக்க இருந்தவேளை சில அதிகாரிகள் இதற்கு இடையூறாக செயற்படுவதாக மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்தார்.

முஸ்லிம்களின் புனித ஹஜ் பெருநாள் எதிர்வரும் 26 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. ஹஜ் பண்டிகைக்கு சில தினங்களே உள்ள நிலையில் இந்த விவகாரம் குறித்து தான் ஜனாதிபதியை சந்தித்து எடுத்துக் கூறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னேஸ்வரம் கோவிலில் ஆடு பலி கொடுப்பதும் தொடர்பில் கடந்த தினங்களில் சிக்கல் ஏற்பட்டது. இதேபோன்று முஸ்லிம்களின் பாரம்பரிய கடமைகளில் ஒன்றான குர்பான் தொடர்பிலும் குழப்பம் ஏற்படும் என்ற அச்சம் காணப்படுவதாக பலர் என்னிடம் முறையிட்டு வருகின்றனர்.

இவை தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசவுள்ளேன். நாட்டின் எப்பாகத்திலாவது குர்பான் கடமையை நிறைவேற்ற தடங்கல் காணப்பட்டால் அது குறித்து தனக்கு அறிவிக்குமாறும் அவர் கோரியுள்ளார். (அ-2)

# பொய்க்காரர்கள் ஆட்சி செய்யும் நாடாக இலங்கை மாறியுள்ளது

## முன்னாள் பிரதம நீதியரசர் சரத் தெரிவிப்பு

(கொழும்பு)



பொய்க்காரர்கள் ஆட்சி செய்யும் நாடாக இலங்கை மாறியுள்ளதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

பண்டாரகமவில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒரு காலத்தில் இலங்கை தர்ம தேசமாக போற்றப்பட்டது. இந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊழல் மோசடிகள் மற்றும் குற்றச் செயல்கள் பற்றி தகவல் வெளியிட்டால் அதனை ஊடகங்கள் வெளிச்சம் போடுவதில்லை.

இதன் காரணமாக நாடு முழுவதிலும் கூட்டங்களை வைத்து மக்களுக்கு அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்த வேண்டியுள்ளது என சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

ஆட்சி மாற்றத்தின் ஊடாக நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பறங்கியாற்றின் மேம்பாலம் நிர்மாணிப்பை துரிதப்படுத்துங்கள்

## முல்லை அரச அதிபருக்கு அக்கிராம மக்கள் மகஜர்

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிராட்டிக் குளம் கிராமத்திற்கு செல்லும் பாதையை ஊடறுத்துப்பாயும் பறங்கியாற்றின் மேம்பாலம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு இடை நடுவில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

இதனால் இனி வரும் மழைக்காலத்தில் போக்குவரத்து வசதி இல்லாது இருக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கிராம மக்கள் முல்லை மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகனுக்கும் மற்றும் துறைசார்ந்த அதிகாரிகளுக்கும் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் எல்லைக் கிராமமாக நடுக்காட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள இக்கிராமத்தில் 60இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன.

இக்கிராம மக்களுக்கு பிரதான மேற்படி வீதியாக இவ்வீதியமைந்துள்ளது. இவ் ஆற்றை கடந்து மூன்று மைல்களுக்கு அப்பால் உள்ள நெட்டாங்கண்டல் கிராமத்திற்கு சென்று கல்வி கற்கின்ற மாணவர்கள் உட்பட விவசாயிகள், நோயாளிகள் மற்றும் பொது மக்களும் தங்களது தேவைகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளது.

யுத்தத்திற்கு முன்னர் ஆறுவற்றிய நிலையில் ஆற்றுக்கு கீழாகவும் ஆறு பெருக்கெடுக்கும் காலப்பகுதிகளில் கயிறு கட்டி நீந்திச் சென்றும் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தோம்.

தற்போது மீள்குடியேறியுள்ள வேளை புதிய பாலம் அமைக்கும் பணி ஆரம்பமாகி மூன்று வருடங்கள் கடந்துள்ளன.

இந்நிலையில் தற்போது இவ்வாற்றுப் பாலம் அமைப்பதற்காக கொண்டுவரப்பட்ட பொருட்களை ஏ-9 வீதியில் உமையாளபுரத்தில் அமைந்துள்ள பாலத்தின் திருத்த வேலைகளுக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு இடை நிறுத்தப்பட்டுள்ள பாலம் அமைக்கும் பணிகளை மழைக்காலத்திற்கு முன் துரிதப்படுத்தி அமைத்து தருமாறு கோருகின்றோம் என அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-3-15)

# முகமாலை பிரதேசத்தில் 3 கிராமங்களில் மீள்குடியமர்வு இடம்பெற வேண்டும்

## கிளி. அரச அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் முகமாலைப் பிரதேசத்தில் எஞ்சிய ஓரிரு கிராமங்களிலும் கூடிய விரைவில் மீள்குடியேற்றம் பூர்த்தி செய்யப்படும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முகமாலைப் பிரதேசத்தில் உள்ள மூன்று கிராமசேவகர் பிரிவுகளில் இன்னமும் இரண்டு, மூன்று கிராமங்களில் மாத்திரமே மீள்குடியேற்றம் செய்யப்படவேண்டியுள்ளது. அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டதும் இங்கு மீள்குடியேற்ற நடவடிக்கைகளை ஆரம்பிக்க எதிர்பார்த்திருக்கிறோம். மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் கண்ணிவெடி அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்தி மீள்குடியேற்றத்தை விரைவில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் முகமாலை பொந்தர் குடியிருப்பில் கடந்த முதலாம் திகதி மீள்குடியேற்றம் இடம்பெற்றது.

இறுதிக்கட்ட நடவடிக்கையின் போது அதிகளவான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பிரதேசமாக முகமாலை காணப்படும் நிலையில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. எஞ்சிய பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் இந்திய நிதியுதவியுடனான வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் தெரிவு செய்யப்பட்ட 500 பேருக்கு வீடமைப்புக்கான தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்றார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில அபகரிப்பு தொடர்பில் ஐ.நா. அதிகாரி கேட்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட வேண்டிய மக்கள் தொடர்பிலும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் காணி அபகரிப்பு தொடர்பிலும் தன்னிடம் ஐ.நா. பிரதிநிதிகள் எதுவும் கேட்கவில்லை என யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் துணைச் செயலாளர் நாயகமும் யு.என்.டி.பி.யின் பிராந்திய பணிப்பாளருமான அ.ஜெய்சிப்பர் உள்ளிட்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

இந்தக் குழுவினருடன் அரச அதிபர் சுமார் ஒரு மணிநேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்பின் ஊடகவியலாளர்களுக்கு ஐ.நா. குழுவினருடனான சந்திப்பு தொடர்பாக கருத்து தெரிவித்தார்.

இதன்போது ஊடகவியலாளர்களினால் யாழ். மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட வேண்டிய மக்கள் தொடர்பிலும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் காணி அபகரிப்பு தொடர்பிலும் ஏதாவது கேட்டறிந்து கொண்டனரா? எனக் கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்தோடு அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் அதாவது மீள்குடியேற்றம், அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் பாராட்டுத் தெரிவித்ததாகவும் அரச அதிபர் கூறினார். (அ-6)

## நூல், இறுவெட்டு வெளியீட்டுவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தினரால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்வழி நூல் வெளியீடும் சம்பூர்ண அரிச்சந்திரா இறுவெட்டு அறிமுக விழாவும் முன்னாள் தவிசாளரான அமரர் வெ. சடாட்சரத்தினது உருவப்பட திரை நீக்கமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாவற்குழி பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேசசபையின் நாவற்குழி அலுவலகப் பொறுப்பாளர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.துரைராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வுக்கு அமரர் கந்தையா கனகம்மா நினைவு நிதியம் அனுசரணை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

# ஆசிரியர்கள் உரிய பாடசாலைக்கு செல்ல மறுத்தால் நியமனம் இரத்து

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளின் பெயர் குறித்து நியமனம் வழங்கப்படும் ஆசிரியர்கள் உரிய பாடசாலைகளுக்குச் செல்ல மறுத்தால் அவர்களின் நியமனங்கள் இரத்துச் செய்யப்படும் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண் டும் வலியுறுத்தியுள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட அபிவிருத்திக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே பலமுறை இது குறித்துத் தாம் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவித்த அவர் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

ஆசிரியர் நியமனத்தின்போது தற்போது பெயர் குறிப்பிட்டே நியமனங்கள் வழங்கப்படுகின்றன. எனினும் பல வழிகளில் செல்வாக்குகளைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் தமது பாடசாலைகளைத் தமக்கு வசதியாக ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இது விடயத்தில் கல்வி அமைச்சு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு செயற்படும் ஆசிரியர்களுக்கு எந்தவித பாரபட்சமுமின்றி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்ட ஜனாதிபதி குறித்த பாடசாலைகளில் நியமனங்களைப் பொறுப்பேற்காத ஆசிரியர்களின் நியமனங்களை இரத்துச் செய்ய நேரிடுமெனவும் குறிப்பிட்டார். (அ-2)

# அமெரிக்காவில் குடியேற அனோமா முடிவாம்

(கொழும்பு)

இலங்கை அரசியலில் சில தரப்பினரின் அதிருப்திக்கு ஆளாகியுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் மனைவியான அனோமா பொன்சேகா அரசியல் செயற்பாடுகளுக்கு விடைகொடுத்து விட்டு அமெரிக்கா சென்று குடியேறவுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

தனது விடுதலை என்பது மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளதன் காரணமாக தனது மனைவியை அரசியலில் முழுமையாக ஈடுபடுத்த சரத்பொன்சேகா விரும்பியிருந்தும் எதிர்க்கட்சிகளைச்சேர்ந்த பெரும்பாலானோர் இதற்கு இணக்கம் தெரிவிக்காமையே அனோமாவின் அரசியல் துறவறத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் 18 ஆம் திகதி சரத்பொன்சேகாவின் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றில் அனோமா பொன்சேகாவையும் கலந்து கொள்ளச் செய்யவுள்ள சரத் பொன்சேகாவின் தீர்மானத்துக்கு அனைத்திலங்கை மாணவர் முன்னணி தனது எதிர்ப்பினை வெளியிட்டது.

இவ்வாறானதொரு நிலையிலேயே அனோமா பொன்சேகா தனது இரு புதல்விகளுடன் அமெரிக்கா சென்று நிரந்தரமாக குடியேறவுள்ளார் என அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-2)

# மேர்வினுக்கு எதிராக மற்றொரு விசாரணை

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எதிராக மற்றுமொரு சுற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுவினால் இவருக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக கப்பம் கோரல் சம்பவங்கள் தொடர்பில் மேல் மாகாணசபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மேல் மாகாண சபையின் முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் உத்தரவின் அடிப்படையில் இந்த விசாரணைகள் நடத்தப்பட உள்ளன.

களனிய மற்றும் கிரிபத்கொட பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புலனாய்வுப் பிரிவினரும் இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு ஆகிய இரண்டு தரப்பினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த விசாரணைகளுக்காக ஏற்கனவே சிலரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (அ-2)

# இலங்கை கல்வித் துறைக்கு இந்திய கல்வியியலாளர் ஆதரவு

இலங்கை கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து இந்திய கல்வியியலாளர்கள் 22 பேர் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

கல்விக்காக இலங்கை அரசு மொத்த தேசிய உற்பத்தியில் 1.86 வீதம் ஒதுக்குவதாக இந்திய கல்வியியலாளர்கள் வெளியிட்டுள்ள அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இது இலங்கை கல்வித் துறைக்கு போதுமானதல்ல என்பதால் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதென அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பிரச்சினை குறித்து அதிக கவனம் செலுத்தியுள்ளதாகவும் இலங்கை விரிவுரையாளர்களுக்கு தமது ஆதரவை வழங்குவதாகவும் இந்திய கல்வியியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த அறிக்கையில் இந்திய பொருளாதார நிபுணர்கள் சிலரும் கையெழுத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# பேராசிரியர்களுடன் பேச்சு நடத்த ஜனாதிபதிக்கு நேரமில்லையா?

## எதிர்க்கட்சி தலைவர் கேள்வி

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு நேரமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக பேராசிரியர்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்புப் பங்குச்சந்தையில் ஊழல் மோசடிகளை மேற்கொண்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதிக்கு நேரமிருந்தது. பல்கலைக்கழக பேராசிரியர்களுடன் பேசநேரமில்லையா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலவசக்கல்வியை பாதுகாப்பதற்காக பல்கலைக்கழக பேராசிரியர்கள் போராடி வருவதாகவும் இவர்களுடன் ஐந்து நிமிடத்தை ஒதுக்கி பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதிக்கு நேரமில்லை.

வீதிகளையும் பாதைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு முன்னதாக நாட்டின் கல்வித் துறையை வலுப்படுத்த வேண்டும் என்பதே பெரும்பான்மையான மக்களின் கருத்தாக அமைந்துள்ளது.

கல்வித் துறைக்கு கூடுதல் நிதியை ஒதுக்கினால் அதிகளவு தரகுப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது எனவும் வீதி அபிவிருத்திக்காக ஒதுக்கும் பணத்தில் கூடுதல் தரகுப் பணத்தை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாகவே அரசாங்கம் கூடுதலான நிதியை பாதைகள் அமைப்பதற்கு ஒதுக்கி வருகிறது. அறிவார்ந்த சமூகமொன்றை கட்டியெழுப்புவதா அல்லது ஆளும் கட்சி அமைச்சர்களின் சொத்துக்களை அதிகரிப்பதா என்பதனை நாம் தீர்மானிக்க வேண்டிய நேரம் உதயமாகியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## ஆஸி. பயணத்தில் ஆறுபேர் கைது

நீர்கொழும்பு- ஏத்துக்கால பகுதியிலிருந்து சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டில் ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைக்க முயன்ற ஒருவரையும் நேற்று முன்தினம் பிற்பகல் நீர்கொழும்பு பொலிசாரால் கைது செய்துள்ளனர்.

ஏத்துக்கால சுற்றுலா பொலிசாருக்குக் கிடைத்த தகவலையடுத்து குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் சுன்னாகம் மற்றும் வவுனியா பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்..

சந்தேகநபர்கள் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-2)



சர்வதேச விலங்குகள் தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள பல்பொருள் அங்காடியொன்றில் வைக்கப்பட்டிருந்த யானைப் பொம்மைகளுக்கு நிறந்தீட்டும் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் தென்னிந்திய நடிகை பூஜா உமா சங்கர், ஜனாதிபதியின் இரண்டாவது புதல்வரும் கடற்படை லெப்டினனுமான யோஷித ராஜபக்ச ஆகியோர் கலந்துகொண்டு யானைப் பொம்மைகளுக்கு நிறந்தீட்டுவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய்க் கிரகத்தில் மனிதனின் கால் தடமா?



செவ்வாய்க்கிரகத்தில் மனிதனின் காலடித்தடங்கள் போன்ற மாதிரிகளை அங்கு ஆராய்ச்சி செய்து வரும் கியூரியோசிட்டி விண்கலம் சமீபத்தில் புகைப்படங்களாக பூமிக்கு அனுப்பி வைத்துள்ளது ஆச்சரியமளிக்கின்றன.

மறைந்த நாசா விண்வெளி வீரர் நீல் ஆர்ம்ஸ்ட்ரோங் சந்திரன் பயணத்தில் அவர் நடந்த காலடித்தடங்களைப் போன்றே இந்த புகைப்படங்கள் உள்ளன. மனித இனம் செவ்வாய் கிரகத்திற்குப் பயணிப்பதற்கு முன்பே அங்கு இந்த காலடித்தடங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.


ஆனால், நாசாவின் விண்வெளி ஆய்வு கூடமான ஜே.பி.எல். இன் விஞ்ஞானிகள் கியூரியோசிட்டி ரோவர் விண்வண்டி அங்கு ஊர்ந்த போது ஏற்பட்ட அடையாளம் என்று கூறியுள்ளனர்.

இருப்பினும் இது மனிதனின் காலடி அல்லது சப்பாத்தின் தடம் போலவே காணப்படுவது அதிசயிக்கத்தக்கது எனவும் குறிப்பிட்டனர்.

மேலும் சந்திரத் தரையில் காணப்படும் ஆர்ம்ஸ்ட்ரோங்கின் காலடித் தடம் அங்கு வளிமண்டலம் இல்லாமையால் இன்னும் மில்லியன் வருடங்களுக்கும் அழியாமல் அப்படியே இருக்கும்.

ஆனால், செவ்வாய்க்கிரகத்தில் காணப்படும் தடம் அதை விட விரைவாக அழியக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன என்று விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (அ-2)

# மீண்டும் ஏலத்துக்கு வருகிறது ஐன்ஸ்டீனின் கடிதம்



உலகப் புகழ்பெற்ற இயற்பியல் விஞ்ஞானியான ஐன்ஸ்டீன் எழுதிய கடிதம் கபே இணையத்தளம்மூலம் ஒன்லைனில் ஏலம் விடப்படவுள்ளது.

எரிக் குட்கிங் என்ற தத்துவ ஞானி எழுதிய நூலை படித்துவிட்டு கடவுள் குறித்த தனது கருத்தை ஐன்ஸ்டீன் அவருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

கடவுள் கடிதம் எனப்படும் அதில் ஐன்ஸ்டீன் கடவுள் இருக்கிறாரா என்பது குறித்த தனது கருத்தையும் அவரது மதம், மதப்பற்று ஆகியவை குறித்தும் எழுதியுள்ளார்.

பிரின்சன்டன் பல்கலைக்கழக லெட்டர் ஹெட்டில் கடந்த 1955 ஆம் ஆண்டு அக்கடிதம் எழுதப்பட்டுள்ளது. இதற்கு முன்பு இந்த கடிதம் 4 இலட்சத்து 4 ஆயிரம் டொலருக்கு ஏலம் விடப்பட்டது. அதை வாங்கியவர் அதை வெப்பநிலை கட்டுப்படுத்தப்பட்ட பாதுகாப்புப் பெட்டகத்தில் பாதுகாப்பாக வைத்துள்ளார். அந்த கடிதம் தற்போது மீண்டும் ஏலத்துக்கு வந்துள்ளது. (அ-2)

# சிரியா மீது தாக்குதல் நடத்த துருக்கி நாடாளுமன்றம் ஒப்புதல்

## எல்லையில் பதற்றம் நீடிப்பு

துருக்கி மீது சிரியா ரொக்கெட் குண்டு வீச்சு நடத்தியதை தொடர்ந்து இரு நாட்டு எல்லையில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக ஓராண்டுக்கும் மேலாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் சிரியா இராணுவம் கடந்த 3 ஆம் திகதி அயல் நாடாள துருக்கியின் எல்லைப் பகுதியான அக்காகலே மீது ரொக்கெட் குண்டுகளை வீசித்தாக்கியது. இதில் 5 அப்பாவிகள் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடியாக சிரியாவில் உள்ள இலக்குகள் மீது துருக்கி கடந்த 4 ஆம் திகதி தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதல் இரண்டாவது நாளாக நடைபெற்றது. இதனால் இரு நாட்டு எல்லையில் பதற்றம் நிலவி வருகிறது.

இந்நிலையில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

சிரியா- துருக்கி இடையே ஏற்பட்டுள்ள மோதல் அந்தப் பிராந்தியத்தில் பூசல்களை ஏற்படுத்துவதோடு சர்வதேச அமைதிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

அனைத்து தரப்பினரும் வன்முறையை கைவிட்டு அதிகபட்ச கட்டுப்பாட்டை கடைப்பிடித்து அரசியல் தீர்வை காண முயற்சிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையே தனது நிலப்பரப்பில் சிரியா தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக அந்நாட்டின் மீது இராணுவத்தாக்குதலை தீவிரப்படுத்த துருக்கி நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

எனினும் சிரியா மீது போர் தொடுக்க நாங்கள் விரும்பவில்லை. அமைதி மற்றும் பாதுகாப்பையே விரும்புகிறோம் என்று துருக்கி பிரதமர் ரீசெப் தாயிப் ஏர்டோகன் தெரிவித்துள்ளார். (அ-2)




# அதிரடியாக கலைக்கப்பட்டது ஜோர்தான் நாடாளுமன்றம்

மன்னராட்சி நடக்கும் ஜோர்தானில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாக மன்னர் அப்துல்லா அறிவித்துள்ளார்.

ஜோர்தானின் மன்னர் அப்துல்லா ஆவார். பிரதமராக பதவி வகித்த பையாஸ் அல்-தாராவென் கடந்த ஜுலை மாதம் புதிய தேர்தல் சீர்திருத்த சட்டத்தை கொண்டு வந்தார்.

இதற்கு முக்கிய அமைப்புக்களான முஸ்லிம் சகோதரத்துவ கட்சி மற்றும் ஏனைய கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

இவர்கள் நாட்டினை சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்வும் நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இதனையடுத்து 120 உறுப்பினர்களை கொண்ட நாடாளுமன்ற கீழ் சபை கலைக்கப்பட்டதாகவும் அடுத்த ஆண்டு தேர்தல் நடத்தப்படும் எனவும் மன்னர் அப்துல்லா உத்தரவு பிறப்பித்துள்ளார். (அ-2)

# பிலிப்பைன்சின் முன்னாள் ஜனாதிபதி குளோரியா கைது



ஊழல் குற்றச்சாட்டில் பிலிப்பைன்சின் முன்னாள் ஜனாதிபதி குளோரியா அரோயோ கைது செய்யப்பட்டுள்ளார்.

பிலிப்பைன்சில் 10 ஆண்டுகளாக ஜனாதிபதியாக பதவி வகித்தவர் குளோரியா அரோயோ கடந்த 2010 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் தோல்வி அடைந்தார்.

தேர்தலில் தில்லுமுல்லு நடத்தினார். அறக்கட்டளை திட்டங்களுக்கு செல்ல வேண்டிய பணத்தை தேர்தல் பிரசாரத்துக்கு செலவு செய்தார். லாட்டரி திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை கையாடல் செய்தார் என்பது உட்பட பல்வேறு புகார்கள் இவர் மீது கூறப்பட்டன. இது தொடர்பான வழக்கில் குளோரியாவை கைது செய்ய ஊழல் தடுப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து தேசிய பொலிஸார் நேற்று முன்தினம் குளோரியாவை கைது செய்தனர்.

முதுகு தண்டுவட பிரச்சினைக்காக மணிலாவில் உள்ள இராணுவ மருத்துவமனையில் அவர் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார். ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படும் என்று சட்ட நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (அ-2)

# சுவிஸ் அரசுக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தில் மாற்றம் செய்ய அவகாசம்

## பாக். பிரதமருக்கு உச்ச நீதிமன்று வழங்கியது

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி மீதான ஊழல் வழக்குகளை மீண்டும் விசாரிக்கக் கோரி சுவிஸ் அரசுக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தில் மாற்றங்களைச் செய்ய பாகிஸ்தான் பிரதமருக்கு அந்நாட்டு உச்ச நீதிமன்றம் மேலும் அவகாசம் வழங்கியுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் கிலானி மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொரடப்பட்டது. அவர் பிரதமர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

இதையடுத்து பாகிஸ்தானின் புதிய பிரதமராக ராஜா பர்வேஸ் அஷ்ரப் பொறுப்பேற்றார். சர்தாரி மீதான வழக்குகள் குறித்து கடிதம் எழுதாததைத் தொடர்ந்து அவர் மீதும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கு தொடர்பாக அவர் கடந்த மாதம் 18 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் ஆஜரானார். அப்போது சர்தாரி மீதான வழக்குகளைக் கைவிடக் கோரி 2007 இல் அனுப்பப்பட்ட கடிதத்தை வாபஸ் பெற்கோரி புதிய கடிதத்தை எழுதவுள்ளதாக அறிவித்தார்.

அதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் சுவிஸ் அரசுக்கு அனுப்புவதற்கு முன் அந்தக் கடிதத்தின் வரைவைத் தங்களிடம் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டனர்.

இந்நிலையில் பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் இவ் வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது சட்டத்துறை அமைச்சர் பரூக் நயீக் ஆஜராகி சம்பந்தப்பட்ட கடிதத்தின் நகலை நீதிபதி ஆசிப் சயீது கோசா தலைமையிலான அமர்வு முன் சமர்ப்பித்தார்.

அதைப் படித்துப் பார்த்த நீதிபதிகள் அதன் சில பத்திகளுக்கு ஆட்சேபம் தெரிவித்தனர். அந்தப் பத்திகள் சர்தாரி மீதான வழக்குகளை மீண்டும் நடத்த வேண்டும் என்று தாங்கள் 2009 இல் அளித்த தீர்ப்பின் படி அமையவில்லை என்று நீதிபதிகள் தெரிவித்தனர். பின்னர் மேற்படி அவகாசத்தை வழங்கினர். (அ-2)

# ஐ.நாவில் காந்தி ஜெயந்தி; இந்தியா- பாக். பங்கேற்பு

ஐ.நா.வில் காந்திபிறந்தநாள்விழா இந்தியா ,பாகிஸ்தான் நாடுகள் சார்பில் கொண்டாடப்பட்டது. ஐ. நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ஹர்தீப் சிங் நிகழ்ச்சிக் கான ஏற்பாடுகளை செய்திருந்தார். இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணா தலைமை வகித்தார். ஐ.நா.வுக்கான பாகிஸ்தான் நிரந்தர பிரதிநிதி அப்துல்லா ஹுசைன் ஹருன் பங்கேற்று உரை நிகழ்த்துகையில்,

தனது பாட்டனாரின் இறப்பின் போது வீட்டுக்கு வந்த மகாத்மா காந்தியடிகள் கடிதம் எழுதியதை நினைவு கூர்ந்தார்.

மேலும் காந்தியடிகளின் சத்தியாகிரம் அற்புதமான ஒன்று. இறக்கும் தறுவாயிலும் உலக சமுதாயத்திற்காக பிரார்த்தித்தவர். மக்களுக்கு அதிகாரம் அளிக்கும் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்தார். அவரின் கொள்கைகளுக்கு அவரே முன்னுதாரணமாக திகழ்ந்தார். மகாத்மாவின் கொள்கைகளை உலகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்னுடைய காலத்தில் கிடைக்க வேண்டும்

## இல்லையென்றால் ஒருபோதும் தீர்வு கிடைக்காது என்கிறார் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்னுடைய காலத்தில் கிடைக்க வில்லையென்றால் இனிவரும் காலத்தில் கிடைக்கப் போவதில்லையென்கிறார் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா.

அமைச்சருடனான சந்திப்பின்போது வலம்புரிக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னுடைய காலகட்டத்தில் இந்த பிரச்சினை தீர்க்கப்படவில்லையென்றால், எந்தக் கட்டத்திலும் பிரச்சினைக்கு தீர்வு கிடையாது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரையில்அவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பதை விட பிரச்சினைகளைத் தீராப் பிரச்சினையாக்குவதில்அவர்கள் நீண்ட கால வரலாறு வெளிப்பட்டிருக்கிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முற்பட்ட காலங்கள் வேறு, ஒப்பந்தத்திற்கு பிற்பட்ட காலங்கள் வேறு.

இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு பிற்பட்ட காலங்களில் அரசுகள் பிரச்சினையைத் தீர்க்க தயாராக இருந்தன. ஆனால், தமிழர்களின் தரப்பில் தயாராக 'இல்லை. சுயலாபத்தை முன்னிறுத்தித்தான் பிரச்சினைகளை அணுகினார்களே தவிர பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

நாங்கள் பழிச் சொற்களை, எங்களுக்கெதிரான பரப்புரைகளை, பொய்களை ஏன் சுமக்கிறோம். என்றால், மக்களின் நலன்களுக்காக.

தினமும் எங்களுக்கெதிரான பரப்புரைகளை தமிழ்க் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன. இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் எங்களைப்பற்றிக் குறிப்பிட்ட விடயங் கள் பற்றியும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் கூறியுள்ளோம். அதேபோல் ஊடகங்களில், இணையத் தளங்களில், வந்துகொண்டிருக்கிற எங்களுக்கெதிரான செய்திகள் தொடர்பாக போதுமான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளது.

மேலும் அரசாங்கத்துடன் சேர்ந்துதான் இந்தப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். அரசாங்கத்திற்கு புறம்பாக இருந்து கொண்டு இந்தப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பது சாத்தியமே இல்லை.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தற்போது தேசிய அரசு பற்றியெல்லாம் பேசுகின்றனர்.அதுமட்டுமன்றி இதனை இனவாதமாகக் கருதவேண்டாம். ஆட்சியை முஸ்லிம் மக்களுக்கு கொடுக்கத் தயார் என்று எல்லாம் சொல்கின்றனர்.

ஏன் இதனை இவர்கள் முன்பு, முன்வைக்கவில்லை? எல்லாம் சுயலாபத்திற்காகத்தான்.

முன்பே இதனைச்சொல்லியிருக்கலாம். கடந்தகாலங்களில் எல்லாம் மௌனமாக இருந்து விட்டு சுயலாப அரசியலுக்காக தமது கொள்கைகளைவிட்டுக்கொடுக்கின்றனர்.

எமக்கும் அவர்களுக்கும் வித்தியாசம் இதுதான். இணக்க அரசியல மூலமே பிரச்சினையை தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையை நாம் வெளிப்படுத்தி நிற்கிறோம்.

அவர்கள் எதிர்ப்பு அரசியல் கடந்த 1950 ஆம் ஆண்டு தொடக்கம் 1980 ஆம் ஆண்டு வரைதொடர்ந்தது. எதிர்ப்பு அரசியலும் ஒரு வகை ஜனநாயக வழிமுறைதான். இருந்தும் என்ன நடந்தது. ஒன்றும் கிடைக்கவில்லை.

பின்பு அது சரிவரவில்லை என்றுதான் ஆயுதம் தூக்கி போராடினார்கள்.

கடந்த 1980 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டுவரை அந்தப் போரா டத்தாலும் என்ன நடந்தது.பாரிய அழிவுகள்தான். இருப்பினும் ஆயுதம் தூக்கிப்போராடுவதற்கு ஒரு தேவையிருந்தது என்பதை எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் மறுக்கவில்லை.அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்று சொல்கிற மாதிரி அது வரம்பு மீறிப்போனதுதான் இந்த அழிவுக்கு காரணம் எனவும் அவர் தெரிவித்தார். (அ-6)

# கிளிநொச்சி தமிழ்ச்சங்கத்தின் பத்தாவது திருக்குறள் மாநாடு

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தின் பத்தாவது திருக்குறள் மாநாடு நாளை திங்கட்கிழமை கனகபுரம் விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையிலுள்ள நண்பர்கள் விருந்தக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலை அமர்வின்போது திருக்குறள் கருத்தரங்கு முற்பகல் 9.30 மணிக்கு தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் அரங்கில் வே. இறைபிள்ளை தலைமையில நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ. ஸ்ரீநிவாசன், வேளாண்மைப்பணிப்பாளர் க.சுப்பிரமணியம்,கரைச்சிப்பிரதேச செயலாளர் கோ. நாகேஸ்வரன், மன்னார் தமிழ்ச்சங்க செயலர் சு.சிவகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின் போது புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம், **ஒழுக்கம் விழுப்பம் தரும்** எனும் தலைப்பில் மாவட்டப் பண்பாட்டு அலுவலர் ம. அருள்சந்திரன், **வள்ளுவரும் இளங்கோ அடிகளும்** எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக தமிழ் முதுநிலை விரிவுரையாளர் ஈ.குமரன், **திரை இசைப்பாடல்களில் குறள்** எனும் தலைப்பில் தமிழ்ப்பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி பி.மதுரநாயகம் ஆகியோர் உரைகள் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மாலை அமர்வின்போது திருவள்ளுவர் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் பிற்பகல் 2.30 மணிக்கு க.ம.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் சி. சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்புவிருந்தினர்களாக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வன்னி கரித்தாஸ்/ ம.மு.ந. நிலை இயக்குநர் அருட்பணி அருளானந்தன் யாவிசு, கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க. முருகவேல், கிளிநொச்சி இந்துக்கல்லூரி முதல்வர் சி.பாலகிருஸ்ணன், கிளிநொச்சி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.தவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம், 'தமிழ் இசைப்பாடல், பரந்தன் இந்து மகா வித்தியாலய மாணவிகளின் நாட்டுப் புறக் கலை, நாட்டார் பாடல்கள், நீர்த்தார் நினைவுப் பரிசில் வழங்குதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (அ-9-254)

# கண்டாவளை மக்களின் தேவைகளை கேட்டறிந்தார் ராஜித விஜயசிங்க எம்.பி.

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர் ராஜித விஜயசிங்க அப்பிரச்சினைகளை உரியதரப்பினர் ஊடாக நிறைவேற்றித்தருவதாக உறுதியளித்துள்ளார்

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கண்டாவளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவித்திட்டப்பணிப்பாளர் அருட்செல்வன் தலைமையில் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவு மக்களின் அடிப்படைப்பிரச்சினை தொடர்பான கலந்துரையாடலின்போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இம்மக்களின் முக்கிய பிரச்சினைகளான வீடமைப்பு, வீதித் திருத்தம், மின்சாரம் மற்றும் ஏனைய தேவைகளை கேட்டறிந்து அவற்றை தாம் உரிய தரப்பினர் ஊடாக இவற்றை பெற்றுத் தருவதாக தெரிவித்தார்.

அத்துடன் முக்கிய பிரச்சினையாக கண்டாவளை பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தில் தமது முறைப்பாடுகளை தெரிவிக்க முடியாதுள்ளதாகவும் தமது முறைப்பாடுகளை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலேயே கொடுக்க வேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

கண்டாவளை பிரதேச பொலிஸ் நிலையத்திலே முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு தாம் ஒழுங்குகளை மேற்கொள்வதாக அவர் உறுதியளித்தார்.


இக்கலந்துரையாடலில் மக்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-3-264)

# மின்னொளியில் கரப்பந்தாட்டம்

(சாவகச்சேரி)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி ரீதியிலும் யாழ்.மாவட்ட ரீதியிலும் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டப்போட்டி, நாளை திங்கட்கிழமை இரவு மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் முதல் நாள் போட்டியில் மட்டுவில் ஜங்கரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கச்சாய் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (அ-3-29)



வவுனியா தெற்கு வலயத்தால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் சர்வதேச உளநல தினத்தின் முன்னோடி நிகழ்வுகளான பாடசாலைமட்ட கருத்தரங்கு செயற்றிட்டம் அண்மையில் வவுனியா இறம்பைக்குளம் மகளீர் கல்லூரியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் வைத்திய கலாநிதி சுதாகரன் கருத்துரை வழங்குவதையும் கலந்துகொண்ட மாணவிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி செய்யா விடில் உயர்ந்த சாஸ்திரங்கள் கூட விஷம்.

–சாணக்கியர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சாரதிய அனுமதிப் பத்திரங்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும்

வடபகுதியில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் நாளுக்குநாள் இடம்பெறும் விபத்துச் சம்பவங்கள் குறித்து புத்திஜீவிகளும் சமூக ஆர்வலர்களும் மௌனம் சாதிப்பார்களாயின் நிலைமை மிக மோசமானதாக மாறும் என்பது திண்ணம்.

அண்மைக்காலமாக ஏற்பட்ட விபத்துக்களை ஆய்வுக்குட்படுத்தும் போது, சாரதிகளின் அசமந்தமான போக்கும் அவர்களிடையே இயல்பாக இருக்கக் கூடிய பொறுப்பற்ற தன்மையும், போட்டி மனப்பாங்கும் விபத்துக்குக் காரணமாக உள்ளன என்பதை கண்டறிய முடியும்.

இதற்கெல்லாம் அடிப்படை என்ன? என்பது பற்றி சிந்தித்தால் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது ஏதோ தவறு நடைபெறுகின்றது என்பதை உணர முடியும்.

போதிய பயிற்சியின்மை, வீதி ஒழுங்குகள் பற்றிய நடைமுறைகளை அறிந்துகொள்ளாமை ஆகிய நிலைமைகள் இருக்கின்ற போதிலும் அவர்கள் ஏதோ ஒரு வகையில் சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு வீதி ஒழுங்குகளைக் கற்றுக் கொள்ளத் தேவையில்லை, ஒரு சிறிய பயிற்சி மட்டும் போதும் என்ற நிலைப்பாடு இருக்கும் போது எல்லோரும் சாரதிகளாகலாம் என்ற சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது.

இதன் விளைவாகத்தான் கண்டபாட்டில் விபத்துக்கள் நடைபெறுகின்றன.

இது தவிர தனியார் ஊர்திகளை ஒருங்கிணைத்த ஓர் அமைப்பு என்றில்லாமல், அரசியல் செல்வாக்குகளுக்கு ஊடாக தனித்தனியாக தனியார் பஸ் சேவை சங்கங்களை அமைத்து விட்டு கண்டபாட்டில் நாடகம் நடத்தப்படுகிறது.

இவை எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைத்து சாரதிகள் உள்ளிட்ட பயணிகள் மற்றும் பொது மக்களின் உயிரைப் பாதுகாக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

இதற்காக பயணிகள் சேவையில் ஈடுபடும் சாரதிகளின் அனுமதிப்பத்திரங்கள் மீளாய்வு செய்யப்படுவதுடன் –

சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான சிபார்சினை தனி ஒரு உத்தியோகத்தர் செய்யாமல் ஒரு குழுவாக செய்யும் போது தகுதிப்பாடான சாரதிகள் உருவாக வாய்ப்பேற்படும்.

இவை எல்லாவற்றுக்குமேலாக பயணிகள் சங்கம் உருவாக்கப்பட்டு பொறுப்பற்ற சாரதிகள், பொறுப்பற்ற வாகன உரிமையாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையேல் புதுமாத்தளனில் ஏற்பட்ட இழப்புக்களை விபத்துக்கொலைகள் விஞ்சி விடும்.

# ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்த புதிய அரசாங்கம் தேவை!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்து வதன் மூலமே நாட்டில் மலிந்து போயுள்ள ஊழல், மோசடிகளை முடிபுக்கு கொண்டுவர முடியும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாட்டில் கீழ் மட்டத்தில் இருந்து மேல் மட்டம் வரை ஊழல், மோசடிகள் அரசாண்டு வருகின்றன. புதிய அரசாங்கம் ஒன்றின் மூலமே இவற்றை தடுத்து நிறுத்தி மக்களுக்கு நல்ல நிலைமையை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். எதிர்க் கட்சிகள் பிளவுப்பட்டு இருக்கும் வரையில் அதனை செய்ய முடியாது.

இதனால் பொது எதிர்க்கட்சியை கட்டி யெழுப்புவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொன் சேகா கூறியுள்ளார். பண்டாரகம பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரை யாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பொன்சேகா, போர் முடிந்து சில வருடங்கள் கழிந்துள்ளது. ஆனால் வாழ்க்கை செலவு இன்னும் குறையவில்லை.

நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு கடுமையாக அதிகரித்து வருகிறது.

இதனை கட்டுப்படுத்த தற்போதைய அரசாங்கத்திற்கு முடியாது. அவர்கள் அதுபற்றி சிந்திப்பதும் இல்லை.

குடும்ப அதிகாரத்தை அரசாள செய்வதே மகிந்த சிந்தனையாக மாறியுள்ளது என்றார்.

அதேவேளை இங்கு உரையாற்றிய முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா இலங்கையை பண்டைய காலத்தில் தர்மத்தின் தீவு என அழைத்தனர் எனவும் தற்போது பொய்யால் ஆட்சி செய்யும் நாடாக இலங்கை மாறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளை வெளிக்கொண்டு வந்தாலும் அவை ஊடகங்களில் வெளியிடப் படுவதில்லை.

இதனால் நாடு முழுவதும் கூட்டங்களை நடத்தி மக்களுக்கு தெரியப்படுத்தி வருகிறோம் எனவும் அவர் கூறியுள்ளார். (எ–11)

## புலி உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுகத கம்லத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் 60 சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எதிராக விரைவில்நடவடிக்கைஎடுக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் வாரங்களில் குறித்த சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மனிதாபிமானத்திற்கு எதிராகச் செயற்பட்டதாகவும், யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும் தெரிவித்து இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ–8)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எங்கள் வளநாடு



விஞ்சுபிறப் பிறப்பறுக்கும் நாடெங்கள் நாடே
மெய்யிற்சிவம் பிறக்கவைக்கும் நாடெங்கள் நாடே
செஞ்சரண நிலவுவிரி நாடெங்கள் நாடே
திரையற்ற நீர்போன்ற நாடெங்கள் நாடே
அஞ்சிமிக வழியறியா தயர்ந்துமனத் துடித்து
ஆறாக விழிபெருக அல்மந்து வாடித்
தஞ்சமென்ற எளியனெனை அஞ்சலென்று காத்த
தவஞானக் குருவடிவம் காட்டிவைத்த நாடே

## மனிதமும் மனிதாபிமானமும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள நிலையில் மணமுறிவு தேவைதானா?

கேள்விகள் பலவிதம். சிலர் நேர்மையான உள்ளத்தோடு பிறருடைய கருத்தை அறியும் ஆவலோடு கேள்வி கேட்பார்கள். வேறு சிலர் பிறரிடம் குற்றம் காண்கின்ற நோக்கத்தோடு கேள்வி கேட்பார்கள். இயேசுவிடம் கேள்வி கேட்டவர்கள் பலர். சிலர் நேர்மையான உள்ளத்தோடு இயேசுவை அணுகியதுண்டு. வேறுசிலர் ***இயேசுவைச் சோதிக்கும் எண்ணத்துடன் கேள்வி கேட்டார்கள்.*** பரிசேயர் அவரை அணுகி மணவிலக்குப் பற்றி இயேசுவிடம் கேட்ட கேள்வி இந்த

### பரமபிதா காட்டிய பாதை

இரண்டாம் வகையைச் சேர்ந்தது. எனவேதான், இயேசு தம்மிடம் கேள்வி கேட்ட பரிசேயரிடம் ஒரு மறுகேள்வியைக் கேட்கிறார். ***மோசே உங்களுக்கு இட்ட கட்டளை என்ன?*** கணவன் மணவிலக்குச் சான்று எழுதி தன் மனைவியை விலக்கிவிடலாம் என்று மோசே அனுமதி அளித்ததாக அவர்கள் பதில் சொல்கின்றார்கள்.

உண்மையில் மோசே மணவிலக்குப் பற்றி கட்டளைகள் கொடுத்ததாக பெரிதாக வேதாகமத்தில் இல்லை. ஆனால் மணவிலக்குச் செய்யும் கணவன் மீண்டும் அதே பெண்ணை மணம் முடித்தல் ஆகாது என்பதே அக்காலத்தில் சட்டமாக இருந்திருக்கின்றது. இவற்றை வைத்துப் பார்க்கும்போது அக்காலத்தில் திருமண உறவு சீர்குலையத் தொடங்கியது என்பது தெரிகிறது.

இன்றைய உலகில் திருமண உறவு பல விதங்களில் முறிந்துவிடும் நிலையில் உள்ளது. திருமணங்களின் முறிவு மனிதவாழ்வின் சீரழிவின் அடையாளம். ஆணும் பெண்ணும் திருமணத்தில் இணைந்தபின் இறுதிவரை இணைந்து வாழும்போது மனித சமுதாயம் [illegible]

தொடருமாயின், ஒரு தலைமுறையோடு தலைமுறை வாழ்ந்து அழியும். திருமணத்தில் இணைந்தவரைப் பிரிக்கும் முயற்சி.


அன்றிலிருந்து இன்றுவரை மனிதருள் பலர் திருமண உறவை எப்படிப் பிரிப்பது? என்று சுயநலத்தோடு முயற்சி செய்து கொண்டே இருக்கின்றனர்.

அத்தகைய முயற்சிகளுள் ஒன்று இன்றைய நற்செய்திப்பகுதியில் காணலாம். தங்களின் சுயநல முயற்சிக்கு பக்கத் துணையாக வேதாகமத்திலிருந்து மோசேயை துணைக்குக் காட்டுகின்றனர்.

திருமணங்கள் கடவுள் இணைக்கும் ஒரு அருங்கொடை திருமணத்தில் இணையும் ஆணும்பெண்ணும் ஆண்டவன் செயற்பட உதவும் இன்றியமையாத கருவிகள். இந்தச்சமுதாயம் அவர்களுக்கு உதவும் கரங்கள். எனவே இதனைப் பிரிக்கும் அதிகாரம் மனிதர்கள் யாருக்கும் இல்லை. ஆகவே, கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும் என்கிறார் இயேசு.

அன்று தொடங்கிய இந்தத் திருமண முறிவு பிரச்சினை இன்றுவரை தொடர்ந்து கொண்டே வருகிறது. எத்தனை சட்டங்கள் இயற்றினாலும் சம்பிரதாயங்கள் கடைப்பிடித்தாலும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. எத்தனைபேர் விளக்கங்கள், வியாக்கியானங்கள் கொடுத்தும் நிறைவடைந்தபாடில்லை.

மனிதன் மனித பலவீனம், உலக ஆசைகள், நவீன பொருளாதாரம், நுகர்வு கலாசாரம், பண்பற்ற பாலியல் அறிவு இவற்றால் பாதிக்கப்பட்டு திருமணத்தோடு போராடிக்கொண்டிருக்கிறான். இந்நிலையில், ஒருவர் தம் மனைவியை எக்காரணத்தையாவது முன்னிட்டு விலக்கி விடுவது முறையா? என்று பரிசேயத்தனமாகச் சிந்திப்பதற்குப் பதிலாக வாழவைப்பதற்கான வழியைச் சிந்திப்பது நல்லது.



சுட்டத்திற்குஎப் போதுமே சில விதிவிலக்குகள் உண்டு விதிவிலக்குகள் சட்டமாகிவிடக்கூடாது கணவனும் மனைவியும் ஒரே உடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும் இதுதான் சட்டம்.


**ம.பிரான்சிஸ்க்**

**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

ஒருவன் திருமணம் முடித்தபின் அவளது அருவருக்கத்தக்க செயலைக் கண்டு அவள்மேல் அவனுக்கு விருப்பமில்லாமற் போனால், அவன் முறிவுச்சீட்டு எழுதி, அவள் கையில் கொடுத்து, அவளைத் தன்வீட்டிலிருந்து அனுப்பிவிடுகிறான். இது மோசே காலத்து வழக்கமாக இருந்திருக்கிறது. இது விதிவிலக்கு. இந்த விதிவிலக்கும் கூட முறையானதல்ல என இயேசு கூறுகிறார்.

இன்று அறிவும் அறிவியலும், கல்வியும் கலாசாரமும், மனிதமும் மனிதாபிமானமும் வளர்ச்சியின் உச்சக்கட்டத்தில் இருக்கும் காலத்தில் மணமுறிவு கேட்பது தேவைதானா? நம் அறிவு, மனிதாபிமானம், கலாசாரம், மனோதத்துவம், இறை நம்பிக்கை இவற்றையெல்லாம் கையாண்டு கணவனையோ, மனைவியையோ ஏற்றுக்கொண்டு இல்லறம் நடத்தினால் வாழ்வில் எல்லாம் நிறைவாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அளவெட்டி பாரதி அணி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனமும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களை தெரிவு செய்வதற்கான போட்டிகளின் முதற்கட்டமாக பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே உதைபந்தாட்டப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் கடந்த வாரம் நடைபெற்ற தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 21 வயதுப்பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் காலை 8.30 மணிக்கு மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிகளின் இறுதிப்போட்டியில் அளவெட்டி பாரதி அணியும் இளவாலை சென்லூட்ஸ் அணியும் மோதின. இப்போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அளவெட்டி பாரதி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (23)


# கிரிக்கெட் சுற்றுப்போட்டி

தும்பளை மேற்கு விவேகானந்தா விளையாட்டு கழகத்தால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு மாதனை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் தும்பளை மேற்கு விவேகானந்தா விளையாட்டுக்கழக தலைவர் எஸ்.பி. விவேகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி சபா ரவீந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தும்பளை மேற்கு சனசமூக நிலைய் தலைவரும் ஓய்வு நிலை அதிபருமான செ.சிதம்பரநாதன், யா/வேலாயுதம் மகா வித்தியாலய ஆசிரியர் சி.சிவகணேசன், கெருடாவில் கிழக்கு கிராமசேவகர் நடாசேகர், தென்மராட்சி பிரதேச செயலக முகாமைத்துவ,உதவியாளர் கு.சுரேந்திரராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (3)

# இந்து முன்னணி, கிறீன் பீல்டை வீழ்த்தியது ஸ்டார் ஈகிள்



மன்னார் பெரியகடை ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்படு நடத்தப்படும் 10 ஓவர்கள் கொண்ட மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

36 போட்டிகளை கொண்ட போட்டியின் 31ஆவது போட்டியானது இந்து முன்னனி அணிக்கும் ஸ்டார்ஈகிள் அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்துமுன்னனி அணியினர் 10 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களை பெற்றனர். துடுப்பாட்டத்தில் இந்துமுன்னனி அணி சார்பாக கோபால் 14 பந்துகளில் 23 ஓட்டங்களையும் தர்சன் 16 பந்துகளில் 21 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றனர். பந்து வீச்சில் ஸ்டார் ஈகிள் அணிசார்பாக அமல் 7 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் அஜித் 9 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் ஞானம் 10 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய ஸ்டார் ஈகிள் அணியினர் 8.2 ஓவர்களில் எதுவித இலக்கு இழப்பு எதுவுமின்றி 95 ஓட்டங்களை பெற்று 10 இலக்குகளால் அதிரடி வெற்றியினை பெற்றனர். துடுப்பாட்டத்தில் ஸ்டார் ஈகிள் அணிசார்பாக ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான றோய் 31 பந்து களில் 59 ஓட்டங்களையும் பிரியகாந் 19 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

32 ஆவது போட்டியானது கிறீன்பீல்ட் அணிக்கும் ஸ்டார்ஈகிள் அணிக்கும் இடையில் நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில் நாணயச் சுழற்சில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிறீன்பீல்ட் அணியினர் 10 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 100 ஓட்டங்களை பெற்றனர். துடுப்பாட்டத்தில் கிறீன்பீல்ட் அணிசார்பாக நார்தீபன் 25 பந்துகளில் 52 ஓட்டங்களையும் திலீப் 10 பந்துகளில் 21 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றனர். பந்துவீச்சில் ஸ்டார்ஈகிள் அணிசார்பாக ஞானம், அமல், பிரியகாந், அஜித் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினார்கள். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்டார்ஈகிள் அணியினர் 10வது ஓவரின் இறுதிப் பந்தில் வெற்றி இலக்கினை அடைந்தனர். துடுப்பாட்டத்தில் பிரியகாந் 20 பந்துகளில் 38 ஓட்டங்களையும் ஜோர்ச் 10 பந்துகளில் 19 ஓட்டங்களையும் அமல் ஆட்டமிழக்காது 8 பந்துகளில் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தார்கள். பந்துவீச்சில் கிறீன்பீல்ட் அணிசார்பாக றிச்சேட் 12 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் ஜக்சன் 11 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன்விழா நிகழ்வுகளையொட்டி நடைபெற்று வரும் பெரு விளையாட்டுப் போட்டிகளிலொன்றாக உதைபந்தாட்டப் போட்டி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற் றது. இதில் முதலாவது போட்டியினை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் நு.சு. ஈஸ்வரதாசன் ஆரம்பித்து வைப்பதனையும் இறுதிப் போட்டியினை இவ் உதைபந்தாட்ட நிகழ்விற்கு அனுசரணை வழங்கியபு எட்வின் (லண்டன்) ஆரம்பித்து வைப்பதனையும் படத்தில் காணலாம்.

இச் சுற்றுப்போட்டியில் மாதகல் சென்ஜோசப் வித்தியாலயம் முதலிடத்தையும் மானிப்பாய் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தினையும் ஸ்கந்தவரோயாக் கல்லூரி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன. இச் சுற்றுப் போட்டியில் 6 கோல்களை அடித்த செல்வி. அடை (மாதகல் சென்ஜோசப் வித்தியாலயம்) சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012

# இன்று இறுதி மோதலில் இலங்கை-மே.தீவுகள்



இருபது-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி இலங்கையில் நடைபெற்று வருகிறது. லீக் சுற்று முடிபில் பங்களாதேஷ், அயர்லாந்து, சிம்பாப்வே, ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் வெளியேற்றப்பட்டன.

சுப்பர் 8 சுற்று முடிபில் இந்தியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் வெளியேற்றப்பட்டன.

இதன்பின்னர் அரையிறுதி ஆட்டங்கள் தொடங்கியது. முதல் அரையிறுதியில் இலங்கை அணி 16 ஓட்டங்களால் பாகிஸ்தானைத் தோற்கடித்தது. நேற்று முன்தினம் நடந்த 2-வது அரையிறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் 74 ஓட்டங்களால் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது.

நேற்று ஓய்வு நாளாகும். இந்நிலையில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இறுதிப் போட்டி இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது. இதில் இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் மோதுகின்றன. இரு அணிகளும் முதல் முறையாக கிண்ணத்தை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது.

இலங்கை அணி 2-வது முறையாக இறுதிப் போட்டிக்கு நுழைந்துள்ளது. 2009-ம் ஆண்டு இறுதிப் போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தானிடம் 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோற்று கிண்ணத்தை இழந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் முதல் முறையாக இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. இரு அணிகளும் பலம் பொருந்தியவை என்பதால் இன்றைய இறுதிப் போட்டி பரபரப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அணி தன் சொந்த மண்ணில் விளையாடுவதால் கூடுதல் பலத்துடன் திகழ்கிறது. அந்த அணியில் அணித்தலைவர் ஜெயவர்த்தன, டில்சான், சங்கக்கார, ஜீவன் மெண்டிஸ் போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களும், மலிங்க, அஜந்த மெண்டிஸ், ஹேரத் போன்ற சிறந்த பந்துவீச்சாளர்களும் உள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியில், கிறிஸ் ஹெயில், பொலார்ட், சாமுவேல்ஸ், ரசல், பிராவோ போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களும், ராம்போல், சுனில் நரேன், பத்ரி போன்ற சிறந்த பந்துவீச்சாளர்களும் உள்ளனர்.

கிறிஸ் ஹெயில் இலங்கை பந்து வீச்சாளர்களுக்கு சிம்மசொப்பனமாகதிகழ்வார். இன்றைய இறுதிப் போட்டி இரவு 7 மணிக்கு ஆரம்பமாகிறது.

## மகளிர் இருபது-20 இறுதிப்போட்டி இன்று

இருபது-20 உலகக் கிண்ண மகளிர் கிரிக்கெட் போட்டி இலங்கையில் நடந்து வருகிறது.

இதில் நடந்த முதலாவது அரையிறுதிப் போட்டியில் நியூசிலாந்து-நடப்புச் சம்பியன் இங்கிலாந்து அணிகள் மோதின. முதலில் துடுப்பாட்டம் செய்த நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் 8 விக்கெட் இழப்புக்கு 93 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

பின்னர் ஆடிய இங்கிலாந்து அணி 17.2 ஓவர்களில் 3விக்கெட் இழப்பிற்கு 94 ஓட்டங்கள் எடுத்து அபாரவெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இதேபோல் கொழும்பு பிரேமதாச மைதானத்தில் நடந்த 2-வது அரையிறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியா-மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதின. இதில் அவுஸ்திரேலிய அணி 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்நிலையில் இறுதிப் போட்டியில் இன்று அவுஸ்திரேலிய-இங்கிலாந்து அணிகள் பிற்பகல் 2.30 மணிக்கு ஆர்.பிரேமதாச ஆடுகளத்தில் மோதவுள்ளன.

# சர்வதேசத்தை ஏமாற்றும்...

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு நிரந்திர அரசியல் தீர்வு எவ்வளவு முக்கியம் என்பதை சர்வதேச நாடுகள் நன்கறிந்துள்ளன.

நாட்டில் இடம்பெற்ற நீண்டகால யுத்தம் முடிபிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்பட்டு அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படுவதாகவும் அரசாங்கம் சர்வதேச நாடுகளை ஏமாற்றி வருகின்றது.

தமிழர்களுக்கு தேவை நிரந்தர அரசியல் தீர்வே. அதைப் பெற்றுத்தர சர்வதேசம் முன்வர வேண்டும் என யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் சபையின் துணைச் செயலாளர் நாயகமும் யு.என்.டி.பியின் பிராந்தியப் பணிப்பாளருமான அஜெய் சிப்பர் மற்றும் இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி சுபைனோ நண்டி உள்ளிட்ட குழுவினரிடம் யாழ்.மாவட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்தியக் காரியாலயத்தில் முற்பகல் 10.30 மணியளவில் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடிய போதே ஐ.நா.பிரதிநிதிகளிடம் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஐ.நா.பிரதிநிதிகளிடம் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் அபிவிருத்தி என்பது அரசாங்கம் சர்வதேச நாடுகளை ஏமாற்றுவதற்காகச் செய்யும் பம்மாத்து வேலை.

நாட்டில் யுத்தம் முடிபடைந்து விட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் வடக்கில் குறிப்பாக தமிழர் வாழும் பிரதேசங்களில் இன்னும் யுத்தம் முடிபடையவில்லை. தமிழர்களுக்குத் தேவைநிரந்தர அரசியல் தீர்வுதான். ஆனால் அரசாங்கம் அபிவிருத்தி செய்கின்றோம் எனக் கூறி சர்வதேசத்தை தொடர்ந்து ஏமாற்றி வருகின்றது.

வடக்கில் இடம்பெற்று வரும் அபிவிருத்திப் பணிகள் திருப்திகரமாக இல்லை. மேலும் மீள்குடியேற்றம் என்ற பெயரில் ஒரு இடத்தில் இருந்த முகாமை அகற்றி இன்னொரு இடத்தில் போட்டுள்ளது அரசாங்கம். வவுனியா மெனிக்பாம் முகாமை அரசாங்கம் மூடியதற்கு ஐ.நா வரவேற்று அறிக்கை விட்டது. ஆனால் மெனிக்பாம் முகாம் மூடப்பட்டு விட்டது.

முல்லைத்தீவில் கேப்பாபிலவு மக்களை வைத்து சீனியா மோட்டை மற்றும் சூரியபுரம் காட்டுப்பகுதியில் புதிய முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளதை ஐ.நா எதிர்க்காதது ஏன்? இதுவா மீள்குடியேற்றம். அந்த மக்களுக்கான அடிப்படைவசதிகள் கூட செய்து கொடுக்கப்படவில்லை.

மேலும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்க மறுத்ததோடு 100 பக்கங்கள் கொண்ட அறிக்கை ஒன்றினை விடுத்து நிராகரித்தது.

நாமும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையினை நிராகரிக்கின்றோம். ஆனாலும் அதில் கூறப்பட்ட பரிந்துரைகளைக்கூட இந்த அரசாங்கம் நடைமுறைப்படுத்த வில்லை.

எனவே சர்வதேச நாடுகள் தமிழர்களுக்கான அரசியல் தீர்வினை பெற்றுத்தர இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இல்லையேல் மீண்டும் தமிழர்கள் போராட வேண்டிய நிலை ஏற்படும். அது எவ்வகையான போராட்டம் என்பதையும் சர்வதேசமே தீர்மானிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் விரக்தி அடைந்துள்ளனர். அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். யுத்தம் முடிபடைந்து விட்டது ஆனாலும் ஆள்கடத்தல்களும் மனித உரிமைகளுக்கு எதிரான செயற்பாடுகளும் வடக்கில் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டு தான் உள்ளது.

எனவே அபிவிருத்தி மட்டும் தமிழ் மக்களுக்கு தீர்வாகாது என்பதை சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும். நிரந்தர அரசியல் தீர்வுதான் தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுத்தரும் என சிவில் சமூக பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அத்தோடு இந்த சந்திப்பில் கலந்து கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர் நாயகம் ரி. ஆனந்தராஜா ஐ.நா.குழுவினரிடம் வேண்டுகோள் ஒன்றினையும் விடுத்தார்.

அதாவது நாட்டில் உள்ள சகல மாவட்டங்களிலும் மனிதவுரிமைக் காரியாலயங்களை ஸ்தாபிக்க உதவ வேண்டும். இதன் ஊடாக மனித உரிமை செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என தெரிவித்தார்.

அத்தோடு சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் செயலாளர் எஸ்.பரமநாதன் யாழ்.பல்கலைக்கழகத்தில் மனிதவுரிமைகள் தொடர்பான பட்டப்படிப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

வேண்டுகோள்கள் தொடர்பாக ஐ.நா. சபையில் தெரிவிப்பதற்காகவும் மெனிக்பாம் முகாம் மூடப்பட்டது தொடர்பாக ஐ.நா. விடுத்த அறிக்கையினை வாபஸ் பெறுவதாகவும் துணைச் செயலர் சிவில் சமூகப்பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

ஐ.நா. குழுவினருடனான சந்திப்பின் போது யாழ்.சிவில் சமூகப் பிரதிநிதிகளாக ஜனாதிபதியின் சட்டத்தரணியும் யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தலைவருமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவின் செயலாளர் பரமநாதன், யாழ்.போதனா வைத்திய சாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர். (எ-6)

# டெங்கு நோயினால்...

பரவலிற்கு முறையற்ற கழிவகற்றலே காரணம் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இவ் எட்டு பேரில் 5 பேருக்கு டெங்கு நோய்த் தொற்று இருப்பதாக வைத்திய சோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் ஏனைய மூவருக்கும் வைத்திய பரிசோதனைகள் இடம்பெற்றுக் கொண்டு இருப்பதாகவும் வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை உயிரிழந்த மாணவன் காய்ச்சல் காரணமாக கடந்த 4-ம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதாகவும் இந்நிலையில் நேற்றுமாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் வைத் திய சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-4,8)

# ஐ.நாவின் துணை...

பின்னர் பலாலியில் யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய இந்தக்குழுவினர் முற்பகல் 10.30 மணியளவில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் காரியாலயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் ரி.ஆனந்தராஜா உள்ளிட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் யாழ்.சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடினர்.

பின்பு யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை மாவட்டச் செயலகத்தில் நண்பகல் 12 மணி தொடக்கம் ஒரு மணி வரை சந்தித்துக் கலந்துரையாடிய ஐ.நா குழுவினர், பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள யு.என்.டி.பியின் அலுவலகத்தில் யாழ்.பிராந்திய யு.என்.டி.பியின் அதிகாரிகளுடன் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அத்தோடு குடாநாட்டில் பல பகுதிகளுக்கும் இந்தக்குழுவினர் நேற்று விஜயத்தை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# இராணுவத்தினர் பொய்...

கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்வதற்கு அன்றைய தினமே சென்றிருந்தனர்.

எனினும் முறைப்பாட்டினைப் பதிவு செய்ய மறுத்த பொலிஸார் அதற்கு யாழ்.அரச அதிபரின் அனுமதியுடனேயே இராணுவம் காணியினைக் கைப்பற்றியுள்ளதாககாரணமும் கூறினர்.

இராணுவத்திற்கு காணி வழங்கியதனை யாழ்.அரச அதிபர் மறுத்தால் முறைப்பாடு செய்ய முடியும் என கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் குறித்த காணி சுவீகரிப்பு தொடர்பில் நேற்றைய தினம் நல்லூர் பிரதேச சபையினர் அரச அதிபருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்த நிலையில் தன்னால் யாருக்கும் காணி வழங்க முடியாது என்றும் அந்த அதிகாரம் தனக்கு இல்லை என்றும் இராணுவத்தினர் கூறுவது பொய் எனவும் அரச அதிபர் மறுத்திருந்தார்.

இதன்பின்னர் நேற்று காலை 9.15 மணியளவில் முறைப்பாடு செய்வதற்காக கோப்பாய் பொலிஸ் நிலையம் சென்ற தவிசாளர் உட்பட பிரதேசசபை உறுப்பினர்கள் நீண்ட நேரம் காத்திருந்தும் அங்கு இராணுவத்தினர் எவரும் வரவில்லை.

இது தொடர்பில் ஊரெழு படை முகாம் அதிகாரிக்கு பொலிஸார் தெரிவித்த போதும் நேற்று மாலை வரை எவரும் பொலிஸ் நிலையத்திற்கு வரவில்லை.

இராணுவத்தினரிடம் போதிய ஆவணங்கள் இல்லாமையால்தான் சட்டப்படி அணுகுவதற்கு அவர்கள் பின்னடிக்கின்றனர் என்றும் இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்ட வல்லுனர்களிடம் கலந்துரையாடி நீதிமன்றில் வழக்குத் தொடர்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இராணுவத்தினரின் இவ் அடாவடித்தனமான செயலுக்கு எதிராக மக்களினைத் திரட்டி ஆர்ப்பாட்டம் செய்வதே சிறந்த வழி என நல்லூர் பிரதேசசபையின் உறுப்பினர்கள் தெரிவித்தனர். (எ-4)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதி மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலில் யாழ்.மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்

திரு அங்கஜன் இராமநாதன்

அவர்கள் யாழ்.மாவட்டத்தில் உள்ள இளைஞர்,யுவதிகளின் வேலையில்லா பிரச்சினையினை தீர்க்கும் முகமாக 14.09.2012 அன்று எமக்கான அரச நியமனத்தினை பெற்றுத் தந்தமைக்காக எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது சேவை தொடரவும் வாழ்த்துகின்றோம்.

சேவைய உதவியாளர்
நியமனம் பெற்றோர்

(591)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாலய திறப்பு விழாவுக்கு பொலிஸார் தடை

(யாழ்ப்பாணம்)

ஏழாலை குப்பிளானில் கட்டப்பட்ட தேவாலயத்தை திறப்பதற்கு சுன்னாகம் பொலிஸார் நேற்று தற்காலிக தடை விதித்துள்ளனர்.

பிரதேச செயலகத்தின் சமய செயற்பாடுகளுக்கான அனுமதி இன்றி கட்டப்பட்ட இந்த கிறிஸ்தவ தேவாலயத்தை அகற்றுமாறு வலியுறுத்தி நேற்றும் நேற்று முன்தினமும் குப்பிளான் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் இக்கட்டிடத்தை திறப்பதற்காக சிலர் முயற்சி எடுத்துக் கொண்டிருந்தவேளை அங்கு சென்ற சுன்னாகம் பொலிஸார் மக்களின் அமைதிக் கு பங்கம் விளைவிக்கும் வகையில் இத்திறப்பு விழா நடைபெறுவதால் அதனை நடத்த வேண்டாம் எனக் கோரி தற்காலிகமாக தடுத்து வைத்துள்ளனர். (எ-8,6)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இடுகாட்டு வீதியில் உள்ள 12-ம், 14-ம் இலக்க (பண்ணை, பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்பாக) காணித்துண்டுகள் இரண்டு விற்பனைக்கு உண்டு.

(1) 12ம் இலக்க காணி: ஒரு பரப்பு 15.65 குளி

2) 14ம் இலக்க காணி: இரண்டு பரப்பு 5.72 குளி

தொடர்பு: 021 222 1774

நேரம்: பி.ப.4.00-6.00 மணிவரை

வண். ஸ்ரீவிஸ்வலிங்க மகா கணபதி கோவில்
655, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

செயலாளர்
தர்மகர்த்தா சபையினர்

(585)



## Finance Excel



பல்கலைக்கழக மாணவர்கள், CIMA, HNDA, Sri lankan Charted, AAT பயிலும் மாணவர்களுக்குமானது.

நீங்கள் கற்ற விடயங்களை எவ்வாறு இலகுவாக Microsoft excel இன் மூலம் அலுவலகங்களில் பயன்படுத்தி தகவலினை analyse பண்ணுவது....

உள்ளடக்கம்

1. Time value of money (PV, FV, Annuties, Interest Rate, etc...)
2. Decision making tools (NPV, IRR, Break even point, payback period, etc, What if analysis,etc)
3. Central Tendency (Mean, Median, Mode, Range,etc.)
4. Dispersion: Variance, Standard Deviation, Normal distributions, etc
5. Link with access, SQL

(588)

## Student Support Center

பருத்தித்துறை வீதி, செங்குந்தா கட்டட தொகுதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்

077 61 69 470

சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்றும் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு நேர வகுப்புக்கள்



## RATHNAAM - PHARMACY

சங்கரத்தைச் சந்தி அருகாமை, வட்டுக்கோட்டை

டாக்டர். த.வீரசுதன் V.P. (பொது வைத்திய நிபுணர்)

செவ்வாய், வியாழன், வெள்ளி பிற்பகல் 4.30 மணி

டாக்டர். ஞா.பவானி V.O.G (பெண் வைத்திய நிபுணர்)

ஞாயிறு முற்பகல் 10.00 மணி

(584)

### பொது வைத்திய சேவை

சனி, ஞாயிறு மாலை 3.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை

திங்கள்,புதன் மாலை 4.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை

M.B.B.S வைத்திய நிபுணர்கள் பார்வையிடுவர்

தினமும் இரத்தப்பரிசோதனை நடைபெறும்.

தொடர்பு: 0773726685

சகல மருந்து வகைகளும் கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



## ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna

Learn French The French Way

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட ,சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய "Alliance Francaise de Jaffna" ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ்சு பேசப்படும் நாடுகளுக்குச் செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.....

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61,Kachcheri- Nallur Road,Jaffna. Phone- 021 222 8093

E-mail: alliancejaffna@yahoo.com

(றக்கா வீதியும் கச்சேரி- நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம் )

(573)


## மேலும் 32...

தற்போது 779 முன்னாள் போராளிகள் மாத்திரமே புனர்வாழ்வு மத்திய நிலையங்களில் இருப்பதாகவும் அவர்களில் 32 பேரே விடுவிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் 10 ஆயிரத்து 979 முன்னாள் போராளிகள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

விடுவிக்கப்பட்டவர்களுக்கு சுயதொழில் செய்யவென கடன் உதவிகள் வழங்கப்பட்டுவருவதாகவும் அவர் கூறியுள்ளார். (எ-11)

## கேப்பாபிலவு...

வவுனியா வர்த்தகர்கள் மற்றும் புலம்பெயர் மக்களின் உதவியுடன் இந்த நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தனும் இந்த நிவாரண விநியோக நிகழ்வில் கலந்து கொண்டார்.

சீனியாமோட்டையில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு அவர்களின் சொந்த காணிகள் மீளவும் கிடைக்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என்று இங்கு பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறினார்.

சீனியாமோட்டையில் குடியேற்றப்பட்டுள்ள மக்கள் இராணுவத்தின் காவல் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தபோதிலும், அங்கு சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இராணுவத்தினர் தடைகளை ஏற்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-8)

## அஸி செல்ல...

அகதிக் கோரிக்கையாளர்கள் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாகவும் வாழ்வுக்கு பொருத்தமற்ற நாடாக இலங்கை திகழ்வதாகவும் காண்பிக்க சில தரப்பினர் முயற்சித்து வருவதாக கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். (எ-8)

## அமைச்சர் டக்ளஸ்...

தொடர்பாக வீடியோ உரையின் மூலம் விசாரணைக்கு ஆஜராக தயார் என்றும் டக்ளஸ் கூறியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை வரும் 12 ஆம் திகதி தொடங்கும் என்று 4ஆவது கூடு தல் செசன்ஸ் கோர்ட் நீதிபதி ராஜகோபாலன் தெரிவித்தார்.

தமிழ் நாட்டுக்கு வந்தால் தனது உயிருக்கு விடுதலைப்புலிகளால் ஆபத்து இருப்பதாகவும் தனது வருகையின்போது சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்றும் இதன் காரணமாகவே நீதிமன்றில் நேரில் ஆஜராவதைதவிர்த்துவருவதாகவும்டக்ளஸ்தேவானந்தாகூறியுள்ளார். (எ-8)


Great Opportunity to Learn advanced Spoken English From a Panel of highly Qualified, Experienced and Native Level Lecturers

## BUSINESS COMMUNICATION & SPOKEN ENGLISH

Workroom based practical English in a fully-fledged English environment

TARGET GROUPS

Officers,Graduates & Undergraduates, Job Seekers,School Leavers and Others



Duration :- 72 Hrs

Flexible Time

Registration now Open

HotLine:- 0777 444 225

One Campus for English Plus..........

(C-1236)

liSEEES NALLUR CAMPUS

Your path finder

762, Point Petro Road, Nallur, Jaffna

Tel : 021 2224728, Email: info@liseees.lk



*CIMA-UK
*BIT-Colombo University
*Software Development
*Computer Engineer-USA

win 10,000/= for




T20 உலகக் கோப்பையை வெல்லப்போவது யார்?

உங்கள் விடையினை- <Name><answer>0772395895

இன்று 7pm க்கு முதல் SMS செய்யவும்.

MCS ITCAMPUS

324, Palaly Road, Jaffna.



# YOGIS



Academy of Beauty Culture, Hair Dressing & Home Science



## EXHIBITION

Cake and Sugar Craft Sponsored By Pettah Essence Suppliers

கேக் கண்காட்சி 11.10.2012 முதல்

திருமண அலங்கார கேக் வகைகள், பிறந்தநாள் கேக் வகைகள், ஐசிங் பூக்களின் அலங்காரங்கள் இன்னும் வித்தியாசமான கேக்களின் அலங்கார கண்காட்சி 11ம் திகதி வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு ஆரம்பமாகி 12ம்,13ம்,14ம்,15ம் திகதி வரை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும்.

நடைபெறும் இடம் :- 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயம் முன்பாக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.